2. இரண வெழுச்சி, inflammation of the sclerotica causing bulging and thinnig of the sclerotic — Scleritis.

3. குவை யெழுச்சி, bulging out of the sclera — Sclerectasia.

4. நீர் எழுச்சி, small elevations or growths due to the accumulation of morbid fluid.

5. உந் தெழுச்சி, a globular enlargement and protrusion of the cornea — Keratoglobus.

NOTE: Some authors hold that they are the different names given in consideration of the varied size of the tubercles formed on the selerotic of the eye.

எழுச்சிக் கண்ணோய், கண்ணில் கூச்ச முண்டாகும் நோய், இதனால் வெளிச் சத்தைப் பார்க்க முடியாது, an eye-disease accompanied by inflammation of the eyes and intolerance of light — Photophobia.

எழுச்சிக் கொடி, ஓர் வெள் விழி நோய், இதனால் கண்ணில் கொடியைப் போற் சிவந்த வரிகள் படர்ந்திருக்கும், an inflammation affecting the white of the eye. It is marked by red streaks like a creeper — Pterigium; 2. கட்டுக் கொடி, a kind of bindweed — Similax pseudo china.

எழுச்சி நோய், அழற்சியினால் காதில் ஏற்படும் நோய், inflammation of the ear — Otitis (Meatus auditorius).

எழுச்சியிலை, கண்ணோய்க் குபயோகிக்கு மோர் பச்சிலை, a green herb used in cases of sclerophthalmia.

எழு ஞாயிறு, ஓர் வகை வாதத் தலை வலி, இது சூரியோதயத்தோடு ஆரம்பித்து வெயில் ஏற ஏற அதிகரித்துப் பிறகு சாயுங் காலத்தில் குறைந்து சாந்த மடையும். இது, வாயுவானது பித்தத்திற் கூடிக் கண், புருவம், நெற்றி இவைகளை அனுசரிக்கும் போது உண்டாகும். இதற்கு மாறாக இரசக் காலத்தில் உண்டாகுமானால் அது 'படுஞாயிறு' என்று கொள்ளப்படும். a kind of head-ache beginning with the rising sun, increasing towards midday and gradully settling down but continuing till sunset. It is said to be due to the concerted action of Vayu and bile extending to the region of the eyes, the fore-head

and the eyebrows. It is opposed to 'Padunayaru' the one experienced in the night-time.

எழு தினக் காய்ச்சல், வாரக் காய்ச்சல் அதாவது ஏழு நாள் வரையில் அடிக்கும் சுரம், fever continued for a week — Seven day fever; 2. ஏழு நாள் வரை அடிக்கும் காமாலைச் சுரம், இது அசாத்தியம், a fever.

எழுதுகல், மாக்கல், a grey soft stone used for making domestic utensils — Pot - stone.

எழுதுநாணல், சிவி மைதொட்டெழுதுவதற்கு உபயோகப்படுத்தப்படும் ஓர் வகை நாணல். இது 6 — 10 அடி உயரமிருக்கும். இதன் வேரைப் பிரசவமான அறையிலிட்டுக் கொளுத்துவதுண்டு. அன்றியும் அவ்வேரைக் கொளுத்தி தீச்சுட்ட புண்களுக்குப் புகை காட்டுவதுண்டு. அப்புகைக்குச் சிறந்த குணமுண்டெனக் கருதப்படும். இதற்கு 'முஞ்சி' என்றும் பெயர். Pen - grass or pen reed grass — Saccharum arundinaceum alias S.Sara. It is a kind of reed 6-16 ft. high and smooth and erect. The root of this grass is burnt in lying in rooms as a disinfectant and is also used in fumigation for burns and scalds with beneficial results.

எழுத்தடைத்தல், மந்திர வெழுத்துக்களைச் சக்கரத்தின் அறைக்குள் கிரமமாகப் பொருந்தும்படி எழுதுதல், enclosing or filling in the diagrams with sacred letters in the appropriate places and in appropriate order as per instructions laid down in Magic.

எழுத் தாணி, see எழுத்தாணிக் கூர்.

எழுத்தாணிக்கூர், ஓர் பச்சிலை, style plant — Launea nudicaulis alias L. pinnati fida.

எழுத்தாணிப் பச்சிலை, see எழுத்தாணிக் கூர்.

எழுத்தாணிப் பச்சை, எழுத்தாணிப் பூடு, a plant with flowers shooting up in the shape of a style — Microrhyneus sarmontosus alias Prenanthes sarmentosa; 2. முத்திருக்கஞ் செவி, which see; 3. வரையாதளை அல்லது மலை யாதளைப் பூடு, a plant of Jatropha genus.

எழுத்தாணிப் பூண்டு, எழுத்தாணியைப் போன்ற பூக்களையுடைய வோர் வகைச் செடி. இதற்கு எழுத்தாணிக் கூர், எழுத்தாணிப் பச்சிலை, எழுத்தாணிப் பச்சை, கடற்கொழுப்பை யென்ற பல பெயர்களுண்டு, அடித் தண்டு கிளைகள் வாய்ந்தது; வேர்கள் ஆங்காங்கு முளைத்தும், இலைகளடர்த்தியாயு முண்டு, காம்புகள் தனித்தும், இலையை விடக் குட்டையாயு முண்டு. பூக்கள் மஞ்சள் நிறம், இது மணற் பாங்கு நிலங்களில் முளைக்கும். இச் செடி தரையோடு படர்ந்தும், நான்கு பக்கமு மோடியுமிருக்கும். இதன் சாற்றைப் புங் கெண்ணெயுடன் கலந்து வாத நோய்களுக்கு மேலே பூச வுதவும். குழந்தைகளுக்கு மிச்சாற்றை வியர்வை யுண்டாக்குவதற்காக உபயோகப்படுத்துவதுண்டு. style plant — Launea pinnatifida alias Lactuca sarmentosa alias Microrhynchus sarmentosus alias Prenanthes sarmentosa. It is so called from the appearance of its flowers, shooting up in the form of a style. It bears several names in Tamil as mentioned above. It is also known as Sarment lettuce, flagelliform, leaf style gree, see flourisher etc. Stems twiggy and filiform; here and there bearing roots; leaves close together; peduncles one-headed, some-what shorter than the leaf; bearing yellow flowers; grown in sandy places. It is a widely diffused humble plant with long flagelliform runners.

Juice mixed with pungam-seed oil is used externally for rheumatism and nerve affections; the juice is also used as a sudorific for children.

எழுத்தாணி முனை, காதெலும்பின் ஓர் பிரிவாகிய பாரையென்புக் கடியில் இருக்கும் எழுத்தாணியைப் போல் கூர்மையான எலும்பின் முனை, a long spine extending downward from the petrous portion of the region of the ear, i.e., the lower surface of the temporal bone — Styloid proces. It is so called from its resemblance to a style.

எழுத்தாதகம், அரளி, oleander — Nerium odorum.

எழுத் தாதியத் தகடு, (எழுத்தாதி + யதகடு = அ + ய + தகடு) அயத் தகடு, a plate or a sheet of iron.

எழுநா, நெருப்பு, fire; 2. கொடு வேலி, lead wort — Plumbago Zeylanica.

எழு நா மித்திரன், காற்று அதாவது நெருப்புக்கு மித்திரன், wind as an associate of or as one helping fire.

எழு நாயகம், கட்டி, சிலந்தி முதலியவைகளைப் பழுக்கச் செய்யும் ஓர் சிறந்த மூலிகை அல்லது மருந்து, any medicine or drug capable of maturing boils, ulcers etc. c.f. இரண நாயகம்.

எழு நாயிறு, சூரிய உதய காலத்திற் தொடங்கி வெயில் ஏற ஏற வலி அதிகரித்தும், சூரியன் இறங்கும் பொழுது சாந்தமு மடையுமோர் வகைத் தலைவலி, head-ache in which pain is increased with the sunrise and subside with the sunset. It is opposed to படு ஞாயிறு, see எழு ஞாயிறு.

எழு நீரலரி, அடுக் கலரி, which see.

எழுந்திருத்தல், எழுந்திருத்தல் அல்லது எழும்புதல், rising up as from bed or as from a seat; 2. நோயினின்று எழுதல், rising from sick-bed; to restore from sickness.

எழு பிறப்பு இதுவே சப்த சாதி அல்லது சப்த சன்மம் எனவும் கொள்ளலாம். அதாவது உலகச் சிருஷ்டியிலேற் பட்ட எழுவகைப் பிறப்புகள், அவைகளாவன — the seven kinds of births or the seven in existence in the creation of the world and they are:— 1. தேவர், gods or supernals; 2. மனிதர், mankind; 3. விலங்கு, beasts; 4. பறவை, birds; 5. ஊர்வன, reptiles; 6. நீர் வாழ்வன, sub-aqueous, creatures; 7.தாவரம், inanimate things such as plants etc.

NOTE: The idea of seven births is a common one among Hindus. There is also a stanza from Kural:

''எழு பிறப்புந் தீயவை தீண்டாப் பழிப் பிறங்காப் பண்புடை மக்கட் பெறின்.''

and another form Chintamani.

''எழு பிறப்பிலுங் கடையாம் இவன் பிறப்பே''

எழு பிறப்புக் கல், பிரம கற்பக் கல் அல்லது அண்டக் கல், இதன் எழு வகைப் பிறப்பின் விவரங்களை நோக்குங்கால், இக்கல் முதலில் ஆகாயத்தி லொளியாயிருந்து, பிறகு பூமியை யடைந்து மண்ணிற்குட் தங்கி, ஏழு தரம் மாறுதலை யடைந்ததாகக் கொள்ளப்படும்.

1. ஆதியிலே ஒளியு மாச்சு.
2. மறு பிறப்பு நீல மாச்சு,
3. பூமியிலே சிவப்பு மாச்சு.
4. காங்கை கொண்டு மறு பிறப்பு வெள்ளை யாச்சு,
5. துள்ளியது பின் பிறப்பு மஞ்சளாச்சு,
6. அதன் பின்பு தோகை மயில் நிறம தாச்சு.
7. (ஈறாக) உயிர்க் கோழி முட்டை நிறம் படிக மாச்சு.

இதைச் சிலர் சுக்கான் கல், அதாவது கற் சுண்ணாம்புக்குப் பரிபாஷையாகக் கூறப்பட்ட தெனவும் கருதுவர்,a mineral stone of a definite chemical composition, found inside the earth. It is supposed to have undergone changes seven times viz. originally being a spark which afterwards turned into a blue substance, then into red, then into yellow, then into white and subsequently into green and lastly into a grey substance as enumerated above. It is believed to be a scientific names for an ordinary lime-stone dug out from quarries. Whatever it may be, true it plays an important role in the Tamil Medical Science.

எழு பொருப்புக் கல், மஞ்சட் கல், a kind of yellow stone?

எழு போது, தூங்கி யெழும் நேரம் அதாவது காலை வேளை, the time of rising from bed or the morning time.

எழுப்பம், எழுச்சி, rising as a boil does; 2. **வளர்ச்சி,** growth as in a tumour or swelling.

எழுப்பல், எழுப்புதல், rousing or awakening from sleep; the act of awakening.

எழுப்புதல், see **எழுப்பல்.**

எழுமான், கள்ளி முளையான், spurg-sprout, also called wild ginger of the Caralluma genus — Boucerosia umbellata.

NOTE: The best species known is Callaruma adscendens. It is a curious looking fleshy lant with angular stem used in pickles and chutneys.

எழுமான் புலி, ஓர் பூண்டு, a plant — Stapelia corymbosa; 2. **கள்ளி முளையான்,** see **எழுமான்.**

எழு முகனை, முளை யெழுமிடம், the exact place wherefrom anything sprouts; 2. **கட்டியின் முனை,** the point of an abscess. See **எழுவாய்.**

எழு முறை சுத்தி, மருந்தை ஏழு தரம் சுத்தி செய்தல், the process of cleansing or purifying a medicine seven times as required in cases of certain minerals or poisonous drugs.

எழு முள்ளுக் கொடி, ஓர் முட் கொடி, axil spined mulberry — Plecospermum spinosum.

எழும்பல், ஆண் குறி யெழுச்சி, the erectile power in males.

எழும்பு நேரம், காலை வேளை, morning time; 2. **ஆடெடும்பு நேரம்,** morning 10' clock.

எழு லோகம், பஞ்ச லோகம், வெண் கலம், தரா ஆக ஏழு வகை உலோகம், the seven metals viz— the five ordinary metals such as gold, silver, copper, iron and lead, together with the two mixed metals viz — bronze or bell-metal (a mixture of copper and tin) and tarah (a mixture of copper and Zinc).

எழு வகைத் தாது, உடம்பினி லுள்ள எழு வகைத் தாதுக்கள், அவையாவன: இரத்தம், எலும்பு, சுக்கிலம், தசை, தோல், மூளை, இரசம், the seven fundamental principles of the organisms in the human body, viz — blood, bone, semen, flesh, skin, marrow and chyle or lymph.

See also *சப்த தாது.*

எழு வகைத் தோற்றம், சராசரமாகிய எழு வகை உற்பத்தி, (In Theology) the evolution of things from their primitive elemetns as animate and inanimate, which are classified under seven heads, It is opposed to **ஒழுக்கம்,** involution.

எழு வகைப் பால், தில்லைப் பால், எருக்கம் பால், கள்ளிப் பால், மாங்காய்ப் பால், கப்பட்டிப் பால், குண்டலிப் பால், the seven kinds of milky juices or saps obtained from their respective trees viz. Tiger's milk, Madar milk, Spurga milk, etc.

எழுவரைக் கூடி, சவ்வீர பாஷாணம், perchloride of Mercury — Corrosive sublimate.

எழு வாகை, பெரு வாகை, sirissa tree or sultani's tree — Albizzia lebbek.

எழு வாய், கட்டியின் முகம், the point of an abscess; 2. கிளம்பு மிடம், the place where from anything rises; 3. சீழ் எழுமிடம் the place from which the pus of an abscess approaches the surface.

எழு வாரி, மஞ்சட் கல், see எழு பொருப்புக் கல்.

எளிமை, தளர்வு, weakness.

எள், எள்ளு, எங்கும் பயிராகக் கூடிய வோர் சிறிய செடி, உயரம் 2 — 3 அடி. இதன் பூவின் புறவிதழ், ஐந்து பிரிவினை யுடையது. உள்ளிதழ் குழாவைப் போலிருக்கும். விதைக் கூடு நான்கு அறையுள்ளது. இதில் பல விதைகள் இருக்கும்.

இது கீழ் சமுத்திரத் தீவுகளாகிய ஜாவா, போர்னியூ முதலிய விடங்களில் காடுகளில் இயற்கை யாகவே விளையும். இதனின்று எடுக்கும் எண்ணெய்க்குத்தான் நல் லெண்ணெய் என்று பெயர். விதை கருப்பு, சிவப்பு, வெள்ளை யென மூன்று விதம், கருப்பெள்ளு மருந்து, உணவு முதலியவைகளுக்குப் பொருத்தமானது. சிகப் பெள்ளு மட்டச் சரக்கு. இது கடைகளில் விற்கப்படும்.

இவ்விதை சத்துள்ளதும், பலத்தைத் தருவதுமானது. நீரைப் போக்கும் குணமும், பால் சுரக்குந் தன்மையு மமைந்தது. இதைப் பெண்கள் மிகுதியாக உட்கொள்ளில் கருவை யழிக்கும். இலைகளைக் கஷாயமாக வைத்துத் தலைமயிரைக் கசக்க வுபயோகப்படுத்துவ துண்டு, அன்றியும் இலைகளை அரைத்து வெண்ணெயிற் குழைத்து, இரத்த மூலத்திற்குக் கொடுப்ப துண்டு.

இரணம், புண் இவைகளை ஆற்றுவதில் இவ் வெண்ணெயின் மருந்துக் குணம் மேனாட்டு ஒலிவை யெண்ணெய்க்குச் சமமாகு மெனலாம். இலைகளுக்குப் பிசுபிசுப்புத் தன்மை அதிகமாக வுள்ளதால், சதையின் அழற்சியைப் போக்கி மிருது வாக்கும் படிக் கட்டும் மருந்தாகவும் உபயோகப்படும். எள்ளுடன் வெல்ல மிட்டுப் பலகாரமாகவும் கொள்ளலாம். உணவுக்குத் துவையலாகவும் செய்து கொள்ளலாம். இதை வாத நோய்களுக்குப் பூச்சு மருந்தாகப் பிரயோகிக்கலாம். சூதகச் சிக்கல் உள்ளவர்களை எள்ளை வென்னீரில் போட்டு அதில் உட்கார்ந்திருக்கும்படிச் செய்யக் குணமுண்டாகும். இலையின் கஷாயம் சதையின் அழற்சியைப் போக்கும். மூலத்திற்கும், மலச் சிக்கலுக்கும் உபயோகப்படும். இலைகளைக் குடல் நோய்களுக்கும், சீத பேதிக்கும் அரைத்துக் கொடுக்கக் குணமாகும். வேருக்கு மயிரைக் கருப்பாக்குங் குணமுண்டு. இது அடியிற் கண்ட படிப் பலவகைப்படும், oil plant — Sesamum, indicum alias S.orientale. It is a small plant cultivated to a great extent in every part of our country. It is 2 — 3 ft. high; calyx five-parted; corolla with a short tube; flowers solitary; capsule four-celled; seeds numerous. In Java, Borneo and other islands, it will be found naturally grown in forests. The oil extracted from the seeds is called 'good oil' as it is one of the most valuable of vegetable oils produced in India. The seeds consist of three varieties black, red and white. The black-seed which is the first-sort is the best suited for medicine and ordinary consumption; the red variety is inferior and the white seeds are not so common as the other ones. The seeds are nourishing tonic, diuretic, lactifuge and if taken by women, especially, when pregnent, in a large quantity, it will cause abortion. A lotion made from the leaves is a hair-wash. The leaves are ground to a paste with water and given in butter for bleeding piles.

The oil is equal to oilve oil for medicinal purposes, especially for wounds and ulcers. The leaves abound in thick viscid mucilage and so serve for emollient poultices.

The seeds are pounded and mixed with jaggery and made into sweet cakes; they are ground into a chutney to season rice with; they are externally used in cases of rheumatism.

In amenorrhoea, the employment of a warm sitz-bath containing a handful of the seeds, is an eficient mode of treatment. An infusion of the leaves is much used in all affections requiring demulcents (soothing application). The seeds are laxatives and specially useful in piles and constipation. The leaves are also useful in bowel affections and in dysentery. The root is supposed to blacken the hair. The seed consists of different kinds as mentioned below:

449/17—108a

1. காரெள், black gingelly — Sessamum indicum.

2. சிகப்பெள், red gingelly or bastard gingelly.

3. வெள்ளெள், white gingelly.

4. காட்டெள், wild gingelly — Sessamum prostratum.

5. மயிலெள், peacock gingelly — Vitex alata.

6. பேயெள், bitter gingelly.

7. காட்டு மயிலெள், wild peacock gingelly - Vitex altissima. See காட்டு மயில் மரம்.

8. மலையெள், hill gingelly — Guzotia abyssinica alias G. oleifera.

9. சிற்றெள், a smaller variety.

NOTE: Nos.5 , 7 and 8 are not varieties of one gingelly plant although they are called so perhaps from similarity. They belong to different botanical groups.

எள் நெய், எண்ணெய் அல்லது நல்லெண்ணெய். எள்ளிலிருந்து வடித்த யெண்ணெய், இது எல்லா எண்ணெய்களையும் விடச் சிறந்தது. இது சீக்கிரத்தில் கெடாது. தென் தேசத்தில், இது தேய்த்து முழுகுவதற்கும், உணவுப் பண்டங்களில் சேர்ப்பதற்கும், பலகாரம் முதலியவை சுடுவதற்கும் பிரயோசனப் படும். உடம்பிற்கு வலிவைத் தரும்.

இது கபாலச் சூடு, காது வலி, சொறி சிரங்கு, புண் முதலியவைகளை ஆற்றுந் தன்மை யுள்ளது. பெண்களுக்குக் கொடுக்கச் சூதக வலி, சூத வாயு முதலியவைகளைக் கண்டிக்கும். இதனின்று சோப் செய்யப்படும். மேனாட்டார் இதை ஒலிவை எண்ணெய்க்குப் பதிலாக வுபயோகிப்பார்கள். வாசனைப் பூக்களாகிய மல்லிகை, ரோஜா, முல்லை, சம்பங்கி முதலியவைகளி ன்று வாசனை யிறக்க, இந்த யெண்ணெயை உபயோகிப்பார்கள். தமிழ் வைத்தியத்தில் எல்லா வித மருந் தைலத்திலும், தெண்ணெயிலும் இவ் வெண்ணெய் சேரும். காசத்திற்கும் பத்தியத்திற்கும் முதவாது, sesamum oil or rape-seed oil. Til oil or gingelly oil. The oil is expressed from the

sesamum seeds and is superior to all Indian vegetable oils. It will keep for many years without becoming rancid in smell or taste.

In S.India, it is freely used in cooking, for anointing the body with and also in making soaps and sweet cakes. It is a nourishing tonic and is used with great advantage for subsiding the heat of the brain, for relieving pain in the ear, for curing itches and for dressing wounds, ulcers and other injuries. It can be safely used in uterus complaints and it is a powerful emmenagogue (agent for exciting menstruation). It is largely used in commerce in making soaps.

In Europe, it is substituted fro olive oil and is also used for medicinal purposes. It is also perfumed with jasmine rose, camomile, champaca etc., by keeping the flowers soaked in it and exposed to the sun for forty days. In Tamil Medicine, it is freely used in all preparations of medicated oils used internally and also externally. Its use is prohibited in food for patients sufering from asthma and other affections of the lungs, and its use is generally restricted in diet by Veidyans.

எள் பிரமாணம், see எட் பிரமாணம்.

எள் மூக்கத்தனை, எள் மூக்களவு, as much as the point of a gingelly seed. It is a term used in medicine to indicate as extremely small quantity. It appears to be a standard measure in guiding Veidyans in prescribing Baspams (metallic oxides), Sendurams (metallic red-oxides) and poisons such as arsenic, etc.

எள்மூக் களவு, see எள் மூக்கத்தனை.

எள் எிடை, see எள் பிரமாணம்.

எள் எிளங் காய், முதிராத எள், tender capsules of sesamum plant.

எள்ளு, see எள்.

எள்ளுச் செவி, ஓர் சிறிய பூண்டு, a small plant (unidentified).

எள்ளுருண்டை, எள்ளை யிடித்து வெல்லமிட்டு அல்லது வெல்லப் பாகில் சேர்த்து உருண்டையாகப் பிடித்த ஓர் பலகாரம், sesamum ball. It is a sweet cake made with powdered gingelly seed and jaggery or its syrup; a mixture of pulverised gingelly seed and jaggery or jaggery syrup pressed while hot into balls of various sizes as required.

எள்ளுப் பிண்ணாக்கு, எள்ளைச் செக்கிலிட்டாட்டி எண்ணெய் வடிந்த பின் எஞ்சிய சக்கை. இப் பிண்ணாக்கில், ஆட்டிய பிறகும், சிறிது எண்ணையும் அத்துடன் சக்கையில் வெண்கருச் சத்து, வெல்லம், கஞ்சிப் பசை, முதலியவைகளும் கலந் துள்ளதால், அது ஆடு மாடுகளுக்குத் தகுந்த உணவெனக் கொள்ளப்படும்.

அதைச் சிலர் வெல்லத்துடன் சேர்த்து உட் கொண்டாலும், பொதுவாக, அது மனிதர்கள் உண்ணத் தகாத வஸ்து வெனக் கருதப்படும். ஏனெனில் அதனால் மச்சை ரோகம், என்பு ரோகம், சொறி சிரங்கு, நமைச்சல், முதலிய சரும நோய்க ளுண்டாகும். gingelly oil-cake. it is the compressed mass left after expressing oil from the gingelly seeds. As this oil-cake retains even after the most perfect treatment by pressure a portion of oil with practically the whole of the albuminous matter, sugar, mucilage and starchy components of the seeds, it forms a concentrated nutritious food for cattle and sheep. Although it is taken with jaggery by some people, it is quite unfit for human consumption as it is said to give rise to various diseases such as, inflammation of the marrow, bony affections, itches, eruptions and various other skin diseases.

எள்ளுப்பு, எள்ளுச் செடியை எரித்து அதனின் றெடுத்த வுப்பு, salt extracted from the ash derived from burning the sesamum plant.

எள்ளுமிச் சாம்பல், எள் ளுமியை யெரித்ததனா லுண்டான சாம்பல், the ashes obtained by burning the opidermis or the cuticle of the gingelly-seed.

எள் ளுருண்டை, see எள் ளுண்டை.

எள்ளு லவணம் see எள் ளுப்பு.

எள் ளோதனம், எள் ளிட்ட அரிசிப் பொங்கல், boiled rice to which are added powdered gingelly seeds; a mass-made of boiled rice and powdered sesamum seeds.

எள் ளோரை, see எள் ளோதனம்.

எறி கால், மோதுங் காற்று, a current of air forcing through a room — Draught; a voilent and rushing wind.

எறித்தல், வெயில் காய்தல், sun-shine.

எறிமுகச் சாலை, உலைக்களம், furnace.

எறி முத்து, அம்மை நோயில் இடை இடையே உண்டாகும் கொப்புளங்கள், large blebs found scattered in the midst of small pox eruptions; 2. சிறிய அம்மை, chicken pox— Vericella.

எறியாலம்,

எறியால், ஓர் வகை மீன், இதனின்று எண்ணெய் எடுக்கப்படும், a kind of fish from which oil is extracted.

எறி யுப்பு, கல் லுப்பு, rack salt probably so called from its being thrown down as a precipitate to the bottom of the sea from evaporation of sea-water.

எறி யூசுரம், நீர்ச் சுண்டி, water-mimosa — Mimosa virgata.

எறும்பி, யானை, elephant.

எறும்பு, ஓர் சிறிய செந்து, இது எல்லா விடங்களிலு முண்டு, இதில் பலவகை யுண்டு, ant; emmet; a very small insect found every-where — Formicidac. It consists of different varities viz:

1. கட்டெறும்பு, black ant whose bite causes swelling — Formica compressa.
2. சிற் றெறும்பு, small red-ant — Fitimida.
3. சிற கெறும்பு, jumping ant — Drepanognathus saltator.
4. முசிற் றெறும்பு, red-ant — Formica smarangdina. See முசிறு.
5. கடுத்துவா யெறும்பு, another species of black ant.
6. சுள் ளெறும்பு, a small black stinging ant.
7. தலைப் பிரட்டை யெறும்பு, a black ant with a large head which it is constantly shaking.
8. குரு வெறும்பு, a large red-ant.
9. பிண வெறும்பு, ant feeding on carcase.
10. பேய்க் காலெறும்பு, a small black ant with long feet.
11. தேனெறும்பு, honey ant.

எறும்புப் புற்று, எறும்பி னிருப்பிடம், ant-hill; residential place formed by ants; habitation of ants.

எறும்பு விழுங்கி, எறும்பைப் புசிக்கும் ஜெந்து, ant-eater.

எறுழி, காட்டுப் பன்றி, wild hog — Sus scrofa; 2. பன்றி, hog — Sus indica.

எறுழ் வலி, மிகுந்த வலி, great strength.

எற் கோலி, இன்புறத்தான் பூடு, black honey thron — Canthium didymum.

எற்பாடு, பகல் 20 நாழிகை முதல் 30 நாழிகை வரை, the period between 2 to 6 p.m. c.f. எற்றோற்றம், sunrise.

எற்றல், அறுத்தல், cutting; 2. குத்தல், stabbing; 3. கொல்லல்; killing; 4. வெட்டல், cutting asunder; hewing; 5. அடித்தல், the act of beating.

எற்றுதல், see எற்றல்.

எற்றோகரம், see எற்றோற்றம்.

எற்றோற்றம், சூரியோதயம், sunrise.

என் பணி, உட்காதி னோர் பகுதி, அதாவது கம்பு. இது கேள்விக்கு ஓர் பிரதானமான கருவி, a bony structure in the internal ear resembling a snail-shell — Cochlea. It contains the essential auditory organs.

என் பாதல், எலும்பாதல், formation of bone; 2. எலும்பாக மாறுதல், conversion into a bone — Ossification; 3. இளைத்தல், to be reduced to a skeleton.

என் பிணங்கி, see எலும்பிணக்கி.

என்பியல், எலும்பிற்கு இயற்கையான விதிகளைப் பற்றிக் கூறும் நூல், that branch of science which treats of the nature of bones and bony tissues — Osteology.

என் பியற்கை விதி, see என்பியல்.

என் பிலி, எலும் பில்லாத பிராணி, a small creeping creature without limbs or bones; 2. புழு, worm.

என்பு, see எலும்பு; 2. புல், grass.

என்புக் கடினம், எலும்பு கெட்டி யாதல், th hardening of a bone — Osteoselerosis.

என்புக் கணு, see என்புப் புடைப்பு.

என்புக் கரி, எலும்பு சுட்ட கரி, see எலும்புக் கரி.

என்புக் கழலை, எலும்பிற் காணும் கழலை, a tumor developing on a bone — Osteoma.

என்புக் குழி, தொடைச் சந்துப் பொருத்து, the cavity which receives the head of the thigh bone — Acetabulam.

என்பு தின்றி, கழுதைக் குடத்தி, hyae feeding chiefly on bones and putrified bodies; 2. ஓர் வகைப் பூடு, a small plant (unidentified); 3. எலும்புருக்கி, which see.

என்புத் தாபிதம், எலும்புக்குக் காணு மழற்சி, inflammation of a bone — Osteitis.

என்பு பற்பம், சுடுகாட்டில் பிணஞ் சுட்ட சாம்பல், the white earthy residue of bones which have been calcined — Bone-earth or bone-ash.

என்பு போஷணம், எலும்பு பருத்தல், எலும்பு புஷ்டி, nutrition of bone — Osteotrophy.

என்புப் பசை, எலும்புப் பசை, a glue obtained from bone; bone-glue — Osteocolla.

என்புப் புடைப்பு, எலும்பின் மேலுள்ள கணு a broad eminence on a bone — Tuberosity; 2. எலும்பு புடைத்துக் காணல், a bony growth prejecting outward from the surface of a bone — Exostosis.

என் புருக்கி, see எலும் புருக்கி, 2. ஓர் வகைப் பூடு, a plant (unidentified) probably so called from its causing or curing disintegration of bones; 3. எலும்பைத் தின்றுக் கொண்டே போதல், eating up of bone; atrophy of bone — Osteanabrosis.

என்பு வளர்ச்சி, எலும்பு வளர்ந்து பருத்தல், hypertrophy or a morbid growth of the bone — Hyperostosis; abnormal ossification or formation of a bone or a bony substance — Osthexia. See also எலும்புப் புடைப்பு.

என்பு வாதம், எலும்புக்குக் காணும் வாத வலி, pain in a bone — Ostalgia.

என்பு வாதம், நாடி நரம்புகளுக்கு வியாதி காணுவதால் அதனருகே யுள்ள எலும்பின் கோளாறினால் தான் ஏற்படுவதாகக் கொள்ளும் ஓர் **சமவாதம்,** the logic of a disease of the bones. It is a theory which traces the derangement in the nerves and the blood vessels to defects in the bones adjoining them — Osteopathy.

என்பு விளக்கம், எலும்பின் விவரத்தைக் கூறும் நூல், that science which relates the description o the bones.

என்பு வெட்டி, எலும்பைத் தறிக்கு மோர் கருவி, an instrument for cutting bones.

என் புளுத்தல், எலும்பு உளுத்து அழிதல், soft necrosis and decay of the bone — Osteolysis.

என்புறி, கருஞ் சிந்தில், a black variety of moon-creeper — Tinospora cordifolium.

என்றவன், சூரியன், the sun.

என்றாழ், கோடை, summer; 2. சூரியன், the sun; 3 வெயில், sunshine.

என்ன வேர் விழியான் பத்திராட்சி, evening jasmine — Mirubilis jalappa.

ஏ

ஏக ஒன்றான அதாவது ஒன்று அல்லது தனிமையைக் குறிக்க வரும் ஓர் உப **சருக்கம்,** uni or mono, a prefix denoting one or single; **2.** பௌதிக நூலில் ஏக வணுவைக் குறிக்கும், (In Chemistry), it means combining with one atom as in. ஏக பஸ்மிகாமிலம்; *3.* இரண்டல்லாது ஒன்று அதாவது ஒரே பாகத்தைக் குறிக்கும் முதன் மொழி, a prefix indicating one or what is limited to only one part in contradistinction to two; *4.* முழுமையான, forming the whole; wholly.

ஏகக் கம்பி, ஏகம்பச் சாரம், which see.

ஏக சக்தி ஒரே சக்தி வாய்மை, the state or condition of having only one potency — Univalence.

ஏக சக்திகம், ஒரே சக்தி வாய்ந்தது, having the valency or potency of one — Monovalent.

ஏக சரம், காண்டாமிருகம், the rhinoceros.

ஏக சரும குட்டம், இது உடம்பு முழுவதிலும் தொலைத் தடிக்கச் செய்வதா லிப் பெயர், இதனால் உடம்பின் தோலுரிந்து சிவந்தும், சொர சொரப்பாயும், திமிர், சர்வாங்க வீக்கம் முதலிய குணங்களோடு கூடிப் பார்வைக்கு விகாரமாயு மிருப்பதுடன், கை கால்களிலுள்ள விரல்கள் கனத்தும், குறைந்தும் காணும். இதையே சடைக் குட்ட மென்றும், யானைக் குட்டமென்றும் அல்லது பெருவியாதி யென்றும் கூறுவதுண்டு, a form of leprosy so called from the thickened patches of skin all over the body like the skin of an elephant. It is a constitutional disorder due to dryness and roughness of the skin and is marked by exfoliation of the epidermis, swelling parts, wasting away or mutilation of the digits, etc.

NOTE: It is also said that in this form of leprosy the patches are very large and of a dark brown colour, oblong like the scales of a fish and rough like elephant's skin. Although it is a form of a true leprosy — Elephantiasis graecerum, it also seems to include the sympotoms of ichthyosis knows as fish-skin disease.

ஏக சித்தம், ஒன்றின் பேரிலேயே வுள்ள நோக்கம், fixedness of purpose; concentration of one single object; **2** ஒரே மனது, one and the same thought.

ஏக சிந்தை, ஒரே மனது, oneness of the mind; uniform nature; **2** ஒரே நினைவு, only one thought — a condition in which the mind is peroccupied by one idea to the exclusion of others — Hyperprosexia.

ஏக சிருங்கம், see ஏக சரம்.

ஏக சுபாவம், ஒரே சுபாவம், one nature.

ஏக சூத்திரம், ஓர் வகை வைடூரியம், a variety of chalcedony much esteemed as a gem.

ஏகச் சாரம், see ஏக திருஷ்டி.

ஏக திருஷ்டி, காக்கை, the crow which has a look rather one-sided — Corvus

splendens; 2. ஒற்றைக் கண் பார்வை, single - sightedness.

ஏக தேகம், யௌவனம், juvenility, youth; 2. பிரமசாரி, bachelor.

ஏகத் துவம், ஒருமைப்பட்டிருக்குந் தன்மை, the state or quality of being one — Oneness; unity.

ஏக நிற வுப்பு, see எவட் சாரம்.

ஏக பஸ்மிக, ஆண் சரக்குச் சக்தி வாய்ந்த having but one base — Monobasic.

ஏக பஸ்மி காமிலம் உப்புச் சத்துக் குறைந்த திராவகம், an acid containing only one stom replaceable by hydrogen — Monobasic acid.

ஏக பத்திரிகை, வெண்டுளசி, white-basil.

ஏக பத்தினி விரதம், தன் பெண் சாதி யல்லாது வேறு பெண்டிரை நோக்குவதில்லை யெனக் கொள்ளும் நிண்ணயம் அல்லது உறுதி, a vow taken by a husband not to face any women except his own wife for purposes of sexual intercourse.

ஏக பந்தனம், ஏக சல வாயு சம்பந்த வஸ்து, a univalent radical or element — Monad.

ஏக பலம், ஒரே காயைக் கொடுக்கும் செடி, a plant yielding but one fruit; 2. ஒரே தடவை காய்க்கு மரம், a tree bearing fruit only once; 3. ஒரு பலம், one palam.

ஏக பாதம், ஓர் விதமான மதன் லீலை, (In Erotic Science) a kind of coitus or a posture in a sexual embrace in which the parties stand on one leg; 2. ஒரே பாதம் அல்லது கால், a single foot or leg.

ஏக பாத வாதனம், நிஷ்ட நிலையி லொன்று அதாவது ஒரே காலில் நின்று கொடுந்தவம் புரிதல், a peculiar and rigorous posture in yoga - practice in which the yogi stands on one leg only during contemplation.

ஏக பானம், ஒரு வேளை மருந்து, one dose of medicine.

ஏக பிண்ட கருப்பம், கருப்பத்தில் ஒரே பிள்ளையை யுண்டாயிருத்தல், pregnancy with a single fetus — Monocyesis

ஏக புத்திரகம், ஒரே குஞ்சு பொரிக்கும் ஓர் பறவை, a species of bird laying one ege and hatching it but once.

ஏக போகம், இருவரு மொத்த போகம், (In Erotic Science) the sexual enjoyment felt by both with equal pleasure; 2. ஒருத்தன்மையான இன்பம், oneness of pleasure experienced by both; 3. சுக துக்கங்களைச் சமமாக அதாவது ஒன்றாக நினைத்தல், an ascetic or a mendicant who treats or looks upon pleasure and pain alike and is indifferent to both; 4. இன்ப துன்பங்களால் மாற்ற மடையாமை, to be unmoved by joy or grief; 5. நேரும் சம்பவங்களை விகற்பமின்றி அனுபவிக்குந் தன்மை, the act of quietly submitting to what happens without complaint about fate; 6. உடம்பிற்காவது மனதிற்காவது ஏற்படும் துன்பத்தைப் பற்றி உணர்ச்சி யற்றிருத்தல், insensibility to bodily or mental pain — Stoicism; 7. மனதின்படி அனுபவித்தல், enjoying wholly; enjoying to heart's content.

ஏக போசனப் பிரியம், ஒரே விதமான உணவின் மேற்கொண்ட இச்சை, the desire for only one kind of food; 2. ஒரே வேளை யுண்ணப் பிரியப்படல், desire to take meal only once in a day.

ஏக போசனம், ஒரே வேளை புசித்தல், the eating only of one meal a day — Mono phagia; 2. தனிமையா யுண்ணல், eating alone; eating not in company but singly.

ஏகப் பிறவி, ஒரே பிள்ளையைப் பெறுதல், giving birth to only one offspring at a time — Single birth; 2. ஒரே தடவை பிறத்தல், (In Philosophy) to be born but once i.e. remaining without re-birth; 3. சகோதரர்களோடு பிறக்காது தனியாய் நிற்றல், இதை சாதாரணமாக 'ஒரி' எனச் சொல்வதுண்டு, to be born singly whithout brothers or sisters. See ஒரி.

ஏக மதி, ஒரே நினைவு, concentration of mind on a single subject. See ஏக சிந்தை; 2. பரிச வுணர்ச்சி, one sense as of touch as in ஓரறி வுயிர், which see; 3. ஒரே மாதம், only one month.

ஏக மயக்கம், ஒரே மயக்கம் monomania having only one delusion — Intellectual monomania.

ஏக மலடி, ஒரு பிள்ளையைப் பெற்று மலடியான பெண், a woman who had borne but one child —Unipara. See **ஒற்றை மலடி.**

ஏக மலடு, ஒரே பிள்ளையைப் பெற்றுப் பிறகு பிள்ளை யில்லா திருத்தல், giving birth to only one child and none afterwards. See **கதலி மலடு.**

ஏக மித்திரம், காரம் alkali.

ஏக மூலி, மாதுளை, pomegranate — Punica granatum.

ஏகம், திப்பிலி, long-pepper — Piper longum; **2. தனிமை,** solitary; **3. ஒன்றிப்பு,** unity **4. ஒன்று,** one; **5. முழுவதும்,** entireness.

ஏகம்பச்சாரம், வாத முறையில் உபயோகிக்கும் ஓர் வைப்புச் சரக்கு. தமிழ் நூலின்படி வெடியுப்பு கல்லுப்பு, அமுரி யுப்பு, சோற்றுப்பு, காசிச் சாரம், முதலியவைகளை யானை மூத்திரத்தில் கரைத்துப் பதமாய் எரித்திடச் சுண்டி அடியிற் பூர்த்து நிற்கும் உப்பு, an efflorescent salt used in alchemy. It is a prepared salt. It is obtained by dissolving saltpetre, rock salt, urine salt, common salt, and the mineral salt 'Kasicharam' (*காசிச் சாரம்*) in elephant's urine and boiling it up to a prescribed temperature, when a powder of salt will be left behind.

ஏகம்பச் சூலி, see **ஏகம்பச்சாரம்.**

ஏகம்பட் சாரம், ஓர் வகைத் தாதுப் பொருள், a mineral salt found in its native state.

ஏகம்ப பாஷாணம், see **ஏகம்பச் சாரம்.**

ஏக யாமம், உடம்பின் ஒரு பாகத்தை மட்டும் முற்றிலும் தாக்கு மோர் வாத நோய், paralysis of only one side or part of the body — Hemiplegia.

ஏக யிட்சிகம், எருக்கு, which see.

ஏக யோனி, ஒரே கருவிற் பிறந்த born from the same womb or of the same mother.

ஏகரம், முத்து, pearl; **2. மருந்து,** medicine.

ஏகல புச்சன், பைத்தியக் காரன், a mad man.

ஏகலாகிகம், திப்பிலி, long-pepper — Piper longum.

ஏகலிங்கச் செடி, ஆண் பூவாவது பெண் பூவாவது மட்டும் தனியாக வுண்டாகும் செடி, any plant having distinct unisexual flowers; **2. ஆண் பூ ஒரு செடியிலும் பெண் பூ மற்றொரு செடியிலு முண்டாகும் செடிகள்,** plants having the unisexual male and female organs of flowers on different plants i.e. stamens on one plant and pistils on another — Dioecians. It is opposed to Monoecian a plant having both the male and female flowers on the same plant.

ஏகலியம், களைக் கொட்டி, a plant (unidentified).

ஏகலைத் தனிட்சியகம், பிர புண்டரீகம் அதாவது அல்லித் தாமரை, white Indian water-lily — Nymphae lotus.

ஏகலைத்தன், see **ஏகலைத் தனிட்சியகம்.**

ஏக வட்சி, see **ஏகாட்சி.**

ஏக வண்ண, ஒரே நிறமான having only one colour — Monochromic.

ஏக வறை, ஒற்றறை, that which has only one compartment — Uniocular.

ஏக வாசம், ஆல மரம், banyan tree — Ficus bengalensis; **2. தனித்திருத்தல்,** soliatary life as that of a hermit. See also **ஏகாந்தம், 2. ஏகவுணவு அதாவது ஒரு வேளை புசித்தல்,** taking food only once in a day; one day meal; **3. முழுவதும் பரவிய வாசனை;** smell spread all over; diffused scent; **4. ஏக மந்திரம்,** the sacred mono syllabic mantram 'OM'.

ஏக வாந்தி, ஒரு மிக்கச் செய்யும் வாந்தி vomiting taking place at a stretch; **2. உட்கொண்ட மருந்தை அல்லது உண்ட வுணவை முழுவதும் வாந்தி செய்தல்,** vomiting medicine or food wholly.

ஏக விரிந்தம், ஓர் தொண்டை நோய், a disease of the thorat.

ஏக வீக்கம், உடம்பு முழுமையும் பரவிய வீக்கம், an extensive swelling of the body.

ஏகவீரக் கள்ளி, மான் செவிக் கள்ளி, a kind of spurge, the leaves of which resemble the ear of a deer.

ஏக வீரம், மான் deer; **2. ஓர் மரம்,** see **ஏகவீரக் கள்ளி.**

ஏக வைத்திய பாகம், எல்லா வித நோய்களுக்கும் பரிகாரமாக ஒரே மருந்தைப் பிரயோகித்தல், treatment by administering one and the same medicine as a curative for all kinds of diseases; 2. ஒரே மருந்தைப் பல வித நோய்களையும் கணடிக்கும்படித் தயாரிக்கு முறை, the process of preparing one potent medicine capable of curing many diseases.

NOTE: Such medicines are generally given by Vaidyans in different vehicles or mediums.

ஏகாகாரம், பொன் gold; 2. ஒரே விதமான வுணவு, only one kind of food; 3. ஒரு வேளை கொள்ளும் உணவு, see ஏக வாசம்.

ஏகாகி, தனித்திருப்போன், one who lives singly or seclusively.

ஏகாகிக சுரம், அன்று தோன்றி அன்றே நீங்கும் சுரம், a slight fever lasting only a day, transient fever — Ephemeral fever.

ஏகாகித சுரம், see ஏகாகிக சுரம்.

ஏகாக்கம், காக்கை, Corbus splendens.

ஏகாக்கிர சித்தம், ஒரே நாட்டம், mind concentrated on only one object; 2. மனவொருமை, oneness of mind.

ஏகாக்கிரம், see ஏகாக்கிரதை, one pointeddness i.e. fixing one's attention upon one object.

ஏகாக் கிருதை, ஒன்றிலேயே மனம் நாட்ட மடைதல், concentration of mind on one object in view.

ஏகாங்கம், சந்தனம், sandal — Santalum album; 2. உடம்பின் பிரதான அவயவம், the most important member of the body i.e. the head; 3. தனிமை, solitude; retirement; 4. உடல் முழுமை, body as a whole.

ஏகாங்க வாதம், ஒரே வுறுப்பைப் பற்றிய வாத நோய், வட மொழியில் இதற்குப் 'பட்சகாத வாதம்' என்று பெயர், paralysis of but a single part or limb — Monoplegia; 2. பக்க வாதம், paralysis of one side of the body — Hemiplegia; 3. இளம் பிள்ளை வாதம், இது கர்ப்பக் கோளாறு அல்லது பிறவிக் குற்றத்தினால் குழந்தைகளுக் கேற்படும், hemiplegia taking place at birth or during intra uterine life — Infantile hemiplegia. It is commonly known as birth palsy.

ஏகாங்கி, தனித் திருப்போன், one who leads a solitary life; an ascetic.

ஏகாங் குலம், மூத்திரம், urine.

ஏகாஞ்சலி, கை கொண்ட அளவு, handful.

ஏகாட்சர கக்கிசம், ஓர் மாந்திரீக நூல், a book on magic treating about only one mantric letter i.e. 'OM'.

ஏகாட் சரம், ஓம் என்னும் பிரணவ எழுத்து, the sacred mono-syllable 'OM' which is the one- lettered mantram.

ஏகாட் சரி கட்சம், ஓர் மந்திர நூல், a treatise on incantations. See ஏகாட்சரி கக்கிசம்.

ஏகாட்சி, ஒற்றைக் கண்ணன் அல்லது ஒற்றைக் கண்ணி, one having a squint-eye; 2. ஒற்றைக் கண் பார்வை, a deviation of one of the eyes from its proper direction, so that the visual axcs annot both be directed simaltaneously at the same objective point — Strabismus; 3. காக்கை, a crow with an oblique look

ஏகாட்டிலா, வெள்ளெருக்கு, white-flowered giant swallow- wort — Calotropis gigantea (albiflora).

ஏகாதச ருத்திரக் குளிகை, சந்நிபாத சுரத்திற்குக் கொடுக்கும் மாத்திரை, a pill prescribed for typhoid fever or other kinds of fever involving delirium

ஏகாத் துமம், அத்துவிதம், the doetrine of one universal spirit; the unity of spiritual essence.

ஏகாத்தும வாதம், அத்துவிதக் கொள்கை, the doctrine that only one being exists — Monism as opposed to துவைதம். Dualism; See also அத்துவித வுண்மை.

ஏகாந்த சிந்தை, தனித் திருக்கும் போதுண்டாகும் மனக் கருத்து, contemplation in solitude.

ஏகாந்த செந்தூரம், காந்தம் ஒன்றையே கொண்டு செய்யும் செந்தூரம், a red-oxide prepared from magnet alone.

ஏகாந்த சேவை, தனித்திருந்து வழிபடுதல், the solitary ritual worship.

ஏகாந்தச் செயல், தனிமையான இடத்தில் ஒண்டியாக விருந்து செய்யுந் தொழில், அதாவது யோகம், that which is done or practised in solitude namely yoga.

ஏகாந்தத் தியானம் தனிமையாக விருந்து செய்யும் தியானம், இதனால் ஐம்புலன்களின் தொழில்கள் இயக்க மடைந்து மனது பிரவிர்த்திக்காமல் நிலை பெறும். ஆகவே ஐம்புலக் கதவு அடைபடும். பிறகு தன்னையும் உலகத்தையும் மறந்து நிற்க, பிரகிருதி சுபாவ மேலீட்டினால் அனேக சித்திகள் கை கூடும். இதுவே சமாதிக்கு அடுத்த தாகையால் இத்தகைய நிலைக்கு வருவது சாதாரண மனிதருக்கு அசாத்தியமான காரியமாக முடியும். இந்நிலை யடைந்தவர்கள் மிகச் சிலரே, medidation in solitude. In this, the functions of the senses are inhibited and there comes a dead stop to the outward flow of mind and so the gates of the senses are closed to him. The adept forgets himself and the outside world and psychic powers bow before him as the soul attains all powers of nature.

It is next to Samadhi and so it is indeed an uphill task for man to rise to the heights of meditation and realise his soul. Very few only have been able to accomplish this.

NOTE: Ancient history records the fact that great Seers such as Sri Krishna, Buddha, Kapila, Jesus and a few others only dived deep within themselves while following the introspection method of meditation.

ஏகாந்த நிட்டை, தனிமையான இடத்திலிருந்து மனது அசை வற்றிருக்க அப்பியாசித்தல். இதனால் மனது வசப்பட்டுக் கவனத்தைத் தகுந்த வழியிற் செலுத்தி ஒருமையை யுண்டாக்க ஏதுவாகும். இத்தகைய நிலையினால் மனது தன்னிலையி லிருந்து ஏற்ற மடைவதனால், நற்சிந்தனைக ளுதித்து ஆத்துமானந்தம் மேலிட்டுத் தன்னை மறந்து நிற்கும் நிலைமை ஏற்படும், concentration in solitude so as to bring about fixedness of the mind. It is that intellectual state in which the mind voluntarily surrenders itself to its own reflections and tends to excite a disposition to think and direct the attention to proper objects. This kind of profound medidation in solitude and silence no doubt exalts the mind above its own level and produces the most refined and sublime conceptions so as to make the soul experience the purest and most refined delight and almost lose the idea of existence in the intellectual pleasure it receives.

ஏகாந்த நித்திரை, யாரு மற்ற விடத்தில் தனிமையாக இருந்து கொள்ளும் நித்திரை அல்லது துறவறத்திற் புரியும் யோக நித்திரை. இதில் மனது வெளி விஷயங்களில் பிரவிர்த்திக்க இடமில்லாத காரணத்தினால், யாதொரு விகற்பமு முடையாமல் தனது இயல்பை விட்டுப் பெயராது நிற்கும். ஆகவே இதற்கும், இல்லறத்தில் அதாவது வீட்டில் பந்து மித்திரர்களுக்கு இடையே கொள்ளும் தூக்கத்திற்கும், மிக்க வித்தியாசமுண்டு. ஏனெனின், இத்தகைய நித்திரையால் மனது நின்மல மடைந்து, நாளா வட்டத்தில் பிரமத்தில் ஒடுக்குங் காலத்தில் அறிவு விளக்க மடைந்து, தன்னைத் தானறிய ஏது வுண்டாகும். ஆதலால் மனதை அசை வற்றிருக்கச் செய்து மெய்மறந் திருத்தலே யோக நித்திரையாகும். ஆகவே இதை, மனிதர் சாதாரணமாகக் கொள்ளும் நித்திரைக்குச் சமமாகச் சொல்ல எவ்வகையிலேனும் பொருந்தாது, silent sleep in solitude. It is quite distinct from that in the dome of the domestic society for, it is a perfect state of sleep in which the mind is completely withdrawn from external object and it adapts to its own reflections and to the dictates of its own ideas.

It is a deep sleep in which the mind is carried away gradually to Brahmam and becomes identified with the truth and so the adept gets to his own Self. Therefore, sleep in solitude is to be regarded as the anapension of psychoses. It is a state of calmness of existence and thus it is differentiated from an ordinary sleep in the midst of Society.

ஏகாந்த நிலை, உலகத்தாரின் சம்பந்தத்தை விட்டுத் தனிமையாக விருக்குந் தன்மை, இதனால் முழுவதும் துறந்த விடுதலெனப் பொருந்தாது. ஏனெனில் நாட்டிலும், அல்லது அதைச் சார்ந்த கிராமங்களிலு மிருந்து கொண்டும் இந்நிலையைச் சாதிக்கக் கூடும். கவனத்தை நல்ல வழியில் செலுத்துவதால் மனிதருடைய ஒழுக்கங்களினா லேற்பட்ட உண்மை யறிவு இன்னதென நன்கு விளங்கும். ஆகவே நமது நாட்டில் சித்தர்கள், ரிஷிகள் முதலிய மகான்களெல்லாம் தனிமையாக இருந்தே பெயரும் கீர்த்தியும் பெற்றார்கள். மேனாட்டிலும், இவ்வித மாகவே சில பெரியோர்களும் இருந்து வந்ததாகத் தெரிய வருகிறது, the state of remaining alone and that remote from

Society. It does not necessarily mean to imply a total retreat from the world and its concerns. It may indeed exist amidst the tumultous intercourse of an agitated city as well as in the peaceful shades of rural retirement. A true knowledge of human character is most likely to be acquired by directing the attention to proper object.

The lives of great men such as the Siddhars, the Rishis and the others, remind us that they all gained their glory in solitude. Even among Western Scholars, Newton, Wordsworth, Pericles, etc. have all laid the foundation of their greatness in Solitude.

NOTE: When the mind is not properly employed in this state, the dangerous passions rise into fermentations and produce a variety of eccentric ideas and irregular desires. So, it is essential to elevate one's thought above the mean consideration of sensual objects.

ஏகாந்தப் பிரியம், உலக விவகாரத்தை விட்டுத் தனிமையாக விருத்தற்குக் கொள்ளும் இச்சை. இது சாதாரணமாக ஆசாபாசங்களை அறுத்துப் பந்தத்தி னின்று விடுதலை யடைய வேண்டு மென்ற ஊக்க மேலிடுவதனால் மனதிற் கேற்படும் ஓர் மனோ விச்சை. இத்தகைய விச்சையை மேனாட்டார் ஓர் வியாதி எனக் கருதுவார்கள், a desire for solitude from aversion to Society. It is a condition of mind in which one is looking forward to absolute freedom, as he cannot find any pleasure in earthly ties and relations and therefore does not hesitate to transcend them and begin to live a life of complete indifference to the environments.

In Western Science, it is looked upon as a sort o disease in which a man entertains such morbid desires — Apanthrophy.

ஏகாந்தப் பேறு, ஒரிடத்தில் தனித் திருப்பத்தினால் மன வொருமை யுண்டாகி அதனால் ஏற்படும் பலன்கள். இவைகள் பல உள, அவையாவன, the advantages of solitude derived from the concentration of the mind. They are numerous, viz—

1. அறிவை மூடிய அஞ்ஞானம் ஒழியும், the veil which obscured the intellect suddenly falls away.

2. மதியைக் கவர்ந்துள்ள இருள் நீங்கி, ஞானம் உதயமாகும். the clouds which dimmed the light of reason disappear.
3. ஆன்மாவைப் பற்றிய சஞ்சித கருமம் அதாவது கட்டுப் பட்ட வினை இலகு வாகும், the painful burden of Karma which oppressed the soul is alleviated.
4. கவலை அறவே ஒழிந்து, சிந்தனை மேலிடக் காணாத காட்சி யெல்லாம் கண்களுக்குப் புலப்படும், care flies away, imagination becomes more vivid and agreeable and interesting scences present themselves to our view.
5. ஐம்புலக் கதவு அடைபடும். ஆகவே பந்தத்தினின்று ஆன்மா விடுபடும், the senses remain undisturbed and no external object agitates the soul.

ஏகாந்தமா யிருத்தல், தனிமையாயிருத்தல், to be secluded; to be alone.

ஏகாந்தம், தனிமையான அல்லது தனித்திருக்கு மிடம்.

"இனிது இனிது ஏகாந்த மினிது,
அதனினு மினிது ஆதியைத்
தொழுதல்"
(ஔவை)

ஆகவே தனிமையில் வசிப்பதனால், குணம், நடை முதலிய ஒழுக்கங்கள் சீர்திருத்தப்பட்டு, மனதி லுதிக்கும் எண்ணங்கள் ஒருமைப்பட ஏதுவாகும், அன்றியும் நல்லொழுக்கம், பக்தி, முதலியவைகள் கைகூடுவதுடன், மனதானது பரிசுத்த நிலையை யடைந்து, மனோ பாவனை மேன் மேலும் விருத்தியாகிச் சாதாரண மனிதர்களின் அறிவிற்கு எளிதில் உதிக்காத எண்ணங்க ளெல்லா முதிப்பதுடன், மேற்பட்ட சக்திகளும் சித்தியாகும். ஏகாந்தத்தினாலே கடவுளிடத்தும் தேவர்களிடத்தும் சம்பந்த மேற்படும், solitary or secluded place — Solitude. The above is a stanza quoted from Avvaiyar, a celebrated poetess in Tamil and it advocates that solitude is sweet and pleasant, and more would it be when meditated on the Supreme Being.

So, solitude is the only place in which the character of men can be properly developed. It extracts the various propensities of the human heart and unites them into one. It creates

simplicity of manners and leads the mind to meditation adn to those sources whence the grandest conceptions are most likely to flow. It elevates the mind and inspires one with notions too refined and exalted for the level of common life. Solitude is the soul's opportunity to commune with God and Angels.

NOTE: Renouncing all kinds of business and employment, the Gymnosophists, the most ancient solitary sect of India, retired to mountains or the silent banks of rivers where they lived in contemplation of philosophic truths.

ஏகாந்த வட்சரம், ஓம் என்னும் மந்திர வெழுத்து, the sacred mono-syllabic letter 'OM'.

"ஏகாந்த வட்சரத்தை லட்சம் ஓது"

ஏகாந்த வாழ்வு, துறவியின் வாழ்க்கை, the life of an ascetic; 2. தனித் திருத்தல், solitary life; life in seclusion.

ஏகாந்த விச்சை, see ஏகாந்தப் பிரியம்.

ஏகாந்த வினிமை, see ஏகாந்த வின்பம்.

ஏகாந்த வின்பம் தனிமையா யிருத்தலா லுண்டாகும் அக மகிழ்ச்சி. இது பலவித மாகக் கொள்ளப்படும். அவையாவன: the pleasures of solitude. They are several viz.

1. சிற்றின்பத்தை விட்டுப் பேரின்ப மடைதல், experiencing the knowledge of the Higher - self and the sacrifice of the lower - self.

2. வியாகூலத்தை அறவே ஒழித்து மனோசாந்த மடைதல், attaining the peace of mind which is the highest happiness or enjoyment in this world.

3. ஆயுள் விருத்தியாகி நீடித்து வாழ்தல், prolonging the duration of existence.

ஏகா யநன், ஒரே மனதுடையோன், one having oneness of thought; 2. அசையா மனதுடையவன், one whith firmness of mind.

ஏகாயிக சுரம், தினம் காணும் சுரம், fever attacking daily.

ஏகாரம், பொன், gold; 2. பலா மரம், jack tree — Artocarpus integrifolia; 3. பாகல், spiked bitter cucumber — Momordica charantia; 4. பழுபாகல், bristly balsam pear — Momordica dioica.

ஏகார வல்லி, பழுபாகல், balsam pear — Momordica dioica; 2. பலா, jack tree — Artocarpus integrifolia; 3. பாகல், bristly balsam pear. See ஏகாரம்.

ஏகாரியம், வெக்காலி, a tree (unidentified).

ஏகார்த்தம், ஒரே வஸ்து, one and the same object.

ஏகாலி, சவர்க்காரம், fuller's earth; 2. சோப்பு, soap.

ஏகி, கைம்பெண், a widow so named from her being left solitary.

ஏகிட பாகம், see ஏசிடா வகம்.

ஏகீ பவம், ஒருத் தன்மை, oneness; the state or quality of being one.

ஏகீப வித்தல், ஒருத் தன்மையாக்கல், causing to unite with or to become one with; becoming the same in nature.

ஏகேந்திரியச் செயல், கன்மேந்திரியங்களுக்குச் செல்ல வொட்டாது, மனதைத் தடுத்தல், (In Philosophy) the act of preventing or shutting out the mind from entering the sense organs.

ஏகை, இரேகை, (In Palmistry) the lines on the palm.

ஏகோபித்தல், ஒரு மனப்படுதல் union in feelings, sentiments, etc — Concordance.

ஏகோன் மத்தம், ஒரே வஸ்து அல்லது விஷயத்தில் மனது பிரவேசித்தலினா லுண்டாகும் மனப் பிரமை, that form of mania in which the mind is absorbed by one idea — Monomania.

ஏக்க மயக்கம், ஏக்கத்தினா லேற்படும் மயக்கம், the stupor caused by anxiety or mental distress — Essential vertigo.

ஏக்கம், ஒரே விஷயத்தில் மனது நாட்ட மடைந்து அடையும் துன்பம், mental distress with regard to a particular thing; a morbid anxiety; 2. சஞ்சலம், to wear away with a kind of misery; 3. சோர்வு, lanquishing; 4. கவலை, care; nervous

anxiety; 5. திடுக்கிடல், sudden fear; 5. அதிர்ச்சி, a trembling of the limbs, as in paralytic affections — Trepidation; 5. மனமயக்கம், stupor caused by grief.

ஏக்கம் பிடித்தல், துக்கம் மிகுதல், to be over powered by grief; 2. ஏங்குதல், languishing at the death of one; to wear away with any kind of misery; 3. மனந் தளிர்தல், to be in low spirits.

ஏங்கல், குழந்தைகட்கு வருமோர் வகைக் காச நோய், a kind of asthma affecting the children; 2. ஏக்கம், which see; 3. ஏங்குதல், pining; depression of spirits by grief.

NOTE: The term is generally used for children who pine away thinking of the mother or the others they are fond of and whom they badly miss.

ஏங்குதல், இளைத்தல், getting emaciated through anxiety and mental distress; pining; 2. அழுதல், weeping; 3. இரங்கல், wailing; It is said of a devotee whose mind is always longing for God, as in.

"ஏங்குதே நெஞ்ச மய்யோ"

(தாயுமானவர்)

ஏங்குறல், விசன மடைதல், the state of being sorrowful or thoughtful.

ஏசம், வெண் கலம், bell-metal.

ஏசவம், சண்பகம், golden - flowered champak; Indian Magdolina — Michelia champaca.

ஏசி, கிளி, parrot — Palacoriniae.

ஏசிடாவகம், அதி மதுரம், Indian liquorice root.

ஏடகணி, ஓலை யீர்க்கு, the nerve or the rib of a palmyra leaf.

ஏடகப்பை, ஏடு அல்லது வண்டலை வழிக்க வுபயோகிக்கு மகப்பை, a ladle used for removing the scum of liquids — Skimmer.

ஏடகம், ஆட்டுக் கடா, the he-goat; 2. தென்னை, cocoanut tree; 3. பூ விதழ், the leaf or the petal of a flower; 4. பனை மரம், palmyra tree; 5. ஆண் பனை, palmyra tree (male) bearing no fruit — Borasus flabelifer.

ஏடலகம், அதி மதுரம், Indian liquorice root; 2. குன்றி, crab's eye — Aburs precatorius.

ஏடல், கருத்து, intention; thought.

ஏடன், செவிடன், a deaf man.

ஏடிணம், வைத்தியப் பரீட்சை, medical examination.

ஏடு, கண்ணிமை, the eye-lid. 2. பூவிதழ், the petal of a flower; 3. ஆடை, scum; 4. பாலாடை, cream; 5. உடம்பு, body; 6. பூ, flower; 7. பனை யேடு, the leaf of the palmyra tree.

ஏடு கட்டல், ஏடு படர்தல், formation of a scum on the surface of any liquid.

ஏடுக முருங்கை, மலை முருங்கை, hill morniga — Hedysarum sennoides.

ஏடு தயிர், ஆடை நீக்காத தயிர், curd from which cream is not removed.

ஏடு படர்தல், ஆடை யுண்டாதல், formation of coating on the surface of any liquid.

ஏடெடுத்த பால், ஆடை யெடுத்த பால், skimmed milk.

ஏடேகப் புண்டரீகம், ஓரிதழ்த் தாமரை, monopetalous flower — Ionidium suffruticosum. Lotus with lateral petals appearing as one.

ஏட்டை, ஆசை, desire; 2. தளர்வு, weakness or reduced strength; 3. இளைப்பு, pining; growing lean with longing for something.

ஏட்டைப் படல், இளைத்தல், to be reduced.

ஏட்டைப் பருவம், இளம் பருவம், the period of youth; youth-hood; 2. தளர்ந்த பருவம், helpless state; the time of adversity.

ஏணகம், ஓர் வகைக் கருப்பு மான், a species of black deer.

ஏணக் கரி, என்புக் கரி, bone-black; ivory black.

ஏண பற்பம், எலும்பு நீறு, bone-ash.

ஏணம், பெருங் கண்களையுடைய கருப்பு மான், a black deer having prominent large eyes; 2. மான் தோல் deer-skin; 3. வலி, strength; power.

ஏணா சினம், மான் தோல், the skin of a deer.

ஏணி, மான் கன்று, the young of a deer; **2. மான்,** an antelope.

ஏணிச் சீகு, ஓர் வகைப் புல், a kind of millet grass — Milium romosum.

ஏணி பாதம், ஓர் பாம்பு, a kind of snake; **2. ஓர் விஷப் பூச்சி,** a poisonous insect. Title probably from their foot resembling the rung of a ladder.

ஏணி வைத்த தன்மை, மேலேறுதற்குச் சுலபமான வழி யுண்டாக்குந் தன்மை, the method of facilitating the ascension as in Spiritual attainment or advancement.

ஏணை, ஆடு sheep.

ஏண், வலி strength power.

ஏதகசம், தகரை, ring - worm plant — Casia tora.

ஏதம், மான் deer; **2. துன்பம்,** suffering, distress; **3.ஆடு,** sheep.

ஏதனம், மூச்சு விடல், respiration; discharging air from the lungs; **2. அரிதாரம்,** orpiment.

ஏது, காரணம், cause; origin; final cause.

ஏதுகம், குழந்தை கட்குக் காணுமோர் வகை ஆசனப் புற்று, a peculiar blister at the anus in children probably Pemphigus due to congenital syphilis; **2. சங்கஞ் செடி,** a shrub — Monetia barlerioides.

ஏத்தம், இடவாகம், which see.

ஏத்திரி, சாதி பத்திரி, mace or the pulp of nutmeg — Myristica fragrans.

ஏந்தல், மலை, mountain; **2. சலோதர சன்னி பாதம்,** a delirious fever in cases of dropsy or in pneumonia from ascites; **3. வாதம்,** rheumatism; **4. ஓர் மதன விலை** (In Erotic Science) a posture in sexual intercourse.

ஏந்திரம், கண் காட்டுவித்தை magic.

ஏந்துகல், ஆமணக்கு, which see.

ஏந்து குழந்தை, கைக் குழந்தை, child in arms.

ஏந்து கொம்பு, யானைக் கொம்பு, elephant's tusk so called from its curvature upwards.

ஏந்தெழில், மிக்க வழகு, excessive beauty.

ஏப்பச் சுரம், ஓர் வகைக் காய்ச்சல், அது ஏப்பம், வாந்தி, மார் பெரிச்சல், தலைவலி, தாகம், நெஞ் சுலர்வு, பிரமை, மந்தாக்கினி, மல பந்தம், தலைக் குத்தல், கண்ணில் வலியுடன் நீர் வடிதல், முதலிய குணங்களைக் காட்டும், a fever characterised by gastric disturbances such as constant belching, vomiting, burning pain in the chest, head-ache, stupor, dull appetite, constipation, neuralgic pain in the head and the eyes, painful discharge of water from the eyes etc.

ஏப்ப மெடுத்தல், see **ஏப்பம் விடல்.**

ஏப்பம், தேக் கெறிவு, noisy eructation of gas after a meal, belch.

ஏப்பம் பறிதல், see **ஏப்பம் விடல்.**

ஏப்பம் விடல், ஏப்பம் விடுதல், to eject as of - wind, from the mouth — Erucatate.

ஏமகாரி, கொக் கிறகு, crane's feather.

ஏமங் கோலா, மயில் மீன், grey peacock-fish; — Histiophorus immaculatus; **2. ஓர் வகைக் கடல் மீன்,** grey sword-fish — Histiophorus breviostris.

ஏம சிங்கி, மிருதார சிங்கி, litharge or oxide of lead — Plumbi oxidum; **2. இரத்தச் சிங்கியோடு மற்றச் சரக்குகளையுஞ் சேர்த்துத் தயாரிக்கும் ஓர் வகை வைப்புப் பாஷாணம்,** a poisonous compound prepared from red-lead mixed with other ingredients.

ஏமசிங்கி வைப்பு, தாரம், லிங்கம், கேந்தி, துரிசு, கார்நாகம் இவைகளைப் பொடித்துச் செப்பினில் மூடி யெரிக்க வுண்டாகு மோர் வைப்புப் பாஷாணம் *(மச்ச.800)* a poisonous compound of lead obtained by burning orpiment, red sulpheret of mercury, sulphur, copper acetate and black lead in a closed vessel.

ஏம சித்தி, வாத முறையில் உண்டாகும் சித்தி, success attained in alchemy.

ஏம சிலை, உபரசச் சத்தி லொன்று அதாவது பொன் நிமிளை, one of the 120 kinds of natural substances enumerated in Tamil Medical Science. It is a kind of gold-ore used formerly in Alchemy.

ஏம சீவன், சவர்க் காரம், fuller's earth which is a life-giving factor in gold.

ஏம தங்கி, பத்மினி சாதிப் பெண் the first of the four classes of women divided according to lust.

ஏம துத்தம், கொக்கிறகு stork's feather; 2. பொன் துத்தம், gold sulphide.

ஏம தூரி, பொன்னூமத்தை, yellow-coloured datura, see ஊமத்தை.

ஏமத்தி, பொற்றொட்டிப் பாஷாணம், a poisonous compound prepared in a gold cup. c.f. செப்புத் தொட்டிப் பாஷாணம்.

ஏமத் திரவம், பொன் னீர், gold fluid; 2. பொன் சத்து, essenece of gold; 3. ஏலம், cardamom — Elettaria cardamomum; 4. வாதத்திற் குபயோகிக்கும் செய நீர், a pungent liquid employed for preparing a universal solvent used in the transmutation of base metals into gold.

ஏமத்திற் பிறந்தோன், பொன்னில் உற்பத்தி யான வுப்பு அதாவது ஏகம்பச் சாரம், a salt probably so termed for the reason that it is said to be found among ores in gold mines.

ஏமத்தூரி, பொன்னூமத்தை, yellow-coloured datura.

ஏமத்தூர், காட்டாமணக்கு, physic-nut — Jatropha curcas.

ஏமத்தைத் தங்க மாக்கி, பொன்னூமத்தை இது மாற்றுயர்வு வேதைக் குபயோகப்படுவதினாலிப் பெயர், gold-coloured datura. It is so called because the plant is said to be capable of converting alloy gold (22 carats) into a refined gold of a high or standard prabably 24 carats.

ஏம நாமம், பொன்னூமத்தை, see ஏமதூரி.

ஏம நிமிளை, பொன்னிமிளை, gold-pyrites; yellow coloured bismuth.

ஏமந்தம், பனி காலம், daw season.

ஏம பங்கம், கிச்சிலி, orange — Citrus aurantium (nobilis).

ஏம பத்திரம், மலை யத்தி, downy climbing cluster fig — Ficus macrocarpa. Title from its yellow leaves; 2. மலையாத்தி, a mountain tree — Bauhinia Malabarica.

ஏம பரிதம், குதிரை horse.

ஏம பாதிதம், கள்ளி, spurge — Euphorbia (genus).

ஏம புட்பம், பொன் முல்லை, golden jasmine — Jasminum humile; 2. அசோகு, which see; 3. செண்பகம், yellow champak — Michelia champaca; 4. மலை முல்லை, mountain jasmine — Jasminum angustifolium.

ஏம புட்பி, ஆவாரை, இதற்கு மஞ்சட் பூவுள்ளதாலிப் பெயர், tanner's cassia — CAssia auriculata, title from its yellow flowers.

ஏம பேதி, கற்கடக பாஷாணம், a mineral poison. It is one of the 64 kinds contemplated in Tamil Medical Science.

ஏம மணல், பொன் மணல், gold ore; gold alluvium.

ஏம மலை, பொன் விளையும் மலை, mountain containing gold-ore.

ஏம மாட்சிகம், பொன் னிமிளை, gold-pyrites.

ஏம மானோன், சூத பாஷாணம், a poisonous mercurial compound forming one of the 64 kinds described in Tamil Medicine.

ஏமம் இராத்திரி, night; 2. உன்மத்தம், bewilderment; any illusion; 3.பொன், gold; 4. மயக்கம், stupor; giddiness; 5. தங்கம், refined gold; 6. விபூதி, sacred ashes.

ஏம ரசக் களங்கு, அயச் செம்பும் அதற்குப் பாதி வங்கமும் நாகமும் சேர்த்துக் காரமிட்டு உருக்க மூன்று மொன்றாய் உருகி யுண்டாகுங் களங்கு. இது வாதத்திற்குப யோகப்படும், the product obtained by melting an alloy consisting of two of copper (extracted from a compound of iron by a special process), one of lead and one of zinc with borax, in a strong crucible to a required temperature. It is used in Alchemy for transmuting metals.

ஏம ரசத் துறை, ஏம ரசம் வைப்பு முறை, the secret method of preparing an alchemical compound with mercury as a chief ingredient. It is capable of converting base metals into gold; 2. பொன், இரசம் இவைகள் சேர்ந்த ஓர் உயர்ந்த செந்தூரம், a superior red oxide prepared with gold and mercury.

ஏம ரசம் நெருப்பிற்கு ஓடாத படிச் செய்து முடித்த இரச வெண்ணெய், mercury converted into a semi-solid

state so as to stand the test of fire; a kind of colloid mercury used in Alchemy.

ஏமரச வெண்ணெய், சூத வெண்ணெய், mercury converted into a semi-solid for using it in alchemy — Colloid mercury.

ஏமலி, see எமலி; 2. திலகம், a mark put on the forehead.

ஏமல், முதிரை, அதாவது அவரை, கொள் முதலியன, grain-plant, such as bean gram etc— Cereal; 2. மனக் கலக்கம், confusion of mind.

ஏம வதி, கடுக்காய், gall-nut — Chebulic myrobalan; 2. வசம்பு, sweet-flag — Acorcus calamus.

ஏம வாரி, மலைக் காளான், hill fungus.

ஏம வித்து, நாகமணல், zinc-ore; 2. ஈய மணல், tin-ore.

ஏமற் கோனியம், முதிரைக் கடலை, a species of pulse like bengal gram.

ஏமனா, see எருமை விருட்சம்.

ஏமனா ருதை, எருமை, buffalo. Title from being used as a means of conveyance by Yama, the God of death.

ஏம னீர், குமரி நீர் menstrual blood of a young woman; 2. பொன் னீர், any fluid containing gold in solution; 3.மஞ்சள் நிறமான மூத்திரம், high-coloured urine; 4. இழிந்த வுலோகங்களைப் பொன்னாக மாற்றக் கூடிய காய சித்தியானவர்களின் மூத்திரம், urine capable of transmuting base metals into gold. It refers only to the urine of those who have rejuvenated their system by habitually taking internally chemic- poisons.

ஏமன் கலப்பு, ஆடு தின்னாப் பாளை, worm killer — Aristolochia bracteata.

ஏமாங்கம், பொன்னிறம், gold colour; 2. கருடன், Brahiminy kite; 3. பருந்து, hawk.

ஏமாங்கிஷம், பொன் னிமிளை, iron-pyrites occuring in dary yellow nodules with a golden lustre.

ஏமாந்த கொங்கை, விம்மிய முலை, a distended breast through lust or by the mere touch of a male.

ஏமாப்பிரகம், பொன்னப்பிரகம், gold-coloured mica — Phlogophite.

ஏமின் கோலா, ஓர் வகைக் கோலா மீன், a garfish or garpike.

ஏரகம், ஆடு sheep.

ஏரகை, பெண்ணாடு, she-sheep.

ஏரங்கம், ஓர் வகை மீன், a kind of fish.

ஏரஸ் மரம், ஓர் வகை மேனாட்டு மரம், cedar-wood tree.

ஏரணம், ஆமணக்கு, castor plant —Ricinus communis.

ஏரண்டத் தைலம், ஆமணக் கெண்ணெய் அல்லது விளக் கெண்ணெய், castor -oil.

ஏரண்டத் தைல யோகம் ஆமணக் கெண்ணெயை உட்கொள்ள வேண்டி அத்துடன் பருகும் சிற்றா முட்டிக் கஷாயம், a preparation consisting of a mixture of the decoction of galangal and castor oil for taking internally.

ஏரண்ட புட பாகம், ஆமணக்கு விதைகளின் பருப்பைப் பசும்பாலில் வேக வைத்துத் துலர்த்தி மாவு போலரைத்து நெய்யிற் கலந்து கடைச் சரக்குகளைச் சம இடையாகச் சேர்த்துச் சர்க்கரைப் பாகில் கிளறி அப்பிரக பற்பத்தோடு உட்கொள்ளுவதற்காகத் தயாரிக்கப் பட்ட வோர் ஆயுள் வேத மருந்து, An Ayurvedic preparation forming a vehicle intended to be taken with calcined talc. It is prepared in the following way — the kernals of the castor seeds required for the purposes are boiled in cow's milk. They are then dried and made into a fine powder to which are added ghee and the prescribed bazaar drugs in equal weight to the original powder and the whole is then boiled in syrup sufficiently.

ஏரண்ட மூலாதிக் கியாழம், ஆமணக்குக் காய், ஆமணக்கு வேர், இவைகளுடன் வேறு மூலிகைகளின் வேர்களையும், கடைச் சரக்குகளையும் சேர்த்துத் தயாரித்த கஷாயம், a decoction prepared with castor seed, and castor- plant root as chief ingredients along with the roots of other prescribed plants and bazaar drugs.

ஏரண்டம், ஆமணக்கு, castor plant; 2. கண்ட பேரண்டம், the two headed bird supported to have lived in olden days; 3. வழலை, (In Alchemy) a secret term for elixir prepared from fuller's earth.

ஏரண்டாகி, பேராமணக்கு, see under ஆமணக்கு.

ஏரண்டாதிக் கியாழம், ஆமணக் கெண்ணெயுடன் பருகுவதற்காகத் தயாரிக்கும் கஷாயம், decoction intended to be taken along with castor oil.

ஏரண்டி, see ஏரண்டை.

ஏரண்டை, திப்பிலி, long-pepper — Piper longum.

ஏரத்தை, பிடரிக் காம்பு, a shrub (unidentified).

ஏரம், சத்திச் சாரம், a powerful alchemical salt prepared as per process laid down in Tamil Medicine. It is opposed to சிவ சாரம், which see.

ஏராத்தை, பேரரத்தை, greater galangal — Alpinia galanga (major).

ஏரலி, கொடிக் கள்ளி, a kind of spurge known as creeping milk-hedge — Sarcostermma brevistigma.

ஏரல், கிளிஞ்சல், a bivalve shell-fish — Mussel.

ஏரா, see ஏராக்கள்

ஏராக் கள், பனை மரத்துப் பாளையிலிருந்து இறக்கும் பனஞ் சார். அல்லது பதனி. இது தித்திப்பாயும், நீராகாரத்தைப் போலுமிருக்கும். கள்ளைப் போல் மயக்க முண்டாக்காது. இதற்கு மருந்துக் குணமுண்டு. இதை வெயிற் காலத்தில் குடிக்கக் குளிர்ச்சியைத் தரும். a sweet sap extracted from the spathe of the palmyra tree. It is mild and resembles rice-water but possess medicinal virtues. It forms a cool-drink in summer.

ஏரிக் கரைக் காட்டாமணக்கு, ஓர் வகைக் காட்டா மணக்கு, adul-oil plant — Jatropha glandulifera. See under ஆமணக்கு.

ஏரி நீர், ஏரியின் நீர், இது வாயுவை விருத்தி செய்யும், lake water which tends to increase the wind in the system; 2. ஐங்கோலச் செய நீர், an unknown liquid preparation used in alchemy.

ஏரிப் பிண்டம், காக்காய்ச் சிப்பி, black oyster — Rock - oyster.

ஏரியல், வன்னி மரம், suma tree — Prosopis spicigera.

ஏரிய வீரி, சவ்வீர பாஷாணம், a poison quivalent to corrosive sublimate — Hydrargyrum chloridum.

ஏரியால், கல்லுப்பு, natrual sea-salt.

ஏரியில் வளர்ந்த பிண்டம், கும்பிடு சிப்பி, a bi-valve shell-fish commonly found in tank beds.

ஏரி வாளை, ஏரிகளி லுள்ள ஓர் வாளை மீன், a water-fish found in lakes — Wallago atten.

ஏர், அழகு, beauty; 2. நற்சீரகம் cummin seed — Cumimum cyminum.

ஏலக்காய், ஏலம், அதாவது ஏலச் செடியின் காய்கள். இது கடையில் விற்கு மோர் வாசனைச் சரக்கு. இதன் தோல் வெள்ளையாயும், விதை கருப்பு அல்லது சாம்பல் நிறமாயும், வாசனை பொருந்தியதாயு மிருக்கும். the seed of the cardamom plant — Amonum cardamomum. It is an aromatic drug sold in bazaars. The capsules are white and the seeds inside are either black or gray.

ஏலக் கை, கற்கோவை, a hard species of caper — Bryonia (genus).

ஏலத் துவயம், மலை ஏலம், a large species of cardamom; hill cardamom; 2. இருவகை யேலம், the two kinds of cardamoms.

ஏலபீலி, கடுகு, mustard seed — Sinapis niger.

ஏலம், ஏலக்காய், இதன் செடி 6 — 9 அடி உயரம், இலை 1 — 2 அங்குல நீளம். பூக்கள் தனித்ததாயி ருக்கும். விதைகள் தோலினால் மூடப்பட்டிருக்கும். ஒவ்வொரு காய்க்குள் அனேக அரிசி களுண்டு. இது பயிராக்கப்படும் சில விடங்களில் இது தானாகவு முளைக்கும். காயுண்டாக, நான்கு வருஷம் செல்லும். பிறகு ஏழு வருஷம் வரையிலும் பலன் கொடுக்கும். நிறம், இடம் முதலியவைகளைக் கருதி இதில் பற்பல தினுசுகள் இருப்பினும்,

பொதுவாக இது காட்டேலம் அல்லது பெரிய ஏலம், சிற்றேலம் அல்லது ஏலரிசி யென அடியிற்கண்டபடி இருவகைப்படும். பெரிய ஏலத்தின் அரிசி சிகப்பாய் இருக்கும். சிற்றேலம் கபில நிறமாயும், . சில சமயங்களில் சாம்பல் அல்லது கருப்பு நிறமாயும், மிக்க வாசனையுள்ளதாயு மிருக்கும். காட்டேலம், கல்கத்தா, ஐதராபாத், பம்பாய் முதலிய வடதேசங்களிற் கிடைக்கும். சிற்றேலமோ, தென் தேசங்களுள் மலையாளத்தில் மிகுதியாகப் பயிராகும். கடைகளிலும் விற்கப்படும்.

இதைக் கறி வகைகளிற் சேர்ப்பதுண்டு. ஏலரிசி மருந்துகளில் மற்றச் சரக்குகளோடு சேர்க்கப்படும். தாம்பூலத்துடனும் அருந்தலாம். குடல் நோய்க்கும் வாந்தியை நிறுத்தவும் கஷாயமாக உபயோகிக்கலாம். வாசனைக்காகப் பலகாரங்களிலும் சேர்ப்பதுண்டு. இது வாய் நாற்றத்தைப் போக்குவதுமன்றி, வயிற்றுப் பொருமல், உஷ்ண பேதி, பித்தாதிக்கம், முதலியவைகளையும் சாந்தப்படுத்தும், cardamom — Elletaria cardamomum. The plant is 6 — 9 ft. high; enveloped in sheaths; leaves 1 — 2 in. long; flowers alternate and solitary at each point; pale greenish - white; seeds numerous; cultivated or gathered wild. It takes the plant four years to attain its full height when it begins on bear fruits and continues to yield till the seventh year.

Although there are different kinds considering the colour, the place of origin etc., it generally consists of only two varieties viz — the greater or the jungle cardamom and the smaller cardamom as mentioned below. The seeds of the first kind are red and those of the second kind are brown or sometimes grey or black with slight bitter taste and camphor smell. The bigger variety will be found in Calcutta, Hyderabad, Bombay and other places in the North, while the other smaller variety is grown in S. India chiefly in Malabar. They are sold in bazaars.

Cardamoms are much esteemed in condiments. As a cordial and stimulant they are frequently used in medicine and also in conjunction with other drugs. They are chewed with betel and areca-nut and are also used in decoction for bowel complaints and to check vomitting. The capsules are used to flavour sweet meats and

cooked dishes and also in foul-breath. They are found useful in several complaints such as rumbling noise in the stomach, diarrhoea, biliousness etc.

The different kinds are:

1. சிற்றேலம், small cardamom — Elleteria cardamomum.

2. பேரேலம், அல்லது காட்டேலம், greater cardamom or wild cardamom — Amomum subulatum.

NOTE: No. 1 is commercially known by different other names such as true cardamom, lesser cardamom, officinal cardamom, cluster cardamom, white cardomom, round cardamom,long Malabar caradmom and cardamon of the Greeks; No.2 by Ethiopian cardamom. Raven cardamom and jungle or hill cardamom.

NOTE: 2. It is reckoned as an anti-emetic. Greenish white cardamom grows abundantly both as wild and under cultivation in the moist shady mountain forests of North Canara. It is wild in Travancore and Cochin forests.

A volatile oil is produced from the seeds and from this Semina cardamom minoois and Fructus cardamomi are prepared by chemists.

ஏலம், மயிர்ச் சாந்து, a home-preparation for perfuming the hair; 2. சடா மாஞ்சில் Indian spikenard — Cyperus stolaniferous; 3. இசங்கு mistletoe herry-thorn — Azima tetracantha; 4. முதிரை, satin wood.

ஏலம் பிரகி, பிசின் பட்டை, common tallow laurel — Litsaea sebifera.

ஏலரிசி, செடியிலே காய்கள் வெடித் துதிர்ந்த வரிசி. இதுவே ஏலக்காய்க் குள்ளிருக்கும் விதை, seeds of cardamom scattered under the plant — Amomum cardamom. See ஏலக்காய்.

ஏல வாலுகம், ஏலம், வெட்டி வேர், வால் மிளகு முதலியவைகள் சேர்ந்த வோர் வாசனைத் திரவியம், an aromatic preparation consisting of cardamom, khus khus root, tail-pepper etc. as chief ingredients; 2. முசுமுசுக்கை rough bryony — Mukia scabrella; 4. வெள்ளிலோத்திரப் பட்டை, the fragrant bark of a tree — Feronia elephantum.

ஏல வாலுகை, பேரேலம், greater cardamom. See ஏலம்.

ஏலன், தினை யரிசி, millet — Panicum italicum.

ஏலா, see ஏலம், 2. பேரேலம், greater cardamom — Amomum subulatum.

ஏலாகம், குறுக்குக் கொடி, a creeper (unidentified).

ஏலாதி, ஏலம் சேர்ந்த மருந்து, இதில் கடுகம், கிருதம், வடகம், சூரணம் எனப் பலவகைகளுண்டு, medicine in which cardamom forms the chief ingredient. It is prepared in different forms such as tablets, electuary, oil powder, etc.

ஏலாதிக் கணம், ஏலம், வெட்டி வேர், நாகப் பூ, கருவாப்பட்டை முதலிய இருபத்திரண்டு சரக்குகளின் கலப்பு, a preparation consisting of a mixture of twenty-two drugs such as cardamom, khus khus root, Ceylon iron - wood, Ceyon cinnamon, etc.

ஏலாதிக் கியாழம், ஆமணக் கெண்ணெயுடன் உட்கொள்வதற்காக ஏலக்காய், யவட்சாரம், இந்துப்பு, இவைகளைக் கொண்டு தயாரிக்கும் கஷாயம், a decoction prepared from cardamom, nitrate of potash and rock salt for the purpose of taking it with castor-oil.

ஏலாதிக் கிருதம், ஏலத்தை முதன்மையாகக் கொண்டு மற்றக் கடைச் சரக்குகளோடு தயாரிக்கும் மருந்து நெய், a medicated ghee prepared from several bazaar drugs with cardamom as the chief ingredient.

ஏலாதிச் சூரணம், ஏலக்காயை ஆதியாக அதாவது முதன்மையாகக் கொண்டு, மற்றக் கடைச் சரக்குகளுடன் சேர்த் திடித்துத் தயாரித்த சூரணம் அல்லது தூள். இது பொதுவாகப் பல நோய்களுக்குக் கொடுக்கப்படும். ஆனால் கூட்டுச் சரக்குகளுக்குத் தக்கவாறு நோய்களைக் கண்டிக்கு மெனக் கருதப்படும், a medicinal powder prepared with cardamom as the chief ingredient, along with other bazaar drugs and prescribed by Veidyans in various ways according to the nature of the disease. The Efficacy is said to depend upon the nature of the drugs employed with, for the purpose.

ஏலாதிச் சூரணம், ஏலம் முதலிய சரக்குகளைக் கொண்டு செய்யு மோர் வகைச் சூரணம். ஆயுள் வேதத்தில் இது பற்பல விதமாகத் தயாரிப்பினும், தமிழ் வைத்தியத்தில், ஏலக்காய், சடா மாஞ்சில், கிராம்பு, சுக்கு, திப்பிலி முதலிய இருபத்து ஆறு கடைச் சரக்குகளைச் சமனிடையாகக் கொண்டு இடித்து, அதற்குச் சமன் சர்க்கரை சேர்த்துப் பசு நெய்யில் கலந்து கொடுப்பதுண்டு. இதனால் தாபம், கோபம், சுரம், ஈளை, இருமல், விக்கல், காமாலை, பலவீனம் முதலிய நோய்கள் அனுபானங் கண்டு கொடுக்க நீங்கும், a common name for cardamum powder mixed with other drugs. In Ayurveda, although this is prepred in several ways, in Tamil medicine, it is a medicinal powder with cardamom as the chief ingredient mixed with other twenty six bazaar drugs such as Indian spike-nard, cloves, dried ginger, long-pepper etc., taken in equal weights and powered. The powder is mixed with an equal quantity of sugar and then taken macerated in cow's ghee. It is given in different vehicles according to the nature of the diseases such as, thirst, fatigue, fever, asthma, cough, hiccough, jaundice, weakness or debility etc.

ஏலா பத்திரம், தக்கோலம், one of the aromatics chewed with betel, such as cardamom.

ஏலா பரணி, பறங்கிச் சக்கை, China root — Smilax China; 2. அரத்தை, cardamom leaved galangal — Alpinia galangal.

ஏலா வாலுகம், பேரேலம், greater cardamom — Amomum subulatum; 2. வால் மிளகு, tail- pepper — Piper cubeba.

ஏலா வாலுகை, see ஏலா வாலுகம்.

ஏலி, கள் toddy; 2. சங்கஞ் செடி, see ஏலு.

ஏலீகை, சிற் றேலம், see ஏலம்.

ஏலு.

ஏலுகம், சங்கஞ் செடி, mistletoe berrythorn — Azima tetracantha alais Monotia tetracantha; ஓர் வாசனைச் சரக்கு, a fragrant substance.

ஏலை, see ஏலம்.

ஏல், கிளிஞ்சில், a bivalve shell-fish; 2, துயிலெழுதல், to wake from sleep.

ஏல்வை, காலம், time; 2. நாள், day; 3. பொழுது, period.

ஏவல், பிசாசைப் பகைவர் மேல் ஏவி விடுதல், a black art in which the devils or other evil spirits are invited and induced to prevail upon one's enemies — Witch craft; 2. காளியின் ஏவற் காரப் பேய், a demon who serves the Goddess Kali as a messenger; 3. ஓர் தேவதை, the name of a Deity.

ஏவல் தோஷம், ஏவலினா லேற்பட்ட குற்றம், evils or morbid conditions in human beings arising from witch-craft.

ஏவல் வினை, சூனியத் தொழில் witch-craft.

ஏவறகன், அசம தாகம், which see.

ஏவறுகன், அதிமதுரம், which see.

ஏவறை, ஏப்பம், eructation, belch.

ஏவா கனம், see ஏவாங் கனம், 2. சங்கஞ் செடி, see ஏவு.

ஏவாங்கம், see ஏவாங் களம்; 2. ஓமம், omum plant — Anthum soma.

ஏவாங் கனம், அசம தாகம், which see.

ஏவாலுகம், கச்சோலம், the bark of cardamom tree.

ஏலி, தூதுவளை, three-lobed night-shade — Solanum trilobatum.

ஏவி விடல், பேயைத் தூண்டி மனிதரை அதட்டிப் பயமுறுத்தி வரும்படிச் செய்தல் the act of invoking an evil spirit and deputing it to frighten people, see ஏவல்.

ஏவு, வருத்தம், pain.

ஏழகம், ஆடு, sheep; 2. செம்மறி யாடு, ram or ewe of the common sheep; 3. துரு வாட்டேறு, a ram of the species of sheep called 'Duruvadu' (துருவாடு), a fleecy sheep.

ஏழற் பனை, மாஞ் சாரை, croton indigo — Agrostistachys longifolia.

ஏழாங் காய்ச்சலுப்பு, எழுதரம் தெளி விறுத்துக் காய்ச்சித் தீட்சை செய்த கல்லுப்பு, sea-salt dissolved, filtered and evaporated seven times; a refined sea-salt subjected to dissolution, filtration and evaporation seven times in the ordinary course.

ஏழாங் குட்டம், கழுத்தின் கீழ், கோதுமையைப் போல் சிவந்து தோன்றி மாறிப் பிறகு உடம்பு முழுவதும் உண்டாகு மோர் குட்டம், leprosy associated at the beginning with red-coloured patches below the neck and then with lesions spreading throughout the body.

NOTE: The term literally means the seventh stage of leprosy. According to Tamil Medical science, leprosy consists of ten stages and the symptoms at each stage very according to the development of the disease.

ஏழிலை, சரக்கொன்றை, Indian laburnam — Cassia fistula; 2. ஏழு பிரிவுகளை யுடைய இலை, a leaf with seven divisions or forks in it.

ஏழிலைக் கிழங்கு, பல் வலிக்காக உபயோகப்படும் ஓர் செடி, a velvetty seven - leaved tooth-ache climber — Xanthoxylom tetraspermum.

NOTE: This should not be confused with the Indian tooth-ache tree — Xanthoxylom alatum also called தும்புருச் செடி.

ஏழிலை நொச்சி, மயிலடி நொச்சி, seven-leaved pea-cock-foot tree or chaste tree — Vitex altissima.

NOTE: In chaste plant (நொச்சி), the three leaved and the five - leaved are the common varieties, but the seven leaved appears to be a very rare plant.

ஏழிலைப் பாலை, ஓர் பாலுள்ள மரம். உயரம் சுமார் 50 அடி; பூக்கள் வெளிர்ப் பச்சை; பழம் நீளம், மெல்லியது, பார்வைக்கு அழகா யிருக்கும். இது திருவாங்கூர், குற நாடு, ஆசாம் முதலிய நாடுகளில் பயிராகும்; மார்கழி, தை மாதங்களிற் பூர்க்கும்; மரம் வெண்மை, கசப்பு, பால் உள்ளது. ஆசாம் தேசத்தில் பெரிய மரமாக வளரும். இலைக்கு 5 7 பிரிவினைகளுண்டு. பட்டை $^{1}/_{2}$ அங்குலம் கனம். அடி மரத்தில் பால் வரும், இதன் பிசினைப் போன்ற பால் உறைந்து கெட்டிப் பட்டு விடும். இதன் பட்டையிலிருந்து பால் ஏராளமாய்க் கிடைக்கும். பால் பல விருத்தியை யுண்டாக்கும். குடல் நோய்களுக்குக் கொடுக்கலாம். பட்டையை நசுக்கித் தண்ணீரிற் குழைத்துக் கொப்புளங்களுக்கும், கை கால் பிடிப்புக்கும் பூசலாம். எண்ணெயில் கொதிக்க வைத்து, நசுக்கிய பருத்தி விதையோடு கலந்து காது செவிடுக்குப் பிழிவ துண்டு. இப்

பட்டை கனதியாயும், உட்புறம் நிறமாயும், சிறு கசப்புள்ளதாயும், கடற் பஞ்சைப் போல் மிருதுவாயு மிருக்கும். இதில் ஓர் விதச் சத்துண்டு. பட்டையின் வென்னீர்க் கஷாயம் நாட்பட்ட சீத பேதி, விடாக் காய்ச்சல், மலைச் சுரம் முதலிய நோய்களினா லேற்படும் பல வீனத்திற் குபயோகப்படும். இதன் வேர்ச் சூரணம், சூலை, குன்மம், குஷ்டம் முதலிய நோய்களைக் குணப்படுத்தும். இதன் பாவனத்திரவம், அண்ட விருத்தி, இரணம் கிருமி நோய் முதலியவைகளைக் கண்டிக்கும். இது மாதர்களினால் மலரும் பத்து வித மரங்களு ளொன்று, இது பெண்களின் நட்பினால் மலரும். இப் பூவின் வாசனை, யானைகளுக்குதவாது, (seven - leaf - milky plant) seven - leaved milky plant — Alstonia scholaris alias A. oleandraefolia. It is a stiff- branched tree. Height 50 ft. flowers greenish - white; follicle very long and slender. a handsome white tree. It is found in Travancore, Coromandel, Assam and other places; flowers in December and January; the wood is bitter to taste; the whole plant abounds in milky juice. In Assam, the tree grows to a large size. Leaves 5 — 7 in a whorl. Stem gives a kind of gutta - percha.

The bark (known as dita - bark) which yields a milky juice is a powerful tonic and is much used in bowel complaints. Bruised and mixed with water. It is applied to ulcers and it is also externally used in rheumatic pains. The bark is boiled in oil and applied with bruised cotton seeds to ears in deafness.

The bark is thick and internally coloured, bitter and soft like sponge. Ditamin is the active principle contained in the bark. An infusion of the bark is useful in cases of debility as a tonic to persons suffering from chronic dysentery, obstinate fever, malaria etc. The powdered root is prescribed by Veidyans for gout, dyspepsia, leprosy, etc. The tincture is used in testicle complaints, wound and other diseases arising from worms or germs.

It forms one of the ten kinds of trees supposed to blossom or bloom under the influence of or by the excercise of analogous power in women. This tree is said to bloom from the love of women who approach it. The smell of its flowers is highly repugnant to elephants.

NOTE: Flowers emit a sickening smell which pervades the air about sun-set; the bark is an astringent, a tonic and an anthelmintic, alterative and antiperiodic.

The tree obtained its name 'scholaris' from its planks being used as school- boards on which children write their alphabets using sand.

NOTE: 2. It is a common tree of the Philippines where it is used as a tonic and as an intermittent fever remedy. 'Ditain' is another poisonous alkaloid and it is obtained from dita-bark.

ஏழிலைப் பிரண்டை, காட்டுப் பிரண்டை, seven - leaved vine — Vitis pedata.

ஏழிலைப் பின்னை,
ஏழிலைப் புன்னை, see ஏழிலைப் பாலை.

ஏழிலை மயிலை, காட்டு மயிலை, இதுவே மயிலடி நொச்சி, pea-cock foot tree, See ஏழிலை நொச்சி.

ஏழிலைம் பாலை, ஏழிலைப் பாலை, இது ஏழு வகைப் பாலைகளுள் ஐந்தாவது பாலை, the fifth of the seven kinds of milk plants (paulay) described under ஏழு பாலை.

ஏழிலைம் பூதம், நெருப்பு, fire.

ஏழிலை யிலவு முள்ளிலவு, seven - leaved cotton — Bombax malabaricum.

ஏழிலை வள்ளி, ஆள் வள்ளிக் கிழங்கு, see ஏழிலைக் கிழங்கு.

ஏழிலை வாழை, ஏழிலைப் பாலை, which see.

ஏழு கோட்டை, சப்த தாது, இதற்குள் உயிர் வசிப்பதாகச் சொல்வ துண்டு, the seven consitutent parts supposed to be the fortifications of the human body wherein. lies the seat of the soul.

See ஏழுவகைத் தாது.

ஏழு சுண்ணக் குகை, சட்டை முனி வாத காவியத்திற் சொல்லி யுள்ள ஏழு வித சுன்னத்தினாற் செய்த மூசை. இது வேதைக்காக உலோகங்களை யுருக்க உபயோகிக்கப்படும். strong and fire-proof crucible made of a mixture of seven kinds of calcium compounds and used in alchemy for heating metals to a high temperature,

for purposes of melting them, as crucible ordinarily made are considered quite unsuitable for this purpose. For details see Sattamuni's works on Alchemy.

ஏழு தாது, see ஏழு வகைத் தாது.

ஏழு பாலை, ஏழு விதப் பாலைகள் அவையாவன: (1) செம்பாலை, (2) படுமலைப் பாலை, (3) செவ்வழிப் பாலை, (4) கரும்பாலை, (5) ஏழிலைப் பாலை, (6) விளரிப் பாலை (7)கொடிப் பாலை, the seven kinds of Paulai (milky plants) as enumerated above,

NOTE: The correct botanical names of these cannot be determined with accuracy as the term பாலை, refers to names of different botanical groups and the plant பாலை, it itself in general, called by 15 different botanical names viz (1) Mesua ferrea, (2) Sideroxylon tomentosum, (3) Dichopsis ellipitca (4) Mimusops hexandra, (5) Mimusops kauki (6) Mimusops balata, (7) Alstonia scholaris (8) Holarrhena antidysenterica (9) Tabernaemontana dichotoma (10) Wrightia tinotoria (11) Wrightia tomentosa, (12) Cryptostegia grandiflora (13) Dregea volubilis (14) Crytocarya wightiana and (15) Litsaea Zeylanica.

ஏழுபுட மிட்டது, ஏழு புடமிட்ட சாதிலிங்கம், வன்னி கற்பம், முதலியன, those referring to a classs of medicines such as, vermilion and other mercurial compounds derived after subjecting them to calcination for seven times.

ஏழுசிக் காந்தம், ஒன்றின் கீழ் ஒன்றாக ஏழுசிகளைப் பிடிக்க வல்ல ஓர் வகைக் காந்தம், a powerful magnet capable of attracting seven needles which hang one below the other.

ஏழை, பெண் woman; 2. அறிவீனன், one weak in intellect.

ஏழைச் சாகிதம், வள்ளிக் கிழங்கு, sweet potato — Ipomaea digitate.

ஏழ்ச்சி, see எழுச்சி.

ஏழ் பிறப்பு, see ஏழு பிறப்பு.

ஏற, அதிகமாக, in excess.

ஏறக் குறைய, முன் பின்னாக அல்லது கூடக் குறைய, approximately or nearly equal to or in excess of.

ஏறடம், அதி மதுரம், which see.

ஏறடயம், see ஏறடம்.

ஏறண்டம், மேலேறச் செய்யக் கூடிய ஓர் விதக் குடலண்ட வாதம், hermia in which the protrusion can be restored by pushing it up by taxis (manipulation) — Reducible bernia. It is opposed to இறங்கண்டம், irreducible hernia; 2. குமுர லண்டம், a rupture with a gurgling noise.

ஏறத் தாழ, see ஏறக் குறைய.

ஏற லண்டம், see ஏ றண்டம்.

ஏற லெண்ணெய், ஏறழிஞ்சிற் தைலம், இது மாந்திரீகத்திற் குதவும், a medicated oil prepared from sage- leaved alangium. It is used in magic.

ஏறல், கிளிஞ்சில், bi-valve shell fish; 2. விஷம் ஏறுதல், being diffused through the blood as is a poison etc.

ஏறழிஞ்சில், ஓர் வகை அழிஞ்சில் மரம். இதில் பழம் விழுந்த வுடனே மறுபடியும் மேலுக் கெழும்பிக் கிளையில் போய் ஒட்டிக் கொள்வதனாலிப் பெயர், sage-leaved alangium — Alangium lamarckii. It is so called from the notion that when its fruit falls down, it rises again and sticks to the branch it fell from. It is opposed to இறங்கழிஞ்சில், which see.

ஏறிய வீரி, சவ்வீர பாஷாணம், corrosive sublimate or perchloride of mercury — Hydrargyri perchloridum.

ஏறி வற்றல், பிண்டம், fetus.

ஏறு, இடி thunderbolt; 2. எருது bull; 3. எருமை, பசு மான் முதலியவற்றின் ஆண், the male of beasts in general especially of buffalo, cow, deer etc., 4. ஆண் புனை the male palmyra tree; 5. சிங்கம், lion; 6. சுறா, shark; 7. தழும்பு, a scar or a wound — Cicatrix.

ஏறு கழலை, தழும்பி லுள்ள சதை பாகம், அதிகமாக வளர்ந்து ஏற்படும் ஓர் கழலை, a hard tumour formed by excessive growth of the tissue of a scar — Hypertrophic cicatrix.

ஏறு கெண்டை, குரக்கு வலி, a cramp in which the rigid contraction is persistent — Tonic spasm. It is opposed to இறங்கு கெண்டை, the spasm in which the rigidity is followed by relaxation — Clonic spasm.

ஏறு கொடி, மேலெழும்புங் கொடி, இது மூன்று விதம் அவையாவன — பின்னற் கொடி, கம்பிக் கொடி, படர் கொடி, a climbing creeper. In Botany it consists of three kinds viz — twining plant climbing plant, spreading or creeping plant.

ஏறு சலாகை, சோதிக்க வேண்டிய புண் புரைகளில் உட் புகும்படி உபயோகிக்கும் சலாகை, an instrument designed for introducing into a wound or cavity for purposes of exploration.

ஏறு சன்னி, மூளையைத் தாக்கும் சன்னி, effusion of blood into the brain substance — Cerebral apoplexy.

ஏறு சுரம், அதிகப்படும் சுரம், progressing fever; 2. நீடித்த சுரம், a long - continued fever.

ஏறு சிங்கி, see ஏ றழிஞ்சில்.

ஏறு செடி, செடியைப் போல் அடர்ந்து மேலெழும்பும் செடி, a shrubby climbing creeper.

ஏறுதல், அதிகப் படல், to increase; 2. உட்போதல், to pass in; 3. உயருதல், rising high; 4. மேற் போதல், going up.

ஏறு நெற்றி, அகன்ற நெற்றி, steeple head which is characterised by great height of the forehead sloping to a pointed vertex — Tower head; an unusually high vertical index — Oxycephaly.

ஏறு நோய், குணப்படாது அதிகப்படும் நோய், a progressive disease without showing any marked symptoms of cure.

ஏறுபனை பனை யேறி மென்னு மோர் வகை யம்மை, a virulent type of small. pox.

ஏறு பித்தம், உடம்பில் அதிகமாக ஏற்பட்ட பித்தம், excessive secretion of bile; 2. தலைக்கேறிய பித்தம், bile with an upward tendency to the head.

ஏறு பெட்டி, கருப்ப நீர் பெட்டி, the innermost fetel membrane, forming the bag of water — Amniotic sac.

ஏறு பைத்தியம், படிப் படியாக நாளா வட்டத்தில் அதிகப்படும் ஓர் அசாத்தியப் பைத்தியம், a slowly progressing chronic mental disease or disorder marked by the presence of systematized delusions, which are build up in a logical from — Paranoia.

ஏறு பொழுது, இள நேரம், fore-noon — 2. காலை நேரம், morning time.

ஏறு மாறு, ஏற்றத்திற்கு மாற்றம், impediment to progress; 2. உண்மை நெறியினின்று மாறுதல், deviation from the path of truth or justice; 3. குழப்பம், disorder; 4. இயற்கைக்கு விரோதம், contrary to nature c.f. தாறு மாறு, 5. வயிற்றி லேற்படும் குழப்பம், disordered contidion of the stomach.

ஏறு முகங் கூர் கொள்ளல், எழுங்கோப மிகுதியாதல், to become more excited.

ஏறு முகங் கூறு கொள்ளல், எழுங் கோபத்தை யடக்கிக் கொள்ளுதல், to bear up or control anger; to suppress exciting or irritating anger.

ஏறு முகம், வளரு நிலை, waxing state as opposed to இறங்கு முகம், waning state; 2. கோபாவேச முகம், angry face; 3. ஊர்த்துவ முகம், anything facing upwards.

ஏறும் பனை யேறி, ஓர் விதப் பெரியம்மை, a severe type of small-pox. See ஏறு பனை, It is opposed to இறங்கு பனை, which see; See also பனை யேறி.

ஏறு வலி, அதிகப்படும் வலி, increasing or progressive pain; 2. நாட்சென்ற வலி, chronic pain.

ஏறு வாதம், கழ லேறு வாதம், வாதத்தினால் இருப்பிடத்தை விட்டு நழுகி அண்டத்திற்குள் புகுந்த குடலைக் கையால் அழுத்த, அது மேலுக்கேறி அடிவயிற்றுக்குள் புகும் a rupture in which the bowels which descended into the scrotum return or is returned to the cavity of the abdomen by manipulation — Reducible hernia. See ஏறண்டம்.

ஏறு வாயு, இரண்டு விதையையும் அடிவயிற்றி லிழுத்துப் பிடித்துக் கொண்டு, வயிற்றில் ஒரு பக்கமும் நிமிர வொட்டாமல் எந்நேரமும் ஏப்பமிட்டு, வாந்தி யெடுத்து, மலம் தீய்ந்து, குளிர் சுர முண்டாக்கு மோர் நோய், இது புருடர்களின் விதையைப் பற்றிய ஆறு வித வாயுக்களி லொன்று, a disease in which both the testicles are held up in the scrotum due to to sudden muscular contraction in the abdominal region. It is marked by inability to stand or sit erect, constant belching and vomiting, parched stools, fever etc., According to Indian science, is one of the six kinds of diseases of the testicles.

ஏறு வால், நீண்ட வால், long tail.

ஏறு வெயில், காலை வெயில், morning or rising sun; 2. முற் பொழுதின் வெயில், sun-shine in the fore-noon. It is opposed to இறங்கு வெயில், evening sun-shine.

ஏறெடுத்தல், தலை நிமிர்தல், to be in an upright or a perpendicular posture; 2. உயர்த்துதல் to heighten.

ஏறெடுத்துப் பார்த்தல், நிமிர்ந்து பார்த்தல், looking straight in the face.

ஏற்காப் புணர்ச்சி, இணங்காத புணர்ச்சி, a sexual intercourse without the consent of the woman.

ஏற்கைப் புணர்ச்சி, இருவரு மனமொத்த புணர்ச்சி, an intercourse effected with mutual consent.

ஏற்பு, சன்னி, tetanus.

ஏற்றக் குறைச்சல், சுமார் high or low i.e. more or less; approximation.

ஏற்ற முள்ள கன்னி, ஏகம்பச் சாரம், which see.

ஏற்றம், இலிங்க பாஷாணம், which see; 2. இலா மிச்சை வேர், kus kus root; 3. மிகுதி, excess; 4. எழும்புதல், rising; 5. நீரேற்றம், accumulation of water in the system or in a particular organ; 6. இங்குணம், which see.

ஏற்றம் வற்றல், மிகுதியாக வுள்ளது குறைவு படுதல், the decrese of anything which is on the increase; a decrease from an abnormal quantity.

ஏற்றல், ஊசி ஏற்றல், thrusting a needle into the body for introducing a liquid medicine; to inject.

ஏற்றவாறு, முறைப்படி, proportionately.

ஏற்றுக் குறி, ஆண் குறி, the penis.

ஏற்றுப் பனை, ஆண் பனை, the male palmyra tree.

ஏற்றைப் பனை, see ஏற்றுப் பனை.

ஏற்றோற்றம், காலை அல்லது உதய முதல் 10 நாழிகை வரை, the period from sun-rise till 10 A.M.

ஏனக் கொம்பு, வெதுப்படக்கி, a plant — Ballota disticha; 2. பன்றிக் கொம்பு. இது ஓர் உபரசச் சரக்கு, hog's horn. It is one of the 120 kinds of natural bodies or substances contemplated in Tamil Medicine.

ஏனக் கோடு,
ஏனக்கோடுகம்,
ஏனக்கோடுகி, வெறுப்படக்கி, see ஏனக் கொம்பு.

ஏனத்துப்பால், பன்றிப் பால், the milk of the pig which cannot be procured.

ஏன மதம், மான் மதம், அதாவது கஸ்தூரி, musk.

ஏன முத்து, பன்றிக் கொம்பிற் பிறந்த பச்சை நிற முத்து, a green pearl - like substance said to be derived from the hog's horn.

ஏன முள், பன்றி முள், the spine of a porcupine.

ஏனம், பன்றி, pig; 2. காட்டுப் பன்றி, a wild hog; 3. தினை யரிசி, millet; 4. நெய், தைலம், முதலியவைகளைக் கொள்ளும் பாத்திரம், a vessel for holding ghee medicated oil etc. 5. திராவகம் முதலியவற்றை இறக்க வுபயோகிக்கும் பாத்திரம், a vessel for receiving gases in distillation; a receiver; 6. ஓர் வகை மான், a species of deer.

ஏனல், கதிர், a ear of corn; 2. செந்தினை, red millet; 3. பைந்தினை, green millet; 4. கருந்தினை, black millet; 5. தினைப் பயிர், millet plant in general.

ஏனாதி, ஓர் வகை லேகியம், a kind of electuary; 2. நாவிதன் barber.

ஏனை, மலங்கு மீன், a fish resembling a serpent; eel — Anguilla.

ஏன், பன்றி, see ஏமை.

ஐ

ஐ சவ்வீர பாஷாணம், corrosive sublimate — Hydrargiri perchloridum; 2.கபம், கோழை, phlegm; 3. கப நோய், bronchitis; 4. இருமல், cough; 5. அழகு, beauty; 6. சிலேட்டுமம், according to Indian medicine, one of the three humours or fluids of the body; 7. வெண்ணெய், butter; 8. கடுகு; mustard — Sinapis niger; 9. சர்க்கரை sugar; 10. சன்னி; apoplexy; 11. பெருநோய், leprosy;

12. கம்மாறு வெற்றிலை, a dark-green betel leaf; 13. சாமந்தி, chamomile — Anthemus nobilis; 14. தும்பை, bitter leucas — Leucas aspera; 15. பருந்து, bawk; 16. தண்ணீர்க் காணான் இலை, a plant wish leaves without water or moisture in them; 17. ஐந்து, five; 18. மை, collyrium, c.f.

"ஊட்டியே ஐதனை வாங்கிக் கொண்டு
உத்தமனே மாவிலிங்கச் சிமிழில் வைத்து"
(கருலு. கெவுன சூஸ்தி)

ஐ, கலவை, சிலேட்டுமம், phlegm.

ஐகாக்கிரன், ஒரே மனதுடையவன், a man of singleness of mind or aim.

ஐகாரம், (ஐ + காரம்) see ஐங்காரம்.

ஐக்கண சூலை, (ஐ + கண சூலை) குழந்தைகளுக்குக் காணும் சிலேட்டுமத்தாற் பிறந்த வோர்வகைக் கணச் சூலை, a from of tabes in new born infants attended with piercing pain arising from phlegmatic causes. See ஐங்கணச் சூலை.

ஐக்க நரம்பு, ஒற்றுணர்வு நரம்பு, sympathetic nerve. See ஐக்கிய நரம்பு.

ஐக்கம், ஒட்டுகை, cohesion; 2. ஒன்றிப்பு, unity; oneness; 3. ஆன்மாவே கடவுள் என்பது, indentification of the human soul with the Deity.

ஐக்கிய நரம்பு, அனுதாப நரம்பு, sympathetic nerve, see ஐக்க நரம்பு.

ஐக்கிய நிலை, ஒன்றிப்பு அதாவது இணக்கமடைந்த நிலை (In Orcult Science) hypnotic state induced by personal magnetism; 2. ஆன்மா பிரமத்தில் ஒடுங்கும் நிலை, (In Yoga Philosophy) that stage or condition in which a yogi sitting in Samadhi attains absorption by identifying himself with the Unity.

ஐக்கியப் படுதல், ஒன்று படுதல், becoming absorbed in one.

ஐக்கியப் படுத்தல், தன் வழிக்கு இணங்கும்படிச் செய்தல், the act of influencing another as is done in hypnotism.

ஐக்கியப் பெரு நரம்பு, பெரிய ஒற்றுணர்ச்சி நரம்பு, the great sympthetic nerve.

ஐக்கியம், see ஐக்கியம்.

ஐக்கிய வாதி, மனோ வல்லமையால் ஒருவரைத் தன்னிச்சைக்கு இணங்கும்படிச் செய்வோன், one who excercises influence over another by his will power or by virtue of a mysterious power — Mesmerist.

ஐக்கி யாத்தும ஞானி, வேதாந்தக் கேள்வியினால் தன்னையும் கடவுளையு மறிந்த ஞானி, a Vedantic philosopher who has studies himself and the Spirit.

ஐக்குஞ்சு, தண்ணீர் மிட்டான் கிழங்கு, water-root — Asparagus racemosus.

ஐக்குரம், கருப்பஞ் சாற்றினாற் செய்த கருந்தேன், a black syrup prepared out of the juice of sugar-cane.

ஐங்கணச் சூலை, see ஐக்கணச் சூலை

ஐங்கணு, ஐந்து கணுக்கள், five tubercles — Quinque tubercle.

ஐங்கணுக் கள்ளி, ஐந்து கணுக்களையுடைய ஓர் கள்ளி, a spurge with five knots or joints.

ஐங்கணைச் செயல், காம விகாரத்தின் தூண்டுதலினாற் செய்யும் தொழில்கள் அவையாவன: the five different kinds of actions attributed to sexual passion and they are:—

1. பெரு மயக்கு, great fascination.

2. சிந்தாகுலம், அதாவது மிக்க வியாகூலம், great anxiety or sorrow.

3. புணர்ச்சிக் இணங்கல் inclination to intercourse.

4. மோகனம், loss of senses.

5. சந்தாபனம், growing hot with desire.

6. வசிகரணம், influencing or alluring one.

ஐங்கணை யவஸ்தை, பஞ்ச பானா வங்கை அதாவது மனிதர்களுக்குக் காமத்தினால் ஏற்படும் ஐந்து வித உபாதிகள் அவையாவன: the five physical and mental changes brought about in men from leve-sickness and they are:

1. சுப்பிர யோகம் - பேசாது ஒழியா நினைவு, constantly thinking of the person loved without giving utterance or expressions to it.

2. விப்பிர யோகம் — பெருமூச் செறிந்து வருந்துதல், sighing and lamenting owing to the absence or separation of lovers.

3. சோகம் - வெதும்பி மயங்கி உணவு வெறுத்தல், feverishness and swoon from the effects of love and aversion to food.

4. மோகம் — ஆசைப் பெருக்கால் அழுதல், அல்லது பிதற்றல், weeping or wailing from uncontrollable lust or lasciviousness and bewilderment.

5. மரணம் - உயிர் சோர்தல், மயங்குதல், fainting and collapse from excess of sexual passion.

ஐங்கரனாயி, கௌரி பாஷாணம், a kind of poisonous compound.

NOTE: The term which refers to the mother of Ganesha or otherwise Gowri, is used here euphemistically.

ஐங்கரன் மெச்சு மிலை, வில்வம், the leaf of the lingam tree — Crateave religiosa.

ஐங்கனி, ஐந்து விதப் பழங்கள் அவையாவன: the five kinds of fruits viz:

1. எலு மிச்சை lime — Citrus medica acida,

2. நாரத்தை, bitter orange — Citrus aurantium.

3. மாதுளை, pomegranate — Punica granatum.

4. தமரத்தை square tamarind — Averrhoa carambola.

5. கொளுஞ்சிக் கிச்சிலி, orange — Citrus aurantium (nobilis).

ஐங் காயக் கரு, பிரம முனி சூத்திரம் 300-ல் சொல்லியுள்ள வோர் கரு மருந்து, a magic paint contemplated in the work of "Brahmamuni 300" See அங்காயம்.

ஐங்காயக் கனி, வழலையுப்பு, the quintessence salt.

ஐங்காயக் கூறு, ஐந்து விதச் சம்பாரச் சரக்குகளின் பகுதிகள், the five constitutent parts in the mixtures of drugs. See ஐங்காயம்.

ஐங்காய செய நீர், பிண்ட செய நீர், a strong pungent fluid extracted from a foetus.

ஐங்காயத் தயிலம், ஐந்து மாதத்திய தலைப் பிண்டத் தயிலம், an oil extracted from the first born foetus five months old.

ஐங்காயத் தூள், ஐந்து விதச் சரக்குகள் சேர்ந்த பிரசவ மருந்து, இது தான் பிள்ளை பிறந்தவுடன் பெண்களுக்குக் கொடுக்கப்படும் காய வுருண்டை, a medicinal preparation consisting of five ingredients prescribed for women immediately after child, births as a preventive (prophylactic) to ward off puerperal complications.

See ஐங்காயம்.

ஐங்காய மெழுகு, மூன்று மாதத்தியத் தலைச்சன் பிள்ளைப் பிண்டத்தை யெடுத்து அதனின்று தயாரிக்கும் மெழுகைப் போன்ற வோர் வகை மருந்து, a cerate or a glutionus preparation out of the first conceived male fetus thre month's old, by a secret process known only to Siddhars.

NOTE: This is supposed to be used generally in Magic and in Alchemy.

ஐங்காயம், தலைப் பிள்ளைக் கருவைக் கொண்டு தயாரித்த ஓர் மெழுகு, a wax-like preparation derived by a secret process from the first fetus extracted from a woman's womb; 2. ஐந்து விதச் சம்பாரச் சரக்குகள் சேர்ந்த கூட்டு மருந்து. அவையாவன: உள்ளி, கடுகு, சுக்கு, பெருங்காயம், மிளகு a mixture or an electuary consisting of five vegetable stimulants, such as garlic, mustard, dried ginger, asafoetida, and pepper, see ஐங்காயக் கூறு, 3. மஞ்சள், கடுகு, வெள்ளுள்ளி, காயம், வெந்தயம் முதலிய ஐந்து சரக்குகள் சேர்ந்த பிரசவ மருந்து, a pulverised mixture of the five stimulants viz — turmeric, mustard, garlic, asafoetida and dill-seed. This is given to women soon after delivery. See ஐங்காயத் தூள், 4. பஞ்ச மலம், the five evils attached to the soul; 5. ஐந்து மாதத்தில் இறந்த தலைப் பிண்டத்தை யெடுத்து, மயிர், சவ்வு, முதலியவைகளைப் போக்கிக் காய வைத்து உரலில் இடித்து எடுத்த தூள், a powder obtained from the first- born dead foetus five months old, by the following process — the said fetus whether brought out by accidental miscarriage or by one caused voluntarily by the introduction of abortive drugs is to be selected for the following purpose. The hairs, mucous, membranes etc thereon have

to be removed and the mass then dried in the sun until the moisture is completely freed; it is then to be transferred to a mortar and reduced to powder; 6. ஐந்து வகைப் பாஷாணங்களைக் குறிக்கும் பரிபாஷை, a technical term indicating a group of five kinds of poisons viz:

1. அரிதாரம், orpiment - Auri pigmentum.
2. இலிங்கம், cinnabar or vermilion — Mercuric sulphide.
3. கௌரி, yellow oxide of arsenic.
4. வீரம், corrosive sublimate — Mercuric chlorid.
5. வெள்ளை, white arsenic — Arsenous anhydride (AS_2O_3)

ஐங்காய வண்ட மெழுகு பிண்டத்தின் தலையினின்று செய்யு மெழுகு, the term refers to the wax-like preparation made from the head of the foetus. See ஐங்காய மெழுகு.

ஐங்காரம், ஐந்து வகைக் கார வஸ்துக்கள்.

1. வெண்காரம், borax — Sodae biboras.
2. சீனக் காரம், alum — Ammonia alum.
3. சவர்க்காரம், fuller's earth.
4. காடிக்காரம், lunar caustic — Argenti nitras.
5. அப்பளாகாரம், sub-carbonate of soda obtained from soda earth (pooneer).

ஐங்காவியம், அகத்தியர் செய்த ஐந்து பெரு நூற்காவியங்களின் கருத்துக்கள் அடங்கிய பஞ்சு காவிய நிகண்டு யென்னு மோர் வைத்திய நூல், a medical vocabulary forming the key note to the five great sceinces compiled by Agastiya viz — alchemy, medicine, magic, yoga, and philosophy.

See பஞ்ச காவிய நிகண்டு.

ஐங் குகை, see ஐந்து சுண்ணக் குகை.

ஐங்குரம், see ஐக்குரம்.

ஐங் கூட்டுக் கஷாயம், ஐந்து வகைச் சரக்குகள் சேர்த்து இறக்கிய கஷாயம், a decoction extracted from a mixture of five drugs.

ஐங்கூட்டு நெய், see ஐங் கூட்டெண்ணெய்.

ஐங்கூட்டெண்ணெய், புங்கு, ஆமணக்கு, எள்ளு, வேம்பு, இலுப்பை முதலிய வைந்துஞ் சேர்த்து வடித்த எண்ணெய், a mixture of five kinds of oils viz — Indian Beech, castor, gingelly or sesamum, margosa and poon.

ஐங்கோசம், பஞ்ச கோசம், அவையாவன: (in Hindu philosophy) the five cases or sheaths which envelope the soul viz:

1. அன்ன மய கோசம், the gross material body sustained by food —as one of the investitures or supports of the soul.
2. பிராண மய கோசம், the vital external organs supposed to invest the soul.
3. மனோ மய கோசம், the mental organs with the faculty of thought operating through the senses and supposed to invest the soul.
4. விஞ்ஞான மய கோசம், the spiritual faculty with means of discernment which envelope the soul.
5. ஆனந்த மய கோசம், the state of insensibility produced by excessive joy or ecstasy — being one of the forms in which the soul is manifested.

ஐங் கோணக் கள்ளி, ஐந்து கோணமாக வுள்ள இலைகள் வாய்ந்த கள்ளி, five-angled spurge — Euphorbia neriifolia.

ஐங் கோணம், ஐந்து கோணம் அல்லது மூலைகளையுடைய சக்கரம். இது அடியிற் கண்டபடி ஐந்து கோடுகளினால் ஆக்கப்பட்டு, அதில் ஒவ்வொரு கோடும் குறுக்காகப் பாய்வதனால் நட்சத்திர வடிவத்தைப் போன்றதாய், ஐங்கோணங்க ளமையும்படி வரையப்பட்ட ஓர் யந்திரம். இது மானிட தேகத்தி லுள்ள நான்கு அங்கங்களையும், அதற்கு மேலுள்ள தலைப் பாகத்தையும் குறிக்கும், மேலும் அண்டத்தைப் போன்றது பிண்டம் என்பதைக் குறிக்க

வந்த அடையாள முமாகும். இது ஏழு வித லோகம் சேர்ந்த கலப்பைக் கொண்டு அல்லது சுயத் தங்கத்தில் அடித்த தகட்டில் அமைக்கப்பட வேண்டும்.



தற்காலத்தில் இதன் மகிமை விளங்காவிடினும், பூர்வ காலத்தில் நம் முன்னோர்கள் இந்த யந்திரத்தை, வாதம், வைத்தியம், மாந்திரீகம், முதலிய வித்தைகளில் கையாண்டு வந்ததாகத் தெரிகிறது. இம் மாதிரியே, மேனாட்டிலும், இதை மிக்கச் சக்தி வாய்ந்த தெனக் கருதி மேற்கண்ட வித்தைகளில் உபயோகித்து வந்த விஷயம் அடியிற் கண்ட குறிப்பினால் தெரிய வரும். Pentagram or pentale. It is a figure consisting of five straight limes so joined and intersecting as to form a five-pointed star. It is also a figure of the human body with the four members and a point representing the head. The sign of this figure is called also the sign of the microcosm. It should be formed of or engraved upon a plate consisting of an alloy of seven metals or one of pure gold.

Although very little is known by the present generation of its miracles, it was formerly used with great advantage and success in Alchemy. Medicine, Magic etc. So were its uses in Europe during the Middle ages, as could be gathered from the note given below.

NOTE: Pantagram is the star of the Epiphany and the one which Magi saw in the East, It is the burning star of the Cnostic schools and the sign of intellectual omnipotence and autocracy. This star of absolute and universal synthesis gives a head to the four quarters of the world and also gives to the sciences their absolute synthesis and opens to the aspirations of man the fifty gates of knowledge (c.f. ஐம்ப்தோ ரட்சரம்)

It expresses the mind's domination over the elements. It is by this sign that we find the demons of the air, the spirits of the fire, the spectres of water and the ghosts of the earth. This absolute sign is

as old as or is older than history and exercises an incalculable influence on the souls disengaged from their material envelop. Spirits may be forced to appear as in dreams either during waking hours or during sleep. It is also said that the Pentegram with two of the horns in the ascendant or upwards represents Satan and with those horns turned downwards. It is the sign of the Saviour. Its use is most dangerous to operators who do not completely and perectly understand it.

NOTE 2: The double triangel of Solomon composed of two inter-laced triangles, forming the six-pointed star *(அறு கோணம்)* is the sign of Macrocosmos, but it is less powerful than the Pentagram the Microcosmic sign as explained in Hermetic philosophy (Mysteries of magic)

ஐங் கோலக் கரு, தலைப் பிண்டக் கரு, an essence obtained or extracted from the first born foetus of a woman.

ஐங்கோல சங்கினி, சங்கினி சாதிப் பெண்ணின் தலைப் பிண்டத்தி னின்று தயாரிக்கும் செய நீர், a liquid extract obtained from the salt prepared from the foetus (first born) of the third class women called 'sangini', classified according to age and lust, described in the erotic science.

ஐங் கோல செய நீர் ஐந்து மாதத்திய தலைப் பிண்டத்தை வாங்கி அதனின்று உப்புச் சத்தெடுத்து, அவ்வுப்பை மற்ற சரக்குகளோடுச் சேர்த்து இரவில் பனியில் வைக்கக் கசியும் செய நீர், a liquid of an acrid nature obtained by exposing to the night dew the salt extracted from the first-born fetus five month's old and mixed with other ingredients.

ஐங்கோலத் தளாவி, ஏறழிஞ்சில், which see.

ஐங்கோலத் தெண்ணெய், see **ஐங் கோலத்தைலம்.**

ஐங் கோலத் தைலம், ஐந்து மாதத்திய தலைப் பிண்டத்தினின்று வடிக்குந் தைலம், an oil extracted from the first born fetus five month's old; 2. **அழிஞ்சில் தைலம்,** which see.

ஐங்கோல நீர், see **ஐங்கோல செய நீர்.**

ஐங்கோல நெய், see ஐங்கோலத் தைலம்.

ஐங்கோலப் பிண்டம், ஐந்து மாதத்தியத் தலைப் பிண்டம், the first-born foetus five month's old, whether accidentally or voluntarily aborted.

ஐங்கோல மை, அழிஞ்சில் விதையி னின்று, தயாரிக்குமோர் வித வசிய மை, a magic paint or pigment prepared by magicians for getting a person into one's power or under his influence; 2. கருப் பிண்டத்தினின்று தயாரிக்கும் வசிய மை, a black plant prepared by magicians and others for occult purposes. This paint is generally worn on the forhead between the eyebrows. It is used in necromancy witch-craft, sorcery, etc.

ஐங்கோலம், கருஞ் சீரகம், கடுகு, ஓமம், நிம்ப வித்து, இலுப்பை விரை முதலிய வைந்து அல்லது சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், சித்திர மூலம் முதலிய வைந்து சரக்குகளின் கலப்பு, a mixure of five drugs consisting of black cumin, mustard, sison, margosa and mohwah seeds or five other drugs viz —dried ginger, long-pepper, roots of long pepper and black pepper and leadwort; 2. அழிஞ்சில், which see; 3. தலைப் பிள்ளைக் கரு, the first born foetus.

ஐங்கோல விருட்சம், see அழிஞ்சில்.

ஐசம், கோழை, saliva mixed with mucous.

ஐசில நாகப்பூ, சிறு நாகப்பூ, serpent champak — Mesua ferrea.

ஐசிலம், சிறு நாகம், சிறு நாகப்பூ, see ஐசில நாகப்பூ, 2. இருள் மரம், which see.

ஐசிலன் பாசி, ஐசுலாந்து தேசத்துப் பாசி, a crystalline form of calcium carbonate — Iceland moss.

ஐசு, மல்லிகை மொக்கு, jasmine bud.

ஐஞ் சத்தி, பஞ்ச சத்தி, அவையாவன; the five female energies of Siva viz;

1. ஆதி சத்தி, the primordial Sakthi or power.

2. பரா சத்தி அல்லது சிற் சத்தி, the most powerful of the manifestations of the female energy of the deity.

3. இச்சா சத்தி அல்லது உயிர்க் கருணேசம், a female energy of the deity inclined to benevolence to souls or creatures.

4. கிரியா சத்தி, one of the female energies responsible for the creation or the evolution of the Universe.

5. ஞானா சக்தி, the energy with a knowledge of actions performed by souls and that with power which exists as the five senses.

ஐஞ் ஞார்த்தகம், ஐம்புலன்களை யடக்கித் தியானத் திருத்தல், that meditation attended with the subjugation of the five senses.

ஐணம், see ஏணம்.

ஐணேயம், பெண் மானின் தோல்,தசை முதலியன, the skin, flesh etc of a bind.

ஐது, அழகு, beauty; 2. இளகிய தன்மை, fluidity.

ஐதுகி, காட்டாமணக்கு, physic-nut plant — Jatropha curcas.

ஐதுவைசூரி, அடர்த்தி யில்லாது கலக்கப் பூட்டும் அம்மை, a form of small - pox in which the pustules remain more or less distinct and separate — Discrete Variola.

ஐத்தம், ஓங்காரம், the sacred letter 'OM'

ஐநார், (ஐ + நார்) நார் போன்ற கபம், a phlegmatic disease in children in which the phlegm can be drawn into long elastic fibres. See ஆயி நார்.

ஐந்தஃகல் பஞ் சேந்திரியங்களை ஒடுக்குதல், curtailing the five senses and restricting thier activities to a limit.

ஐந் தடக்குதல், பஞ் சேந்திரியங்களை அடக்கி ஆளல் the control of the five senses.

ஐந் தட்சரம், see ஐந் தெழுத்து.

ஐந்தமுதம், பஞ் சாமிர்தம், அவையாவன: சர்க்கரை, தயிர், தேன், நெய், பால் (lit) the five nectors i.e. the five sweet substances viz. sugar, curd, honey, ghee and milk.

ஐந்தரம், பனை, palmyra.

ஐந்தரு, see ஐங்கோலச் செய நீர்.

ஐந்தவத்தை, சாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், the five local positions or the five states of the soul in the body. See அவத்தை.

ஐந்தவம், காட்டுச் சீரகம், wild cumin — Serratula anthelmintica alias Vernonia anthelmintica.

ஐந் தவித்தல், ஐம் பொறியடக்கல், see ஐந்தடக்குதல்.

ஐந்தறுகு, ஐந்து வித அறுகம்புல், the five kinds of Arugu grass — Agrostis linearis.

See அறுகு.

ஐந்தாங் காய்ச்சலுப்பு, ஐந்து தரம் காய்ச்சி யெடுத்துத் தீட்சை செய்து வெடியுப்பு, nitre which is purified by boiling it five times.

ஐந்தாங் குட்டம், உட லெங்கும் சிறிச் சிவந்து குறுங் கற்கள் போலச் சிவந்த கட்டி களை எழுப்பு மோர் வகைக் குட்ட நோய், the fifth stage of leprosy in which the lesion consist of erythema all over the body and pebble- like leproma or nodules.

ஐந்தாரிகம், களா மரம், a thorny shrub bearing an edible black fruit; Bengal current — Carrisa carandas.

ஐந்தார், பனை see ஐந்தரம்.

ஐந்திடம், see ஆறாதாரம்.

ஐந்திணை, அன்புடைக் காமம், the closest love between husband and wife.

ஐந் திந்திரியம், மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய பஞ்சேந்திரியம், the five sensory organs of the body viz — body, mouth eye, nose, and ear.

ஐந்திர சாலிகன், இந்திர சாலம், மகேந்திர சாலம், முதலிய மாய வித்தைகளைச் செய்வோன், one who is proficient in the art of magic such as illusion, clairvoyance etc., including jugglery, legerdemain and other adroit tricks.

ஐந்திர சீலி, அலரி, which see; 2. ரோஜா, rose-flower.

ஐந்திரம், ஓர் வெள்ளரி, a species of cucumber; 2. ஏலம் cardamom.

ஐந்திரி, ஓர் மரம், an unknown tree.

ஐந்திரியகம், இந்திரியங்களால் அறியப்படுவது, that which is perceived by the five senses.

ஐந்திரியம், பஞ்சேந்திரியம், the five sense organs. See இந்திரியம்.

ஐந்தி லவணம், ஐந்து வகை யுப்புகள் அவையாவன: கல்லுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, கறி யுப்பு, the five kinds of salts viz: sea-salt, nitre, glass gall, Sindh salt, and common salt.

ஐந்து, சிறு கடுகு, small mustard.

ஐந்துகீ லறுகு, யானை யறுகு, elephant grass —. Typha elephantina.

ஐந்து சாரம், see ஐந்து வகைச் சாரம்.

ஐந்து சுண்ணக் குகை, ஐந்து வகைச் சுண்ணங்களைக் கூட்டிச் செய்த மூசை. இது உலோகங்களை உருக்கவும், மற்றும் வேதைச் சரக்குகளை வைத்து எரிக்கவு முபயோகப்படும். a melting pot or crucible made of earth mixed chiefly with five kinds of calcium compounds strong with other substances. This crucible is capable of enduring extreme heat and a severe and scorching test and so it was formerly used by chemists, alchemists and others for melting metals and other alchemical compounds requiring a high temperature. See ஐந்து சுண்ணம்.

ஐந்து சுண்ண செயநீர், ஐந்து வகைச் சுண்ணங்களைக் கொண்டு தயாரிக்கு மோர் வகை செய நீர், a strong pungent liquid prepared from a mixture of five calcium oxides and other compounds.

ஐந்து சுண்ணம், கடல் நுரை, கிளிஞ்சில், குக்குடம், வலம்புரி, வெள்ளைக் கல், முதலியவைகளை நீற்றிய சுண்ணங்கள், calcium carbonates obtained by calcining seafroth, bivalve-shell. egg-shell, conch (turning to the right) and lime-stone; 2. நண்டு, நத்தை, சங்கு, வெடியுப்பு, கடல் நுரை, ஆகிய இவ்வைந்தையும் தாளித்த சுண்ணாம்பு, (மச்ச. நிகண்டு) lime (chunam) obtained by burning the following five substances viz. crab-shell, snail shell, conch, nitre, and sea-froth.

ஐந் துணவு, see ஐந் துண்டி.

ஐந் தண்டி, ஐந்து வகையால் உட்கொள்ளு முணவு, அவையாவன: கடித்தல், மெல்லல்,

விழுங்கல், பருகல், நக்கல், food differentiated according to the manner in which they are taken in viz — bitting; chewing, swallowing, drinking and licking.

ஐந்து திரவியம், ஐந்து விதங்களாகக் கிடைக்கும் மருந்தச் சரக்குகள் அவையாவன: கடல் படு திரவியம், காடு படு திரவியம், மலை படு திரவியம், நாடு படு திரவியம், நகர் படு திரவியம், (In Medicine) drugs obtained from five sources, viz — sea, forest, mountain country and city.

ஐந்து புலன், see ஐம்புலன்.

ஐந்துப்பு, see ஐந்து லவணம்.

ஐந்து முத்திரைத் தகடு, பண்டைக் காலத்தில், வாத முறையிலும், வைத்திய முறையிலும் உபயோகிப்பதற்காக வழங்கி வந்த வோர் வகைச் செம்புத் தகடு, a copper plate supposed to bear five stamps, sold in bazaars and used by Veidyans in medicine and alchemy in olden days.

ஐந்துரு, ஐந்தாவது பிறந்த குழந்தை, the fifth child born to a woman; 2. ஐந்து மாதப் பிண்டம், a foetus five month' old.

ஐந்துரு தயிலம், see ஐங்கோலத் தைலம்.

ஐந்துருவி லண்டம், ஐந்து மாதத்திய பிண்டத்தின் தலை யோடு, the skull of a foetus five month's old; 2. உழலை, which see.

ஐந்துருவி ஞப்பு, ஐந்து மாதப் பிண்டத்தினின்று எடுக்கும் உப்பு, a salt extracted from the foetus five month's old by a special process laid down in Tamil siddhar's Science.

ஐந்து வகைத் திரவியம், see ஐவகைத் திரவியம்.

ஐந்து வசியம், அகஸ்தியர் மாந்திரீக காவியத்திற் சொல்லியுள்ள ஐந்துவித வசியங்கள் அவைகளாவன: the five kinds of magic contemplated in Agastya's works on Magic, used for five different purposes viz:

1. ஆண் வசியம், one for attracting males.
2. பெண் வசியம், one for influencing females.
3. உலக வசியம், one for swaying the world.
4. மிருக வசியம், one for controlling the animal kingdom (especially cruel or wild beasts).
5. பூதகண வசியம். one for governing the spirits, devils etc.

ஐந்து வெண்டை, ஐந்து வித வெண்டைக்காய் கள், the five varieties of lady's fingers.

1. சுணை வெண்டை, bendy with prickles — Hibiscus esculents.
2. மெழுக்கு வெண்டை, one without prickles of the variety in NO.1
3. கஸ்தூரி வெண்டை, musk-mallow — Hibiscus abelmochus.
4. காட்டு வெண்டை, wild musk-mallow — Hibiscus ficulneus.
5. மலை வெண்டை, hill bendy — Hibiscus collinus.

ஐந்து வெள்ளரி, ஐந்து வகையான வெள்ளரிக்காய்கள், the five different species of cucumber viz

1. கக்கரி வெள்ளரி, field cucumber — Cucumis melo alias C.utills simus.
2. கசப்பு வெள்ளரி, country cucumber — Cucumis trigomus.
3. சுணை அல்லது முள் வெள்ளரி, common cucumber — Cucumis sativus.
4. மலை வெள்ளரி, hill cucumber.
5. நரி வெள்ளரி, fox cucumber — Cucumis momoridica.

ஐந்து வெற்றிலை ஐந்து வகை வெற்றிலைகள், the five varieties of leaves of betel vine viz

1. கற்பூர வெற்றிலை, அல்லது வெள் வெற்றிலை, camphor betel, a sweet-scented betel.
2. கம்மாறு வெற்றிலை, dark, thick leaved and pungent betel.
3. மஞ்சள் வெற்றிலை, yellow betel.
4. மலை வெற்றிலை, hill-betel.
5. வெற்றிலை, ordinary betel — Piper betel.

ஐந்து வேதை, ஐந்து வகுப்பாகக் கொள்ளப்பட்ட வேதை முறைகள், the five different processes held secret in the transmutation of metals in to gold.

1. சிடிகை வேதை, a simple process of preparing gold.

2. மாற்றுயர்வு வேதை, the method of refining or purifying inferior gold.

3. கட்டு வேதை, the art of consolidating, volatile substances for purposes of melting them so as to be used in Alchemy.

4. தூம்பிர வேதை, the process of transmuting metals into gold by fumigation i.e. applying a strong smoke.

5. பரிசன வேதை, the complicated method in the preparation of gold by chemical process.

ஐந்து வேர்ப்பட்டை see அஞ்சு வேர்ப்பட்டை.

ஐந்துறுப் படக்கி, நான்கு பாதங்களையும் தலையையும், ஒடுக்கிக் கொள்ளுந் தன்மையுடையதான ஆமை, torotise which is capable of withdrawing inside its four feet and the head when alarmed.

ஐந் தெண்ணெய், see ஐங் கூட் டெண்ணெய்.

ஐந்தெண்ணெய்த் தயிலம், பிண்டத் தயிலம், the oil extracted from a foetus five month's old; 2. ஐங்கூட் டெண்ணெயில் இரசம், கெந்தி, தாளகம், மனோசிலை, இலிங்கம் முதலிய சரக்குகளைப் பழங்காடியிலரைத்துச் சேர்த்து இறக்கும் தைலம். இதை, சன்னி, சீதளம் முதலிய நோய்களுக்கு உடம்பினிற் தேய்க்கக் குணமாகும். a medicated oil prepared by grinding a mixture of mercury, sulphur, orpiment, red-arsenic and cinnabar in old vinegar, and then boiling the product in a mixture of five oils. It is used in delirium cold, etc. as an embrocation.

ஐந்தெழுத்து, பஞ்சாட்சரம், ந. ம. சி. வ. ய. the five sacred letters — NA. MA. SI. VA. YA.

ஐந்தை, see ஐந்து; 2. சிறு கடுகு, small mustard.

ஐந்நாள் குளித்தல், பூப்பிற்குப் பின்பு அதாவது மாத விடாயான ஐந்தாம் நாள் தலை முழுகல், to bathe for purification on the fifth day after puberty or menses.

ஐமலம், பஞ்ச மலங்கள் அவை யாவன; (In Philosophy) the five evils attached to the soul viz:

1. ஆணவம், pride or arrogance, an inherent principle of the soul lasting until its final liberation.

2. கன்மம், retributions or fruits of actions in former births — Karma.

3. மாயை, illusions as divided into absolute and non-absolute.

4. வைந்தவம், the principle of lust?

5. திரோ தாயி, the female energy of the deity, which is operative in veiling the understanding and leading the soul to the perormance of various actions.

See ஐம் மலம்.

ஐமிச்சம், அச்சம், fear.

ஐ மித்திரம், (ஐ + மித்திரம்) ஐந்து வகை நட்புச் சரக்குகள், the five kinds of active drugs; 2. (சவ்வீரம் + மித்திரம்) வீரத்திற்கு மித்துருச் சரக்காகிய சூதம், (In Alchemy) mercury which is considered as a positive drug of corrossive sublimate.

ஐ மீன் மங்கை, see ஐங்கணைக் கள்ளி.

ஐமுகி, ஆமணக்கு, castor plant; 2. காட்டா மணக்கு, see ஐதுகி.

ஐமையடி, வளைவில்லாத தட்டையான அடி, a foot with a flat sole and sunken tarsus — Flat-foot.

ஐம், கடுகு, mustard.

ஐம்பதம், ஒன்றரைப் படி, (அளவு), a measure and a half.

ஐம்பத்தோ ரட்சரம், பெரிய அலைகளி னின்று சிறு அலைகள் பிரிவன போல் பெரும் சப்தத்தி னின்று கொப்பளித்துச் சிறு சிறு ஒலிகள் ஏற்படும். இவ்வொலிகள் தான் 51 அட்சரங்கள். இவ் வட்சரங்கள் ஓர் உருவ மெடுத்தது தான் அம்பிகையின் வடிவம், as small waves present themselves from the bigger ones, so are the small sounds emerge from the greater ones. These

small sounds are represented by fifty one letters, which when considered as a whole or otherwise taken collectively are said to have assumed the form of the great Sakthi (Universal energy).

NOTE: These letters are interpreted as the fifty one forms of 'nadham' forming the seeds of the lotus of the heart on which the Lord Siva rests as fragrance.

''ஐம்பத்தோ ரெழுத்தெல்லா மோ
ரெழுத்தேயாகி
அண்டபிண்டத் தானாகி யமர்ந்த
நாதன்''

(சப்பிர. ஞானம்)

ஐம் பருத்தி, ஐந்து விதப் பருத்திகள் *அவையாவன:* (a) the five kinds of cotton (Gossypium Genus) and they are:

1. பருத்தி அல்லது வெண் பருத்தி, common or white cotton — Gossypium herbaceum.

2. செம்பருத்தி, brazil cotton — Gossypium barbadense.

3. உப்பம் பருத்தி, swell cotton — Gossypium vitifolium.

4. தாளிப் பருத்தி, creeper cotton, another variety of Gossypium.

5. இலாடன் பருத்தி, upland Georgian cotton — Gossypium herbaceum (hirsutum).

(b) பருத்தியைப் போன்ற ஐந்து வகைகள், the five different kinds resembling cotton and they are:

(1) பூப் பருத்தி, flowering cotton — Thespesia populnea.

(2) வேலிப் பருத்தி, hedge cotton — Daemia extensa.

(3) எருக்கம் பருத்தி, madar cotton — Calotropis gigantia.

(4) பேய்ப் பருத்தி, devil's cotton — Abroma angusta.

(5) காட்டுப் பருத்தி, golden silk-cotton — Cochlespermum gossypium.

NOTE: Although all these are termed பருத்தி, they belong to different botanical groups as mentioned above.

ஐம்பால், பெண் மயிர், the hair of a female.

ஐம்புகை, நாகம் Zinc.

ஐம்புரசு, ஐந்து வகைப் புரசு *அவையாவன:—* the five kinds of palans viz—

1. புரசு, battle of Plassey tree — Butea frondosa.

2. வெண் புரசு, white-flowered palaus a very rare variety of No.1

3. கரும் புரசு black palaus — Dalbergia oojeinensis.

4. இலைப் புரசு, அல்லது சீனப் புரசு, China palaus, another variety.

5. படர்ப் புரசு, creeping palaus — Butea superba.

ஐம்புல நுகர்ச்சி, பஞ்சேந்திரிய அநுபவம், experience or enjoyment of the five sense.

ஐம்புலம், பஞ்சேந்திரியம், *அவையாவன:* சப்தம், பரிசம், ரூபம், ரசம், கெந்தம் எனப்படும், the five sensory organs such as those of hearing, touch, sight, taste and smell.

ஐம்புல விடயன், பஞ்சேந்திரியங்களை விஷயங்களிற் செலுத்தி வரும் இல் வாழ்வான், one in a married life enjoying the pleasures of the five senses — Materialist.

ஐம்புல நடக்கல், see ஐம்புல **ஔறுத்தல்.**

ஐம்புல ஔறுத்தல், பஞ்சேந்திரியங்களை யடக்கி வெல்லுதல், subduing the five senses by abstinence, penance etc. Mortification of the five senses.

NOTE: This can only be done by those who are given up to meditation and no meditation is possible unless one transcends the limitations of Rajas and Tamas. It is only the attaintment of Satwa that could take him to a high spiritual plane wherefrom there is no return.

ஐம்புல நுகர்ச்சி, ஐம்புலன் *அநுபவம்,* experiences or enjoyments through the five senses.

ஐம்புலன், மெய், வாய், கண், மூக்குச் செவி யாகிய ஐந்து பொறிகள், the five organs of senses, such as body, mouth, eyes, nose and ears.

ஐம்புலன் விழையான், துறவி அல்லது பஞ்சேந்திரியங்களினா லுறும் இன்பங்களை வெறுத்துக் குடும்பத்தி னின்று விலகியவன், an ascetic i.e. one who has renounced the world, forsaking the sensual pleasures.

ஐம்புலன் வென்றோர், ஞானிகள், முனிவர், ரிஷிகள், சித்தர்கள் முதலிய பெரியோர்கள் the great men who have subdued their five senses forming the physical nature of man, such as the Philosophers, the Rishis, the Siddhars etc.

ஐம்புலன் வென்றோன், பஞ்ச பட்சி பாஷாணம், a kind of arsenical poison; 2. ஐம் பொறிகளை அடக்கி ஒரு நிலையில் நிற்கும் யோகி, a yogi who has subdued all his five senses.

ஐம்புன்னை, ஐந்து வகைப் புன்னை அவையாவன— the five kinds of poon tree viz:

1. புன்னை அல்லது புன்னாகம், common poon or Alexandrian laurel — Calophyllum inophyllum.

2. சுர புன்னை, soora poon or fragrant poon — Ochnocarpus longifolius.

3. காட்டுப் புன்னை, Malabar poon — Calophyllum tomentosum.

4. சிறு புன்னை, small poon — Calophyllum wightianum.

5. மூவிலைப் புன்னை, three-leaved poon — Desmodium viscidum.

ஐம்பூதக் கழிவு, உடம்பினின்று வெளிப்படும் பூத சம்பந்தமான வஸ்துக்கள் அவையாவன: the five kinds of excretions from the human body classified according to the five elements and they are:

1. பிருதிலி (earth) — மலம் feces.

2. அப்பு (water) — அமுரி, urine.

3. தேயு, (fire) — நாதம் menstrual blood.

4. வாயு (air) — முலைப்பால், mother's milk, and உமிழ் நீர், saliva.

5. ஆகாயம், (sky) — விந்து the seminal fluid.

ஐம்பூதக் கார சாரம், ஐம்பூதப் பிரிவின்படி வகுக்கப்பட்ட கார சார வகைகள், the five kinds of salts (acid + alkali) classified according to five elements and they are:

1. பிருதிலி (earth) — வெடியுப்பு nitre.

2. அப்பு (water) — கல்லுப்பு, sea salt.

3. தேயு (fire) — வளையலுப்பு glass-gall.

4. வாயு (air) — சீனம் alum.

5. ஆகாசம் (fly) — பூ நீறு pooneer (salt from fuller's earth).

ஐம்பூதக் கூறு, உடம்பினுள் ளமைந்த தத்துவங்களில் பஞ்ச பூதத்தின் சார்பாக ஏற்பட்ட ஐந்து வகைப் பிரிவுகள் அவையாவன: the constituent parts (Tatwas) in the system, reduced to the order of five elements viz:

1. பிருதிலி (earth) மயிர், எலும்பு, தோல், தசை, நரம்பு, hair, bone, skin, flesh (muscles) and nerve.

2. அப்பு, (water) — மூத்திரம், இரத்தம், மூளை, வெண் சதை, மச்சை, urine, blood, brain matter, membrane and marrow.

3. தேயு (fire) ஆகாரம், துஞ்சல், பயம், சோம்பல், போகம், food, sleep, fear, laziness and pleasure or enjoyment.

4. வாயு (air) கிடத்தல், இருக்கை, நடத்தல், இருத்தல், lying, resting, walking living.

5. ஆகாயம் (sky) காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம், the five dispositions of the mind.

see அகத்தாறு பகை.

ஐம்பூதச் சரக்கு, — பஞ்சபூதப் பிரிவினைப்படி வகுக்கப்பட்ட சரக்குகள், the drugs divided according to the order of five elements viz—

1. பிருதிலி (earth) — மிருதாரசிங்கி, Murdarsing.

small sounds are represented by fifty one letters, which when considered as a whole or otherwise taken collectively are said to have assumed the form of the great Sakthi (Universal energy).

NOTE: These letters are interpreted as the fifty-one forms of 'nadham' forming the seeds of the lotus of the heart on which the Lord Siva rests as fragrance.

''ஐம்பத்தோ ரெழுத்தெல்லா மோ
ரெழுத்தேயாகி
அண்டபிண்டத் தானாகி யமர்ந்த
நாதன்''

(சப்பிர. ஞானம்)

ஐம் பருத்தி, ஐந்து விதப் பருத்திகள் *அவையாவன:* (a) the five kinds of cotton (Gossypium Genus) and they are:

1. பருத்தி அல்லது வெண் பருத்தி, common or white cotton — Gossypium herbaceum.

2. செம்பருத்தி, brazil cotton — Gossypium barbadense.

3. உப்பம் பருத்தி, swell cotton — Gossypium vitifolium.

4. தாளிப் பருத்தி, creeper cotton, another variety of Gossypium.

5. இலாடன் பருத்தி, upland Georgian cotton — Gossypium herbaceum (hirsutum).

(b) பருத்தியைப் போன்ற ஐந்து வகைகள், the five different kinds resembling cotton and they are:

(1) பூப் பருத்தி, flowering cotton — Thespesia populnea.

(2) வேலிப் பருத்தி, hedge cotton — Daemia extensa.

(3) எருக்கம் பருத்தி, madar cotton — Calotropis gigantia.

(4) பேய்ப் பருத்தி, devil's cotton — Abroma angusta.

(5) காட்டுப் பருத்தி, golden silk-cotton — Cochlespermum gossypium.

NOTE: Although all these are termed பருத்தி, they belong to different botanical groups as mentioned above.

ஐம்பால், பெண் மயிர், the hair of a female.

ஐம்புகை, நாகம் Zinc.

ஐம்புரசு, ஐந்து வகைப் புரசு *அவையாவன:—* the five kinds of palans viz—

1. புரசு, battle of Plassey tree — Butea frondosa.

2. வெண் புரசு, white-flowered palaus a very rare variety of No.1

3. கரும் புரசு black palaus — Dalbergia oojeinensis.

4. இலைப் புரசு, அல்லது சீனப் புரசு, China palaus, another variety.

5. படர்ப் புரசு, creeping palaus — Butea superba.

ஐம்புல நுகர்ச்சி, பஞ்சேந்திரிய அநுபவம், experience or enjoyment of the five sense.

ஐம்புலம், பஞ்சேந்திரியம், *அவையாவன:* சப்தம், பரிசம், ரூபம், ரசம், கெந்தம் எனப்படும், the five sensory organs such as those of hearing, touch, sight, taste and smell.

ஐம்புல விடயன், பஞ் சேந்திரியங்களை விஷயங்களிற் செலுத்தி வரும் இல் வாழ்வான், one in a married life enjoying the pleasures of the five senses — Materialist.

ஐம்புல னடக்கல், see ஐம்புல னறுத்தல்.

ஐம்புல னறுத்தல், பஞ் சேந்திரியங்களை யடக்கி வெல்லுதல், subduing the five senses by abstinence, penance etc. Mortification of the five senses.

NOTE: This can only be done by those who are given up to meditation and no meditation is possible unless one transcends the limitations of Rajas and Tamas. It is only the attaintment of Satwa that could take him to a high spiritual plane wherefrom there is no return.

ஐம்புல னுகர்ச்சி, ஐம்புலன் அனுபவம், experiences or enjoyments through the five senses.

2. அப்பு, (water) - வெள்ளை arsenic.

3. தேயு (fire) - வீரம் corrosive sublimate.

4. வாயு (air) இலிங்கம், vermilion.

5. ஆகாயம் (air) சூதம், mercury.

ஐம்பூதத் தழை, பஞ்சபூதக் கிரமப்படிப் பிரிக்கப்பட்ட ஐந்துவிதத் தழைகள், the five kinds of foliiages divided according to the five elements viz.

1. பிருதிவி (earth) செம்பாலை, rosy milk wort — Asclepias rosea and புளியாரை, Indian sorrel - plant Oxalis corniculata.

2. அப்பு (water) துரா, king of herbs Fumaria parviflora and பீநாறி fetid plant — Sterculia fetida.

3. தேயு, (fire) - கரந்தை, a sweet basil Ocimum basilicum and குமரி, aloe Aloe vera (officinalis).

4. வாயு, (air) - கவிழ் தும்பை, stooping plant Leucas procumbens and காசான், iron-wood tree — Memecylon edule.

5. ஆகாயம் (sky) - காஞ்சொறி, nettle plant — Tragia involucrata and சங்கன், monetia — Azima tetracantha.

ஐம் பூதத்தினடு, நெருப்பு, fire. It is so called from its occupying a middle place in the order of five elements.

ஐம்பூத நிறம், பஞ்சபூத நிறம், the colour of the five elemetns viz:

1. பிருதிவி (earth)- பொன் னிறம், gold- colour.

2. அப்பு (water) - பளிங்கு நிறம் crystal colour.

3. தேயு (fire) - செம்பு நிறம் copper colour.

4. வாயு (air) - கருப்பு நிறம், dark colour.

5. ஆகாயம் (sky) - புகை நிறம் smoke colour.

ஐம்பூத பாஷாணம், பஞ்ச பூதப் பிரிவின்படி வகுக்கப்பட்ட ஐந்துவகைப் பாஷாணங்கள், the five kinds of poisons classified and reduced to the order of the five elements viz:

1. பிருதிவி (earth) - கெந்தி sulphur.

2. அப்பு (water) - வீரம், corrosive sublimate.

3. தேயு (fire) - கௌரி, yellow oxide of arsenic.

4. வாயு (air) - துரிசி, blue vitriol.

5. ஆகாசம் (sky)- இலிங்கம், vermilion.

ஐம் பூதம், மண், சலம், நெருப்பு, காற்று, வெளி எனப் பூதங்கள், ஐந்தெனக் கொள்ளப்பட்டாலும், சில தத்துவ சாஸ்திரிகள், நான்கு என்றே சொல்லுகிறார்கள். எப்படி யெனில், ஆகாயத்திற்கு உருவ மில்லாத படியாலும், அது மற்றெந்தப் பூதத்தோடு சேருகிறதோ அதன் குணமே யன்றி அதற்கு வேறு சொந்தமான குண மில்லாததாலும் அதைப் பூதமன்றென ஒழித்துப் பூதங்கள், நான்கெனக் கூறுவதுண்டு, the five elements viz earth, water, fire, wind and sky. Although the elements are classifeid into five kinds, some philosophers hold that there are only four and exclude the sky for the reason that it takes on only the quality of that with which it is associated.

NOTE: Fire, air, earth and water are consituted in a man, and man is a world containing the said elements and all the various priciples which consitute the minerals, the vegetable and the animal kingdom.

ஐம்பூத வாயு, வியானன், கூர்மன், கிருதரன், தேவ தத்தன், தனஞ்சயன், ஆக உடம்பினுள் ளிருக்கும் ஐம் பூதத்திற்கு ஆதாரமான ஐந்து வாயுக்கள், the five vital airs in the human body supposed to be very essential to the five elements by which the body is sustained.

NOTE: These are the five vital airs out of the ten தசவாயு existing in the body and controlling the actions of the several organs.

ஐம்பூத வுபரசம், ஐம்பூதப் பிரிவினைப்படி வகுக்கப்பட்ட உபரசச் சரக்குகள், the natural

substances classified according to the order of the five elements and they are:

1. பிருதிலி (earth) சிலாசத்து, அப்பிரகம், காந்தம், பூ நாதம், இராசவர்த்தம் crystallised foliated gypsum, mica, magnet, red earth worm and lapis lazuli.

2. அப்பு (water) சங்கு, கோழி முட்டை, நாகர வண்டு, கிளிஞ்சில், நண்டு, conch, fowl's, egg, snail, bivalve shell and crab.

3. தேயு, (fire) எலும்பு, இந்திர கோபம், மயி லிறகு, நிமிளை, வெண்கலம், bone, lady's fly, pea-cock's feather, bismuth and bell-metal.

4. வாயு (air) - சாத்திர பேதி, கல் நார், கல் மதம், அன்ன பேதி, உரோமம், a mineral dissolvent, asbestos, bitumen, green-vitriol and hair.

5. ஆகாயம், (sky) வைக்கிராந்தம், துத்தம், இரச பாஷாணம், சுக்கான், as inferior diamond, white-vitriol, mercurial poison, and limestone.

ஐம் பூத வுப்பு, கார சாரப் பஞ்ச பூத வகுப்பிற் சேர்ந்த வுப்புக்கள், அவையாவன, salts reduced to the order of the fire elements viz;

1. பிருதிலி (earth) - வெடியுப்பு, nitre.

2. அப்பு (water) - கல் துப்பு sea - salt.

3. தேயு, (fire) - வளையலுப்பு glass - gall.

4. வாயு (air) - சீனம் அல்லது படிகாரம், alum.

5. ஆகாசம் (sky) - பூ நீறு fuller's earth. See ஐம் பூத கார சாரம்.

ஐம்பூத வுலோகம், பஞ்ச பூதக் கிரமப்படி வரையறுக்கப்பட்ட ஐந்துவித உலோகங்கள், the five kinds of elementary metals classified according to the nature of the five elements viz

1. பிருதிலி (earth) - தங்கம், gold.

2. அப்பு (water) - காரீயம், lead.

3. தேயு (fire) - செம்பு, copper.

4. வாயு (air) - இரும்பு, iron.

5. ஆகாயம் (sky) - நாகம், zinc.

ஐம்பொறி see ஐம்புலன்.

ஐம் பொறி, சுட்டறுத்தல், ஐம் புலன்களையும் சுட்டு அறுத்தல், subduing the five senses.

''ஆங்கார முள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற் தூங்கி சுகம் பெறுவ தெக்காலம்''

(தாயுமா)

See ஐம்புல னறுத்தல்.

ஐம்பொறி நுகர்ச்சி, see ஐம்புல நுகர்ச்சி.

ஐம்பொறி யடக்கான், see ஐம்புல விடயன்.

ஐம்பொறி விடயம், ஐம் புலத்தால் அறியப்படுவது, that which is perceived by the five senses.

ஐம் பொன், பஞ்ச லோகம், அவையாவன: பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், the five metals viz — gold, silver, copper iron and lead or tin.

See ஐம்பூத வுலோகம்.

ஐம் மலடு, பெண்களுக் கேற்படும் ஐந்து வித மலட்டு ரோகங்கள், sterility in women due to five different causes viz

1. வாயு மலடு, a condition due to flatulency.

2. புழு மலடு, one due to germs in the womb.

3. சீழ் மலடு, one arising from inflamed and suppurated condition of the womb.

4. இரத்த மலடு, a state caused by menstrual disorders.

5. சதை மலடு, a condition due to corpulency.

ஐம் மலம், யாக்கைக் குறும் ஐந்து விதக் குற்றங்கள், (In Philosophy) the five evils attached to the soul, see ஐ மலம், 2. கண்டத்திற்கு மேல், சிரசின் பாகத்திலுள்ள வாய் நீர், மூக்குச் சளி, கண் பீளை, காதுக் குறும்பி, தலைப் பேன் முதலிய ஐந்து வித மலங்கள் (In Physiology) the five kinds of waste-products thrown out from the region of the head above the neck, viz — saliva, snot or snivel, muco-purulence from the eyes, ear-wax and louse or lice.

ஐம் மாதுளை, ஐந்து வகை மாதுளைச் செடி, the five varieties of the species of pomegranate viz—

1. கொடி மாதளை, lemon citron — Citrus limoni - medica.

2. கொம்மட்டி மாதளை, melon lime — Citrus medica typica.

3. பூ மாதளை, flowering pomegranate, (a male variety) — Punicum granatum.

4. புளி மாதளை, the sour pomegranate — Punicam granatum.

5. சீமை மாதளை, common quince.

ஐம் மாயை, மாயையின் ஐந்து பேதங்கள், the five manifestations of Maya viz.

1. தமம் அல்லது மன விருள், mental darkness, which obscures the soul.

2. மாயை அல்லது வஞ்சம், decit or fraud.

3. மோகம் அல்லது ஆசை, desire or passion.

4. அவித்தை அல்லது அஞ்ஞானம், spiritual ignorance or mental illusion.

5. அநிர்தம் அல்லது அநித்தியம், transientness or wordly illusion.

ஐம் மார்க்கம், தமிழ் வாத நூலிற் சொல்லிய ஐந்து வித முறைகள், (In Alchemy) the five secret processes contemplated in Tamil Medical Science and they are—

1. இரசித மார்க்கம், the process of making silver.

2. வேதை மார்க்கம், transmutations of inferior metals in to gold.

3. முப்பு மார்க்கம், the combined art of alchemy and rejuvenation with the aid of the universal solvent.

4. குளிகை மார்க்கம், preparation of animated mercurial pills for flying in air.

5. குரு முறை மார்க்கம், the method of transmutation of metals according to the secret revelation by a spiritual guru.

ஐம்மித்திரம், பஞ்ச மித்திரம், see ஐ வகை மித்திரம், and ஐ மித்திரம்.

ஐம்முகி, ஆமணக்கு, which see.

ஐம் மூலம், ஐந்து வகையான வேர்கள், the five different kinds of roots viz

1. வில்வ வேர், root of Bilva tree — Crataeva religiosa.

2. மின்னை வேர், the root of Premma or Indian headache tree — Premna integrifolia.

3. ஈசுர மூலி, the root of Indian birth-wort — Aristolochia Indica.

4. பாதிரி வேர், the root of trumpet flower tree — Bignonia chelonoides.

5. பெருமர வேர் (பட்டை) the root-bark of large bastard poon — excelsa.

ஐய, அழகிய, beautiful.

ஐய குன்மம், உடம்பில் கபம் அதிகப் படுவதாலும் அல்லது கோளாறடைவதாலும் ஏற்படும் குன்மநோய், dyspeptic pain due to the aggravated or deranged condition of phlegm in the body.

ஐயக் கணச் சூலை, சிலேட்டுமம் கோளாறடைந்து, அதனால் கண ரோகம் ஏற்பட்டுக் குத்தல், வலி, முதலிய குணங்களைக் காட்டுமோர் வகைக் கண நோய், a kind of tabes or wasting disease in children arising from the deranged condition of phlegm in the system and characterised by acute pain.

ஐயக்கணம், சிலேட்டு மாதிக்கத்தினால் உடம்பு நாளுக்கு நாள் மெலிந்து, இருமல், சுரம், முதலிய குணங்களைக் காட்டுமோர் வகைக் கண நோய், கற்பத்தி னின்றே சிசுக்களைத் தாக்கிப் பிறகு பெரியவர்க ளானதும் இந்நோய் வெளிப்படும், tabes in children due to the aggravated condition of phlegm in the system. It is marked by cough, fever, fatigue, emaciation, etc.

It is a congenital disease inherited from the parents and developed by the child latterly, after it is grown in age.

ஐயக் காட்சி, சிலேட்டுமக் குறி, the symptom of phlegmatic humour; 2. கோழை காணல், the appearance of phlegm or mucous discharge.

ஐயக் காய்ச்சல், சிலேட்டும் சுரம் அல்லது கப சுரம். இது கண்களில் நீர் வடிதல், கண்டத்தில் கோழை கட்டல், பெரு மூச்சு, நடுக்கல், கை கால் எரிவந்தம், தலை நோய், இளைப்பு, மூட்டுகளில் வலி, வியர்த்தல் முதலிய குணங்களைக் காட்டும், phlegmatic fever. It is attended with the following symptoms — Discharge of water from the eyes, formation of phlegm in the chest, hard breathing, tremour, burning sensation in the extremities, head-ache, fatigue, pain in the joints, perspiration, etc.

ஐயக் கிழவர், ஈழை அல்லது சிலேட்டும நோயால் பீடிக்கப்பட்ட வயது சென்ற மனிதர் (ஆண் அல்லது பெண்) aged people (men and women) suffering from asthma or similar phlegmatic disease.

ஐயக் குணம், சிலேட்டுமத்தின் குணம், phelegmatic humour according to humoural pathology.

ஐயங்க வீனம், புது வெண் ணெய், fresh butter.

ஐயங் காய்ச்சி, உடம்பில் கபம் மேலிட, உடம்பை வற்றச் செய்து, பல வீனத்தை யுண்டாக்கு மோர் நோய், a disease marked by emaciation and weakness due to excess of phlegmatic humour in the system; 2. ஒரு பெண் நோய், a female demon.

ஐயங் கொள்ளல், சிலேட்டுமத்தால் பீடிக்கப்படல், to be attached with phlegmatic humour; 2. கோழை யுண்டாதல், formation of phlegm or mucous.

ஐய சுரம், see ஐயக் காய்ச்சல்.

ஐய சூலை, உடம்பில் கபம் கோளா றடைவதால் உண்டாகும் ஓர் வகைச் சூலை நோய், இது உடம்பு மரத்தல், மூர்ச்சை, குத்தல் வலி, தொண்டையிற் கபம், அடி வயிற்றில் வலி, வியர்வை, இரத்த மின்மை, வாய் நீரூறல், முதலிய குணங்களைக் காட்டும், colic due to the deranged condition of phlegm, one of the humours in the system. It is attended with numbness, fatigue, pricking, pain, phlegm in the throat, pain in the abdomen, perspiration, anaemia, insalivation etc.

ஐயஞ்சு, நிலைப் பனைக் கிழங்கு, ground-palm or hog-palm — Curculigo orchioides.

ஐய நாடி, சிலேட்டும நாடி, கப நாடி, one of the three states of the pulse indicating the derangement or disordered state of the phlegm in the system.

NOTE: Pulse is the expansion and contraction of an artery which may be felt with the finger or fingers. It is usually felt in the radial artery at the wrist.

ஐய நேமி, கல் லத்தி, hill banyan — Ficus tomentosa.

ஐய நோய், சிலேட்டும நோய், a phlegmatic disease.

ஐய பண்டம், கபத்தை யுண்டாக்கும் உணவுகள், food stuffs which tend to increase the phlegm in the system.

ஐய பூளி, பரு மணல், course sand.

ஐய மறுத்தல், சிலேட்டும தொந்தத்தை நீக்கல், curing the phlegmatic humour; 2. கோழையை வெளிப்படுத்தல், causing the discharge of mucous from the throat or through the nose.

ஐய முறல், se ஐயங் கொள்ளல்.

ஐய மூலம், சிலேட்டுமத்தினா லுண்டான மூல நோய், piles through phlegmatic causes.

ஐய மேலிடல், தொண்டையில் கபம் அதிகப் படல். இது ஓர் மரணக் குறி, increase of phlegm in the throat or the chest, obstructing the tree respiration. It is a symptom of death.

ஐயம், சிலேட்டுமம், கபம், phlegm; 2. கோழை, a watery mucous from the brounchus; 3. சீந்தில், moon-creeper — Menispermum cordifolium; 4. வெண்கடுக்காய், a white species of gall-nut; 5. மோர், butter-milk.

ஐயவி, கடுகு, mustard; 2. வெண் கடுகு, white-mustard; 3. கடுக்காய், chebulle myrobalan.

ஐயவிகம், செஞ் சோளம், red maize.

ஐயவிகுய் நீக்கல், குழம்பில் கடுகு போட்டுத் தாளிக்காமை, to climinate mustard seeds in the process of seasoning sauce at the last stage of its preparation, for it is considered injurious for dietetical purposes.

ஐயவிக் காய், (*ஐயவி + காய் = கடுகு + காய்*) கடுக்காய் என்பதற்குப் பரிபாஷை, a secret name for gall-nut. See *ஐயவி.*

ஐய விலக்கு, சிலேட்டுமம் அல்லது கோழையை உடம்பினின்று அகற்றுதல், the removal of phlegmatic tendencies or mucous discharge from the system.

ஐயாயளம், சிங்கம், lion.

ஐயி, கலவைச் சிலேட்டுமம், a discharge of mucous mixed with saliva.

ஐயிதழ், துத்தி, country mallow — Abutilon indicum. It is so called from its calyx which has five clefts.

ஐயிதழ்த் துத்தி, see *ஐயிதழ்*. It is so called from its having five petals.

ஐயிரண்டு வயது, பத்து மாற்றுப் பொன், (In Alchemy) 10 'Mathu' gold which is taken as a standard for pure gold. It is equivalent to the English standard of 22 carats; *2.* பத்து மாதத்திய பிண்டம், a full blown fetus or child in the womb.

ஐயுணர்வு, ஐம்புலன் உணர்ச்சி, the knowledge of the five senses.

ஐயுற வேகம், கல் பயற்றங் கொடி, (lit) a creeper of stone pulse — Phaseolus genus.

ஐயெண்ணெய், see ஐங் கட்டெண்ணெய்.

ஐராச்சிறம், இரசம், mercury.

ஐராவணம், அமிர்தம், elixir; *2.* ஓர் மரம், an unknown tree.

ஐராவதம், நாரத்தை, bitter orange — Citrus aurantium bigaradia; *2.* கிச்சிலி, common orange, Coorg orange — Citrus aurantium nobilis; *3.* மின்னல், lightning; *4.* ஈரப் பலா, a species of jack (lakoocha) — Artocarpus lakoocha.

ஐரிணம், ஒருப்பு, a kind of salt?

ஐரியம், ஓர் மது பானம், a sweet beverage; *2.* பனஞ் சாறு, the sweet juice of the palm tree.

ஐரேயம், கள் toddy.

ஐர்மியம், சிலை மருந்து, plaster.

ஐலந்தார்,
ஐலந்தாலம்,
ஐலந்தால், பனை palmyra — Borassus flabelifer.

ஐலேயகம், ஏலம், which see.

ஐலேயம், ஏலம் விளையும் பூமி, the soil growing cardamom.

ஐவகைச் சாரம், the five kinds of alkalies used in Indian medicine and they are:

1. எவச் சாரம் - nitre — Potassium nitrate.
2. நவாச் சாரம், sal ammoniac — Murias ammoniac.
3. ஏகம்பச் சாரம், an ammoniac — Murias ammoniac.
4. காசிச் சாரம், a prepared salt from fuller's earth, nitre and sal-ammoniac.
5. சத்தி அல்லது சிவ சாரம், another variety of alchemical salt contemplated in Machamuni 800.

ஐவகைத் தாயார், ஐந்து வகைத் தாய்மார், the five classes of females considered as mothers viz.

1. ஈன்ற தாய், mother who gave birth to; natural mother.
2. ஊட்டுந் தாய், the female who nourishes the child.
3. முலைத் தாய், the one who suckles the child — Wet-nurse.
4. செவிலித் தாய், one who nurses and acts as a mother — Foster-mother.
5. கைத்தாய், a female who has the care of a child or children.

ஐ வகைத் திரவியம் மிளகு, கோஷ்டம், அகில், தக்கோலம், குங்குமப் பூ, the five drugs viz — Black pepper. Arabian costus, Agilwood, Tail pepper and Europeon saffron.

ஐவகைப் பித்தம், உடம்பிற் குள்ளிருக்கும் ஐந்து விதப் பித்தங்கள், the five kinds of bile in the system viz—

1. அனலம், gastric juice in the stomach.
2. இரஞ்சகம், bile in the gall-bladder — Cystic bile.
3. சாதகம், the bile secreted in the liver.
4. ஆலோசகம், bile supposed to be in the apple of the eye.

5. பிராசகம், the original secretion in the billary passages - White-bile.

ஐவகைப் பொடி, the five kinds of powder employed for different purposes viz:

1. கபிலப் பொடி, Kamela powder — Mellotus philippensis.

2. மூக்குப் பொடி, tobacco powder used as a stimulent — Snuff.

3. கந்தப் பொடி, aromatic powder used in bath or fumigation.

4. சொக்குப் பொடி, a powder or drug that induces stupor or sleep — Hypnotic or soporific.

5. ஆக்கிராணப் பொடி, a powder when sniffied up promotes nasal discharge or secretion — Errhine or Sternutatory.

ஐவகைப் பொன், see ஐம் பொன்.

ஐ வகை மணிலம், பசலைக் கொடி, Indian spinach — Spinacea oleracea.

ஐவகை மலடு, ஐந்து வித மலட்டு ரோகங்கள், the five kinds of sterility and they are:

1. ஆதி மலடு — வயிற்றில் மூன்று மடிப்பு விழுந்து, இடுப்புப் பருத்து, உடம்பு தூலித்து, அதனால் கருப்பம் ஏற்படாமை, sterility marked by the three folds of skin in the abdominal region, broad hip and corpulency.

2. காக மலடு — முதலில் இரண்டு பிள்ளைகளைப் பெற்றுப் பின்பு கருத் தரிக்காமை, the condition of barrenness occuring after giving birth to two children.

3. கதலி மலடு — வாழையைப் போல் ஒரு பிள்ளையைப் பெற்ற பிறகு கரு ஏற்படாமை, a similar condition occurring after giving birth to only one child.

4. கருப்ப மலடு — வயிற்றிலேயே பிள்ளை செத்துச் செத்துப் பெறுவது, giving birth to a dead fetus or child every time.

5. ஆண் மலடு — புருடர்களின் விந்து உயிர்ப்பற்றதா யிருக்குந் தன்மையினால் பெண்களுக்கு ஏற்படும் மலட்டுத் தன்மை, sterility in women due to watn of fecundity or productive nature in the condition of the semen in men.

See ஐம் மலடு.

ஐவகை மித்திரம், உலோகங்களைப் பேதிக்கச் செய்யும் ஐந்துவிதச் சரக்குகள். அவையாவன: குன்றி, நெய், வெல்லம், காரம், தேன், the five active agents for facilitating chemical changes and they are — jeweller's bead, ghee, jaggery, caustice and honey.

ஐவகை விக்கல், ஐந்து விதமாக ஏற்படும் விக்கல் ரோகம், அவையாவன; the five kinds of hiccoughs viz—

1. அசனோற்பவ விக்கல், one arising from errors in diet.

2. சூத்திர விக்கல், one due to the enfeebled condition of the body due to weakness fatigue hunger etc.

3. யமள விக்கல், one caused by gastric disorders of the stomach.

4. மகா விக்கல், one due to some disease or other causes.

5. கம்பீர விக்கல், one due to the neurotic condition of the stomach — Singultus nervosus.

ஐவணம்,

ஐவணி, மருதோன்றி, nail-dye, Henna — Lawsonia alba.

ஐவர், பஞ்சப் பொறி, the five senses; 2. பஞ்ச பூதங்கள், the five elements.

ஐவர் தேங்கி, காசித் தும்பை, balsam flower — Impatiens genus.

ஐவலி, ஐந்து வகை வலிப்பு, அவையாவன: the five kinds of convulsions viz

1. குதிரை வலி, spasm or eclampsia occurring in women just before or after delivery in which the limbs are turned to one side — Puerperal convulsions.

2. முக வலி, முகத்தை ஒரு பக்கம் திருப்பல், contortion of the face; facial spasm of tic.

3. குரங்கு வலி, a painful muscular contraction — Cramp.

4. காக்கை வலி, fits or attacks attended with loss of consciousness — Epipleptic fits.

5. முயல் வலி, another form of convulsion.

ஐவனம், மலை நெல், hill paddy — Corysza mutica.

ஐவாய்க் கள்ளி, மான் செவிக் கள்ளி, spiral-leafy milk hedge — Euphorbia nivulia alias F. nerifolia.

ஐவாய் மான், பசு, cow.

ஐவாய் மிருகம், கரடி, Indian black bear — Melursus ursinue. It is so called from its prehensile power of its four feet and the mouth; 2. சிங்கம், lion.

ஐவி, சிறு கடுகு small mustard; 2.கடுக்காய், gall-nut — Terminalia chebula.

ஐ விரலி (ஐ + விரலி, five + fingers — Palmate leaf) ஐ வேலிச் செடி, இது ஓர் படர் கொடி, அடித்தண்டு வளவளப்பாயு ள்ளது. இக் கொடியின் கூந்தல் இரண்டு பிரிவினையுடையது. இலைகள் சிறிது சொர சொரப்பு; இலைக் காம்புகள் இலையை விடக் குட்டையா யிருக்கும். இதன் காய் மூன்றறை யுள்ளது. ஒவ்வொன்றிலும் பல விதைகளுண்டு. பூக்கள் சிறியன, மஞ்சளும், பச்சையும் கலந்த நிறம். எக்காலத்திலும் பூர்க்கும்; இதன் காய், வெளிரிய சிகப்பு நிறம் வாய்ந்து அதில் வெள்ளைக் கோடுகளுமுண்டு. இச்செடி கசக்கும். இலையின் சாற்றைப் பசும் பாலுடன் கலந்துப் பித்த சாந்திக்குச் சாப்பிடலாம். இலையைக் கீரையாக வுணவு பதார்த்தங்களில் உட்கொள்ளுவதுண்டு, இதனால் சாதிலிங்கம் மயின மாகும், இது சிலேட்டு மத்தைப் போக்கும். a climbing plant or creeper known as Bryony — Bryonia laciniosa. Stem glabras; tendrils bifid; leaves slightly scabrous; petioles shorter than leaves, berries spherical and three celled and seeds few in each cell; flowers small and yellowish-green; flowers all through the year; the fruit is pale-red in colour with white streaks; whole plant is bitter.

Juice of the leaves mixed with cow's milk is given internally for bilious complaints. Leaves are boiled and eaten as greens.

NOTE: It is so called from its leaf resembling the five fingers. The God Siva is said to have concealed in this as its seed on being pursued by Basmasuran.

ஐ விரலிக் கோவை, see ஐவிரலி.

ஐ விரலிச் சங்கு, ஐந்து முட் பாய்ந்த சங்கு, a conch with five spines.

ஐ விரலிச் சாறு, பிண்ட மாக்கரு, a white flour - like coating on the surface of the body of a child in the womb; an unctuous substance which covers the skin of the foetus — Vermix caseosa.

ஐ விரலிச் சுண்ணம், ஓர் வகைச் சங்குச் சுண்ணம், a calcium compound prepared from conch.

ஐ விரல், ஐந்து விரல், the five fingers and they are:

1. பெருவிரல் the thumb
2. சுட்டு விரல், the fore-finger.
3. நடுவிரல், middle - finger.
4. அணி விரல், the ring finger
5. சுண்டு விரல், the little finger.

ஐவிரற் கொவ்வை, see ஐ விரலிக் கோவை.

ஐவிராகி நீர், குமரி நீர் அதாவது ஐந்து வயது பெண் பிள்ளையின் மூத்திரம், the urine of a girl five years old; 2. கன்னி நீர், the urine of a virgin.

ஐ விரை, ஐந்து வித வாசனைத் திரவியங்கள், the five kinds of aromatic drugs viz—

1. கோட்டம், a perfume; 2. துருக்கம், the resin of olibanum tree — Indian olibanum; 3. தாரம், the fragrant wood of deodor tree; 4. அகில், the fragrant wood of Agil tree; 5. சந்தனம், sandal wood.

ஐவேலி, see ஐ விரலி.

ஒ

ஒ கொன்றை, cassia; 2. முளை யெழுத்து அதாவது பிரணவ யெழுத்து. இதன் மூலத்தை இதுவரை ஒருவரும் கண்டறிந்தார் இல்லை. germinating letter of Pranava letter — the short O. Of all the letters of the Tamil Alphabet, this letter is the one which has evaded the skill, the ingenuity and the labours of the volutionists, obliged the Archeologists and Epigraphists to

admit that they do not know its evolution as yet. It is a letter which can be transformed into அ. by merely rotating the stem through 180°. (The Mystic aspect of the Tamil Alphabet).

ஒ.்கல் ஒதுங்கல், keeping to a side; 2. விலகல், keeping aloof; said of a woman in her menses.

ஒகதி, ஊமத்தை, dhatura — dhatura stramonium.

ஒக துரகம், குதிரைச் செவிக் கள்ளி. இதில் இலைகள் குதிரைக் காதைப் போன்றன, horse's car — Shorea robusta. A kind of Euphorbia whose leaves resemble the ears of horses. See குங்கிலிய மரம்.

ஒக தோதிகம், அசம தாகம், which see.

ஒகர மடம், வெண் காரவுள்ளி, a white pungent onion.

ஒகரம், மயில், peacock — Pavo cristatus.

ஒகிதம், கற்றாழை, aloe — Aloe indica.

ஒக்கக் கூட்டல், see ஒக்கச் சேர்த்தல்.

ஒக்கச் சேர்த்தல், ஒருமிக்க அல்லது ஒன்றாய்ச் சேர்த்தல், to mix as a whole; 2. சமமாய்ச் சேர்த்தல், to add equally either in weight or in measure; 3. பொருந்தும்படிக் கூட்டல், to add so as to mix together; 4. தகுதியான வளவிற் சேர்த்தல், to add in a suitable quantity; 5. மிகுதியாகச் சேர்த்தல், to add in excess; 5. கூடச் சேர்த்தல், to add to the original.

ஒக்கம், அசம தாகம், which see.

ஒக்க லிடுதல், இளங் கூட்டல், mixing relatively; 2. ஒப்புர வாக்கல், to equalise; 3. உறவாக்கல், causing to unite chemically.

ஒக்க லித்தல், see ஒக்க லிடுதல்.

ஒக்கலை, மருங்கின் பக்கம், the side of the hip-bone; 2. அம்பர், which see; 3. இடுப்பு, hip.

ஒக்கல், இடைப்பக்கம், the side of the hip; 3. உறவு, relation; 3. ஒத்தல், equalising; 4. மூட்டுதல், the act of sewing two pieces into one — Suturing.

ஒக்கல் போற்றல், சமமான தத்துவத்தையே நாடல், following the principle to treat all alike; 2. சமத்துவத்தைப் பாராட்டல், to maintain equality.

ஒக்கனி மாதர், சிறு கீரை, pig's greens — Amaranthus campestris.

ஒக்காதிக் கொடி, புலி நகச் செடி, a species of climbing shrubt tiger's claw — Marynia diandra; 2. புலி நகக் கொன்றை, இதன் கிளைகளும் காம்புகளும் வளைந்த முட்க ளடர்ந்த வைகளா யிருக்கும். பூ சிகப்பும், மஞ்சளும் கலந்த நிறம் வாய்ந்திருக்கும், a species of wagatea — Wagatea — Wagatea spicata. Branches and petioles are armed with recurved prickles. Flowers scarlet and orange coloured.

ஒக்கிடா, சிலந்தி, a kind of ulcer.

ஒக்கிரு கந்தம், கரு வேம்பு black neem - Garuga pinnata.

ஒக்குதல், கொப்பளித்தல், gargling; 2. சமானித்தல், equalising.

ஒக் கொலை, அம்பர், which see.

ஒங்கலம், விஷ மூங்கில், Asiatic poison bulb; Poison lily — Crinum asiaticum.

ஒசிகா, பழுபாகல், buffalo carolah — Momordica dioica.

ஒசிக குமரி, கற்றாழை Indian aloe — Aloe vira (officinalis):

ஒசிதம், see ஒசித குமரி.

ஒசிதல், முறிதல், breaking as of bones; 2. இரண்டாக ஒடிதல், parting into two when broken; 3. அசைதல், moving; 4. துவளல், pliable; pliant.

ஒசித்தல், முறித்தல், to break; to fracture;

ஒசிப்பு, முறிக்கை, the act of breaking; 2. எலும்பு முறிதல், the breaking of a bone — Fractures.

ஒசிவு, அசைவு, motion; 2. முறிவு fracture as of bones.

ஒச்சட்டை, see ஒஞ் சட்டை.

ஒச்சம், வெட்கம், shyness.

ஒசசித்தல், வெட்கப்படுதல், feeling shy.

ஒச்சியம், காந்தற் சாறு, over-boiled and charred or scorched rice.

ஒச்சினி, ஒன்பதாம் மாதம், the ninth month; 2. ஒன்பது மாதம் கருத்

தங்கிய பெண், a woman carrying a fetus nine month's old.

ஒச்சை, காந்தற் சோறு, see ஒச்சியம்; 2. உற்றுக் கேட்டல், attending closely with a view to hear; listening.

ஒஞ் சட்டை, ஒல்லியான, உயரமான, thin and tall; slender.

ஒஞ்சரித்தல், ஒரு பக்கமாய்ச் சாய்தல், to lean on one side.

ஒஞ்சி, முலை, woman's breast; 2. மார்பு, chest; 3. முலைக்காம்பு, nipple.

ஒஞ்சிக் கொடுத்தல், பால் கொடுத்தல், to give such to; to nurse at the breast — Suckle.

ஒஞ்சித்தல், மனதை யடக்கல், controlling or restraining the action of the mind. This can only be done by a yogi; 2. வெட்கப்படுதல், feeling shy.

ஒஞ்சித் தாபிதம், முலைக்காம் பழற்சி, inflammation of the nipple — Thelitis.

ஒஞ்சி வலி, முலைக் காம்பில் குத்தல், pain in the region of the nipple — Thelaigla.

ஒடி,

ஒடிரை, வன நெல், wild paddy.

ஒடிக் கிழங்கு, இளங் கிழங்கு, tender root; 2. பனங் கிழங்க palmyra root; 3. வள்ளிக் கிழங்கு, sweet potato — Ipomaea betatas.

ஒடிதல், முறிதல், breaking of or fracture as in bones or teeth.

ஒடியல், பனங் கிழங்கின் பிளவு, a slit in the palmyra root; 2. ஒடி பட்டது, that which is broken; 3. ஒடிபடுகை, the act of being broken or fractured.

ஒடியல்மா,

ஒடியன்மா, பனங் கிழங்கின் மா, the flour from the palymra root.

ஒடியற் கிழங்கு, பனங் கிழங்கு, palmyra root.

ஒடியுன், ஆமை, which see.

ஒடியால் வால், காய்ந்த பனங் கிழங்கின் நுனி, the tip of a dried palmyra root.

ஒடி யிடை, ஒடுங்கிய இடுப்பு, a very narrow waist.

ஒடு, நிலப்பாலை, round-leaved discous featherfoil — Cleistanthus collinus; 2. முது புண், spreading abscess; 3. ஒடுக்கட்டி, which see; 4. புண்ணிற் கள்ளம் அதாவது புண் புரை, sinus in a sore; 5. பொடுகு, dandruff; 6. சீழ், pus.

ஒடுகு, ஓர் மரம், இதன் பூ முசுமுசுப்பாயும், சாம்பல் வர்ணமாயு மிருக்கும். பட்டை விஷத் தன்மை யுள்ளது, a shining tree; wodisha — Lebidieropsis orbicularis alias Amanoa collina. It is a tree with hairy grey white flowers. The bark is poisonous.

ஒடுக் கட்டி, அக்குள் கட்டி, a boil in the armpit; 2. கழலைக் கட்டி, cyst; a harmless tumour containing fatty matter — Wen; 3. புடை கொண்ட சீழ்க் கட்டி, a swelling with collection of purulent matter.

ஒடுக்க நாடி, தாக்குண்ட நாடி, oppressed pulse.

ஒடுக்கம், அடக்கம், self-restraint; 2. முடிவு, end; termination; 3. நெருக்கம், narrowness; 4. ஒடுங்குதல், sinking as the soul does in its different stages; collapse; extreme depression of the bodily energies; 5. வலி குன்றுதல், gradual reduction as that of vitality in the body through age, disease, cares etc; 6. சுருங்குகை, contraction; 7. ஏகாந்தமான விடம், a secluded place; solitude; 8. யோகாப் பியாசத்திற்காகத் தனித் திருக்கை, retirement to live in seclusion for yoga practice; 9. ஒன்றுக்குள் அடங்குதல், involution, as one element into another by way of absorption, dissolution etc.

ஒடுக்கலாந் தண்ணீர், ஓர் வாசனை நீர், eaude cologne; colonge water. See உடுக்கலாந் தண்ணீர்.

ஒடுக்கல், வருத்தல், oppressing; 2. அடக்கல், reducing, contracting.

ஒடுக்கன், உடம்பைக் குறுக்கும் ஆமை, a tortoise which contract or draws in the members of its body.

ஒடுக்கான், ee ஒடுக்கன்.

ஒடுக்குதல், குறைத்தல், to decrease as in food; 2. சுருங்கப் பண்ணுதல், to contract.

ஒடுக்குப் பாலை, நிலப்பாலை, see ஒடு.

ஒடுக்கு மருந்து, பருத்த வுடம்பை யொடுக்கிப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்குக் கொள்ளு மருந்து, a medicine which reduces the body and brings it to the normal size.

ஒடுக்கு வாகை, வெண் வாகை, small-leaved white sirissa — Albizzia procera (alata); 2. பன்றி வாகை, bastard rose-wood – Dalbergia paniculata.

ஒடுக்கு வாய், கோணவாய், wry mouth; 2. சிறிய வாய், small mouth; 3. ஒடுங்கின வாய், narrow mouth.

ஒடுங்கல், உடம்பு ஒடுங்கல், reduction as of the body, through age, disease etc; 2. சோர்தல், to collapse; 3. இலகித்தல், to be absorbed as in meditation; 4. மூச்சொடுங்கல், sinking of the spirits as in a dying man; stopping of respiration in a yogi while in yoga practice; 5. ஐம்புலன் அடக்கல், bringing into subjection of the five senses.

ஒடுங்கி, ஆமை, which see.

ஒடுங்கி யோடு, ஆமை யோடு, tortoise shell.

ஒடுங்கு மேனி, இளைக்கு முடம்பு, emaciated body.

ஒடுதலாம், புதினா, mint — Mentha genus.

ஒடுத் தங்கல், புண்ணில் சீழ் தங்குதல், gathering of pus in a main wound or abscess — Suppuration.

ஒடு நிற்றல், see ஒடுத் தங்கல்.

ஒடுப்பை, ஒடுவன், rafter-wood — Cleistan thus collinus; 2. சீழ்ப்பை, pus sac; cyst.

ஒடுவங்காய், மின்னிக் காய், இது ஒரு சிறிய கொட்டை, கொடிய நஞ்சுள்ள மருந்துகளிலொன்று. இலைகளும் வேர்களும் கூட நஞ்சுத் தன்மை பொருந்தியவை களாகவே யிருக்கும், ஆகையால் ஒரு பிராணியும் இதைத் தொடாது, a poisonous nut — Andracture cadishaw. The leaves and roots are also so poisonous that they are classified under poisonous drugs; Animals do not approach the plant.

ஒடு வடக்கி, குப்பை மேனி (ஒடு + அடக்கி boil + controller) rubbish plant — Acalyphya indica; the plant is so called from its curing new ulcerations caused by matter remaining in a boil; 2. திராய், boil-subduer; Indian chick-weed — Mollugo spergula alias M.parviflora; 3. பெருந்தும்பை, large toombay — Leucas cephalotes; 4. சீழ் கொள்ளுதலைத் தடுப்பது, that which controls suppuration.

ஒடுவன், see ஒடுப்பை.

ஒடுவு, புண் புரை, sinus in a sore.

ஒடு வெண்ணெய், பருக்கள், கட்டிகள் முதலியவைகளின் புண்களில் தங்கி நிற்கும். சீழ் வெளி வரும்படி உபயோகிக்கு மோர் மருந்தெண்ணெய், அல்லது தைலம், a medicated oil used to bring out the retained pus in a wound, eruption, boil, abscess etc.

ஒடுவை, பாலொடுவை, an unknown tree.

ஒடுவைப் புண், மேல் வாயைப் பற்றி வரும்புண், an ulcer or a wound in the palate.

ஒடுளகம், குடை வேல், umbrella thron-babool — Acacia planifrons.

ஒடை, ஒடை மரம், stout reed bamboo; Elephant grass — Ochalandra travan covica; 2. See உடை; 3. கிலுகிலுப்பை, rattle - wort; 4. See ஒடைக் கொடி.

ஒடைக் கொடி, வெண்ணான் கொடி, wheel creeper — Combretum ovalifolium.

ஒடைச்சி, see ஒடுப்பை.

ஒடை வேல், see உடை வேல்.

ஒட்டகப் பறவை, கழுத்து நீண்ட பறவை அதாவது கொக்கு, நெருப்புக் கோழி முதலியன, birds with long necks i.e., crane, strok, ostrich etc.

ஒட்டகப் பாரை, ஒட்டாம் பாரை யென்னும் ஓர் வகைக் கடல் மீன், a kind of sea-fish known as Horse-mackerel — Scomber aculeatus.

ஒட்டகம், ஒட்டை, (மிருகம்), இது மிக்க உயரமான மிருகம். இதன் பாதங்கள் ரொம்பவும் மிருதுவாயிருக்கும். கழுத்து நீண்டது. இது அரபியா தேசத்தில் மிகுதி. இதன் பால் உடம்புக்குக் கெடுதி. ஆகவே அக்கினி மந்தம், வாத சூலை, காது செவிடு,

இருமல், இரைப்பு முதலியவைகளை புண்டாக்கும். இதன் மோர், தயிர், வெண்ணெய் முதலியவைகளுக்கும் இக் குணமே பெரும்பாலும் பொருந்தி யிருக்கும். ஆனால் இதன் மூத்திரத்தில் உடம்புத் தடிப்பு, சன்னி பாதம், சூலைப் பிடிப்பு, வயிற்று வலி, மண்டல குட்டம் முதலிய நோய்களும், இதன் நெய்யினால் நீரிழிவும் போம். camel (a beast) or dromedary camel — Camelus dromedarius. It is a tall animal. Its foot is very soft and neck long; one hump on the back. It is very common in Arbia. The milk of this animal is not at all, wholesome for consumption. It brings on in its train various diseases such as, loss of appetitle, rhematism, gout, deafness, cough, asthma etc.

The butter-milk, butter and curd of this animal have also the same qualities; but its urine is said to cure blotches, delirious fever, gout, colic pain, macular leprosy etc. and the ghee is used with great efficacy in diabetes.

NOTE: The feet of the camel is composed of toes protected by cushion-like soles and not by horny covering like those of other animals. There are two species of camel viz.

1. One-humped camel or dromedary — Camelus dromedarius.
2. Two-humped Camel — Camelus bactrianus.

No.1 is Arabian camel and it is used in S.India as a beast of burden being a swift-going breed. No.2 is known as Bactrian camel.

ஒட்டக வெலும்பு, மார் பெலும்பு, breast-bone — Sternum.

ஒட்டகிகம், பாற் சொற்றி, the hardned milky juice of trees and plants such as, Madar etc — Gutta- percha; 2. ஓர் கொடி, an unknown creeper?

ஒட்டகை, see ஒட்டகம்.

ஒட்டகை பீசன், குதிரைப் பிடுக்கு மரம், horse almond — Sterculia foetida.

ஒட்டக் காய், உடம்பில் பொருந்த அமைத்திருக்கும் காய் அதாவது விதை, an ovoid body suspended in the scrotum — Testicle; 2. குதிரை வொட்டக்காய் அதாவது குதிரைப் பிடுக்கன், the tree named horse almond — Sterculia foetids.

ஒட்டங் காய்ப் புல், see ஒட்டுப் புல்.

ஒட்டச்சி, பூவழலை, an efforescent salt obtained from the soil of fuller's earth.

ஒட்டடை, புகையுறை, lamp-black; house soot; 2. எட்டுக் காற் பூச்சி உண்டு போறகட்டிய நூல், இதை வெல்லத்திற் கொடுக்க விஷ சுரம் போம், spider's net or web — Cobweb. It is given in palmyra jaggery in malarial fever.

NOTE: It means the web of any of the various kinds of spiders. It is an astringent and is used for arresting hemorrhage. It is also used as a domestic remedy. It is a febrifuge and an antispasmodic.

ஒட்டத் தாலிபன், திகைப் பூச்சி, an insect which, on coming in contact with the body, causes in one perplexity or bewilderment of the mind.

ஒட்டத்தி, ஒட்டத் துத்தி, lobe- leaved burrmallow — Urena sinuata.

ஒட்டத் துத்தி, see ஒட்டுத் துத்தி.

ஒட்ட நாளம், பேயத்தி, wild-fig or devil- fig — Ficus hispida; 2. நியக்கு, elder wood tree-vine — Leea sambucina.

ஒட்ட நாளி, see ஒட்ட நாளம்.

ஒட்டப்பம், தோசை, pan-cake.

ஒட்டப் பிடுங்கன், அடி வயிற்றோடு கூடிய பிடுக்குள்ளவன், one in whom the testicles are held up in the scrotum.

ஒட்டப் பிடுக்கு, விதை கீழிறங்காமற்படி உள்ளாக விருக்கும் பிடுக்கு, scrotum in which the testicle fails to descend but remains in the inguinal canal — Undescended testicles.

ஒட்டப் பிலவு, see ஒட்டற் பலா.

ஒட்டப் போடுதல், பட்டினியாய்ப் போடல், to make any one or chiefly a patient, starve as a means for curing certain diseases such as, fever, indigestion etc.

ஒட்டரக் காகரிவன், கலைமான், a full grown male red-deer — Hart.

ஒஷ்ட ரோகம், ஒட்ட ரோகம், உதட்டின் வியாதி, disease of the lips.

ஒட்டலரி, கல்லலரி, wild-oleander — Adelia neriifolia.

ஒட்டல், ஒட்டுதல், sticking or adhering; 2. வற்றல், to lose flesh gradually as in கன்னம் ஒட்டல், becoming hollow as does the cheek from emaciation; 3. பொருந்த வைத்தல், joining of parts together. 4. சதை ஒட்டல், (In plastic surgery) the plasting of the skin by replacement of the destroyed or lost skin — Dermatoplasty; 5. எலும் பொட்டல், plastic surgery of the bones — Osteoplasty; 5. நோய் தொத்தல், the infection or contagion of a disease from a diseased body to a healty person by mediate or immediate contact; 7. அட்டையை உடம்பில் ஒட்டச் செய்தல், letting a leech or leeches stick to the body.

ஒட்டறை, see ஒட்டடை.

ஒட்டற் காது, சுருங்கற் காது; காதின் தண்டு பருக்காமல் காதோடு ஒட்டிக் கொண்டிருத்தல், ears with jobes not hanging; ears in which the lobule is wanting — Cagot-ear; 2. ஒட்டறுத்தக் காது, ear-lobe shortened by surgical operation.

ஒட்டற் பலா, ஒட்டப் பிலவு, devil's nettle or Malabar nettle — Laportea crenulata.

ஒட்டற்ற பொன், கலப்பில்லாத பொன், unalloyed or refined gold; 2. மாற்றுயர்ந்த பொன், pure gold.

ஒட்டாக் கிரந்தி, தொற்று வகையால் ஏற்படாத மிருதுவான ஓர் வகைக் கிரந்தி, இது மர்ம ஸ்தானத்திற் காணும், a soft non syphilitic venereal sore appearing on the genitats — Chancroid.

ஒட்டாங் கொடி, see ஒடாங் கொடி.

ஒட்டா நோய், தொற்றா நோய்கள், diseases which do not infect persons.

ஒட்டாம் பாரை, ஓர் வகைக் கடல் மீன், hose mackerel of olive colour — Caranx oblongus. See ஒட்டகப் பாரை.

ஒட்டி, ஒட்டொட்டி, which see; 2. ஓர் வகைக் கடல் மீன், a kind of marine fish; 3. சாதாரணமாகவே ஒட்டச் செய்யும் கூழ் அல்லது பசை, any sticky or gummy substance such as glue, paste, etc; 4. சதை அல்லது எலும்புகளை ஒட்ட அல்லது பொருந்த வைக்கும் சதையொட்டி, எலும்பொட்டி என்னும் மருந்துகள் அல்லது மூலிகைகள், medicines or drugs capable of uniting flesh or setting bones together; 5. அட்டை, leech; 6. ஒட்டுப் புல், stick grass 8. சுவரொட்டி அதாவது மண்ணீரல், the spleen; 6. தொட்டால் ஒட்டி, a drug capable of sticking or adhering when touched, 9. தொத்து நோய், any contagious disease.

ஒட்டிக் காய்ச்சல், உடம்பை இளைக்கச் செய்யுமோர் வகைக் காய்ச்சல், இதுவே வற்றக் காய்ச்சல் எனவும் படும், a fever marked by emaciation of the body.

ஒட்டிக் கிரட்டி, ஒன்றுக் கிரண்டு பங்கு, a proportion of one to two i.e. 1:2.

ஒட்டிக் கிராணி, உடம்பை இளைக்கச் செய்யும் மோர் கிராணி, a chronic diarrhoea marked by general emaciation of the body.

ஒட்டிக்குவான், see ஒட்டுப் புல்.

ஒட்டிக் கொள்ளல், நோய் பற்றுதல், இது நோயாளி யினின்று நேராகவும் அல்லது பிறிதொரு வழியாகவும் வந்து சேரும், infection of a disease by contact with a patient directly or transmitted through water, food or other means of conveyance indirectly; 5. ஒன்றோடொன்று அதிதமாகப் பொருந்தல், any abnormal joining of parts to each other — Adhesion.

ஒட்டி நோய், ஒட்டி ரோகம், உடம்பை வற்ற அல்லது இளைக்கச் செய்யும் சயம், நீரிழிவு எலும்புருக்கு முதலிய நோய்கள், wasting diseases such as, consumption, diabetes, tuberculosis of the bones etc. followed by general emaciation of the body; 2. தொற்று நோய், a contagious disease.

ஒட்டிப் பயறு, எலிப் பயறு, which see.

ஒட்டிப் போதல், இளைத்துப் போதல், to become reduced; to get emaciated; 2. வற்றுதல், to shrink.

ஒட்டிய, உள்ளடங்கிய, incurved, as in ஒட்டிய வயிறு, ஒட்டிய கன்னம், incurved stomach, sunken cheeks etc.

ஒட்டிய கரு, அட்ட கரும நூலில் ஒன்று, one of the eight works on magic viz — Witch craft; 2. ஓர் மாந்திரிக வித்தை அதாவது சூனியம், a magical art.

ஒட்டிய கன்னம், வற்றிய கன்னம், sunken cheek; this may be either natural or through emaciation.

ஒட்டியக் கரு, சூனியத்திற்குரிய கரு, drug used in witchcraft; 2. ஒட்டியம் என்னும் மாந்திரிக நூலில் கூறப்பட்ட கரு, a magic paint or preparation contemplated in the Magic bood known as 'Ottiyam.'

ஒட்டிய புண், ஓர் வகைக் கிரந்திப் புண், an incurved ulcer. See ஒட்டுப் புண்.

ஒட்டியப் பூடு, சுருங்கிய பூண்டு, a plant withered for want of moisture; 2. மாந்திரீகத்திற் குபயோகிக்கும் மூலிகைகள்; drugs employed in magic, witcheraft, sorcery etc. Occult drugs.

c.f. சல்லியப் பூடு.

ஒட்டிய முதுகு, உள்ளாக வளைந்து வற்றிய முதுகு, curvature of the spinal column with a forward convexty; hollow - back — Lordosis.

ஒட்டிய முலை, வற்றிய முலை, withered breast through disease or old age.

ஒட்டியம், ஓர் வித மாந்திரீக வித்தை, a kind of magic — Witchcraft; 2. ஐம்பத்தாறு தேசத்தி லொன்று, one of the 56 ancient kingdome — Orissa; 3. ஒட்டிய முனிவனால் அட்டக் கரும வித்தையெனக் கொண்டு செய்த வோர் நூல், a work on magic compiled by Ottiya Muni. It is based on the eight fundamental principles of magic.

ஒட்டிய வயிறு, பசி முதலிய வற்றால் உள்ளாக வொடுங்கிய வயிறு, an incurved stomach as in starvation, fasting, child, birth etc.

ஒட்டிய விலா, இளைப்பினால் மே லெழும்பிக் காணாது ஒடுங்கும் விலா, hollow sides through emaciation.

ஒட்டிய யாக்குதல், சமனாக்குதல், to reduce to an equality; to equalize.

ஒட்டியா தேவி, சூனியக்காரன் பூசிக்குந் தேவதை, a deity aseribed to magic and worshipped by a corcerer.

ஒட்டி யுப்பு, பொட்டி லுப்பு, nitre — Potassium nitrate alias Potassac nitras.

ஒட்டி யெலும்பு, see ஒட்டெலும்பு.

ஒட்டின் மரம், ஓர் பூ மரம். இதில் பூக்கள் பெரிதாயும், வெண்மையாயும், வாசனையுள்ளதாயும், மூன்று பூக்களுடைய கொத்துக்கள் அமைந்ததாயு மிருக்கும். இப் பூவைக் காடியில் அரைத்து ஒற்றைத் தலைவலிக்கப் பற்றுப் போடுவதுண்டு, a flowering tree called Pterospermum — Pterospermum suberifolium. Flowers are large, white and fragrant; three- flowered; flowers in S.districts during March and continues up to May, Flowers made into a paste with rice and vinegar forms an application in hemicrania; 2. பிரிதொரு மரத்தை ஒட்டுவதனால் முளைத்த மரம், a tree propagated by grafting.

ஒட்டு, ஒட்டல், to stick or cause to adhere; 2. புல்லுரி, a parasite; 3. தொத்து, contagious as in diseases; 4. அறுகம் புல், which see; 5. மரப் பட்டை, the bark of a tree; 6. ஒட்டுப் புல், which see.

ஒட்டுக் கணவாய், ஓர் வகைக் கடல் மீன், a species of cuttle-fish — Octapis vulgaris.

ஒட்டுக் கண், கண்ணி லெப்பொழுதும் பீளையும், நீரும் சொரியு மோர் கண்ணோய், an infectious eye-disease attended with constant watering of the eyes and mucopurulent discharge — Sore- eyes; 2. அழற்சியால் இமை யொட்டிக் கொள்ளு மோர் வகைக் கண்ணோய், eye-lids sticking together owing to inflammation; 3. பொய்க் கண், false eye; 4. இமைகள் இரண்டும் சாதாரணமாகவே பொருந்தி வளரும் ஓர் கண் ரோகம், the gluing together or adhesion of the eye-lids — Blephar - osynechia.

ஒட்டுக் கண்ணாள், பெரு வெண்டை, a big variety of bendy or lady's fingers — Abelmoschus esculents alias Hibiscus esculentes; 2. பீளைக் கண்ணி, sore-eyed woman.

ஒட்டுக் காந்தம், இரும்பிற்குச் சத்துக் கொடுத்து மாற்றிய காந்தம், any soft iron converted into a magnet by induced magnetism — Artificial magnet; c.f. ஓட்டுக் காந்தம்; 2. சாதாரணமாகவே இரும்பைத் தன்னிடத்தே ஒட்டிக் கொள்ளச்

செய்யும் காந்தம், an ordinary magnet which naturally attracts iron.

ஒட்டுக் காய்ச்சல் உடம்போ டொத்த காய்ச்சல், a chronic low fever; 2. தொத்துக் காய்ச்சல், an infectitious fever; 3. பெருவாரிக் காய்ச்சல், fever attacking several persons at the same time as in influenza — Epidemic fever.

ஒட்டுக் கால், ஒடிந்து அல்லது முறிந்து போய்ப் பிறகு ஒட்டிய அல்லது பொருந்திய கால், a broken or fractured leg which was set right afterwards; 2. பொய்க்கால், false leg.

ஒட்டுக் கால் விரல், ஒன்றோ டொன்று ஒட்டிக் கொண்டிருக்கும் விரல்கள், toes united by a web or a membrane — Web-toes.

ஒட்டுக் கிரகணி, ஓர்விதக் கழிச்சல். இது மிக்க வயிற்று வலி, மார்பு, விலா, முதுகு முதலிய விடங்களில் நோவு, மலம் துட்டிடை யளவாய்ப் பல தடவையாக இறங்கல், இளைப்பு முதலிய குணங்களைக் காட்டும். இதில் படுக்கையே இதமாகத் தோன்றும், chronic diarrhoea due to some constitutional disease marked by acute abdominal pain, pain in the region of the chest, sides and the back, frequent scanty evacuations of bowels, fatigue etc. In this the patient is inclined to be always in bed.

ஒட்டுக் கிரந்தி, சம்போகத்தினா லல்லாது வேறு வகையால் தொத்தும் கிரந்தி, syphilitic ulcer not acquired by sexual contact but from infection from sexual contact but from infection from some article in the household use — Syphilis innocentum; 2. பெருவாரி நோயைப் போல், பலசனங்களைத் தாக்கும் ஓர் வகை மேகக் கிரந்தி, a contagious venereal disease resembling syphilis occuring as an epidemic at various times in certain countries — Syphiloid.

ஒட்டுக் கிரியை, உடம்பிற் சதை யிழந்த காலத்து வேறொரு பிராணியி னின்றாவது அல்லது அதே உடம்பின் பிறிதொரு பாகத்தி னின்றாவது சதையைக் கழித்து, இழந்த பாகத்திற்குப் பொருந்தும்படித் தைத்தல், a graft or a slip of skin or of other tissue transplanted from one of the lower animals or a skin-graft taken from the patient's own body — Plastic operation.

ஒட்டுக் குருத்து, கணுச் சந்துகளி லன்றி வேறு இடங்களிலு முண்டாகுங் குருத்துகள், (In Botany) buds coming out from other than natural places — Adventitious bud.

ஒட்டுக் கை, ஒடிந்த கையைத் திரும்பவும் பொருத்தியது, a fractured or dislocated bone of the arm which was set right after wards; 2. பொய்க் கை, an artificial or false hand.

ஒட்டுக் கை விரல், ஒட்டிக் கொண்டிருக்கும் கை விரல், webbed-fingers.

ஒட்டுக் கோழை, பிசினைப் போன்ற ஓர் விதக் கோழை அல்லது கப நோய், a phlegmatic disease marked by sticky phelgm — Sputum.

ஒட்டுக் கோழை விப்புருதி, cancer showing extensive sloughing.

ஒட்டுச் சுரம், see ஒட்டுக் காய்ச்சல்.

ஒட்டுச்சதை, மிருகங்களின் உடம்பிலிருந்து, சதையைக் கிழித்து மனித வுடம்பிற்குப் போதுமான வரை ஒட்டும்படிப் பொருந்தச் செய்யும் சதை, a piece of tissue taken from the living body of an animal to supply a part wanting in the human body, by being grafted on to it — Zoograft; a grat ot tissue transferred from one of the lower animals to man; animal graft — Zooplastic graft; 2. உடம்பின் சதையை இழந்த காலத்தில், அதற்கு ஈடாக ஒட்டப்படும் பிறிதொரு சதைத் துண்டு; a bit of skin implanted to replace a lost part of the skin or integument — Skin graft; 3. சதை யிழந்த நோயாளியின் உடம்பிலேயே வேறு பாகங்களி னின்றும் இழந்த சதைக்குப் பதிலாகப் பொருத்தும் சதை, a skin-graft from the patient's own body — Autoplastic graft or Epidermic graft or Dermatoplasty.

ஒட்டுச் சிகிச்சை, அட்டையை ஒட்டிக் கொள்ளும்படிச் செய்வித்து, கெட்ட இரத்தத்தை நீக்கி நோயைக் குணப்படுத்தல், the art of healing by bleeding from leech-bite — Leech-craft.

ஒட்டுச் சீலை, மாதவிடாய் காலத்தில் பெண்கள் யோனித் துவாரத்தில் பொருந்தும்படி வைக்கும் சீலைத் துண்டு, a piece of cloth inserted or plugged into the vagina for receiving the menstrual blood.

ஒட்டுச் சீலை மருந்து, புண் கட்டி முதலியவைகளுக் கிடும் சீலை மருந்து, adhesive plaster used in abscess, wound etc — Sticking plaster.

ஒட்டுச் செடி, ஒட்டொட்டி, see ஒட்டுப் புல்; 2. ஒட்டுக் கட்டி வளர்ப்பிக்குஞ் செடி, a small shoot of a tree inserted or made to stick to another tree for purposes of grafting it.

ஒட்டுச் சேர்வை, புண் அல்லது கட்டிகளில், ஒட்டிக் கொள்ளும்படி யிடும் சீலை மருந்து, adhesive plaster.

ஒட்டுதல், சேர்த்தல், uniting or to unite; 2. ஒட்டல், to stick or adhere; 3. சுருங்குதல், to contract; 4. சேர்த்தல், causing to unite; 5. வற்றுதல், shrinking; 6. பொருத்துதல், causing to unite.

See ஒட்டல்.

ஒட்டுத் தீட்டு, இரத்தக் கலப்பு, a mixture of two kinds of blood; referring to relationship by blood; 2. பிசுபிசுப்புள்ள மாதவிடாய் இரத்தம், menstrual blood which is sticky.

ஒட்டுத் துத்தி, see ஒட்டுத் துத்தி.

ஒட்டுத் தையல், காயத்தின் கிழிந்த விளிம்புகளைப் பொருந்தும்படி ஊசி கொண்டு தைக்கும் தையல், இது அகத் தையல், புறத்தையல், சுற்றுத் தையல், முடிச்சுத் தையல் என நான்கு வகைப்படும். a suture made for uniting the two ender or lips of a wound. It consists of our kinds viz:

1. suture from within outward.
2. suture from outside inward.
3. a continous suture `carried all round a wound.
4. a suture the stitches of which are tied in single knots.

ஒட்டு நத்தை, காலி லொட்டிக் கொண்டு துன்பத்தை யுண்டாக்கு மோர் வகை நத்தை. a small which sticks to the leg and gives rise to trouble; 2. கடலில், ஆமை, திமிங்கிலம், முதலியவைகளின் மேலும், கப்பலின் அடியிலும் ஒட்டிக் கொண்டிருக்கும் நத்தை, marine molluscous animal that sticks to tortoise, whales etc, and also to the bottom of ships.

ஒட்டு நோய், see ஒட்டு ரோகம்.

ஒட்டுப் பலாசிதம், வெண் புரசு, a species of Bengal kino bearing white flowers. It is a rare plant supposed to be used in medicine by Siddhars for rejuvenation.

ஒட்டுப் பலாசு, see ஒட்டுப் பலசிதம்.

ஒட்டுப் புலாதி, ஆதண்டை, which see.

ஒட்டுப் பழம், ஒட்டுச் செடியின் பழம், graft fruit, such as graft mango etc.

ஒட்டுப் பற்று, புண், கட்டி முதலியவைகளுக்கு உபயோகிக்கும், ஒட்டுந் தன்மையுள்ள சீலை மருந்து, adhesive plaster used in sores, wounds, abscesses etc. See ஒட்டுச் சேர்வை, 2. ஒட்டுந் தன்மை யுள்ள மருந்து சேர்ந்த, மேற் பூச்சு மருந்து, an embrocation consisting of adhesive or viscus substances; 3. பிசின், கூழ், பசை, முதலிய வஸ்துக்கள், any viscid or glutinous substance such as, gum, pudding, paste etc 4. தைலம், லேகியம், முதலியன காய்ச்சும் பொழுது அடியில் ஒட்டி நிற்கும் பற்று, any scorched sediment or deposit sticking to the bottom of vessels while preparing medicated oils, electuary etc. 5. எலும்பு அல்லது சதை ஒட்டிக் கொள்வதற்காக உபயோகிக்கும் கூட்டு மருந்து, any medicine or drug used for sticking or uniting the flesh or setting the bone aright.

ஒட்டுப் பிசின், பட்சிகளைப் பிடிப்பதற் குபயோகிக்கும் ஓர்வகைப் பிசின், a gum used for catching birds; bird-lime.

ஒட்டுப் புண், தொட்டவுடன் ஒட்டுகின்ற புண் sticky sore or ulcer; 2. தொத்துப் புண் an infectious itch; 3. தொற்றுச் சிலந்தி; a contagious ulcer; 4. ஏற்கனவே யுள்ள புண்ணி னருகே தொந்தத்தினால் ஏற்படும் பல புண்கள், contiguous sores appearing near an original sore.

ஒட்டுப் புல், சீலை யொட்டிப் புல், இது சாதாரணமாகக் குப்பை மேடுகளில் விளையும். இதற்குக் 'குதிரைவாற் சாமை' யென்றும் பெயர் வழங்கும். இதை, முள் புறப்படா முன்னம் மாடுகள் தின்னும், Rough panic grass — Panicum verticillatum alias Setaria verticillata. It is also called sticking grass as it sticks to clothes. It is

generally found on rubbish heaps and cattle eat this grass before the spikes are formed and developed. See also எலி பொட்டி, 2.சிறிய புல், a small variety of grass; 2. புல்லுரி, a parasitic plant which grows on another plant.

ஒட்டுப் புழு, புறா முட்டி, paroquet Burr — Triumfetta rhomboidea. It is wide-spread weed; 2. குடலில் ஒட்டிக் கொண்டிருக்கும் புழு, intestinal worm; 3. சிறு புழு, a small worm.

ஒட்டுப் போடல், கிழிந்த சதையைத் தைத்தல், suturing the two ends of a wound; 2. சதைப் பொருத்தல், grafting as of the skin.

ஒட்டு மருந்து, ஒட்ட வைக்கு மருந்து, plastic materials used in medicine — Plastics; 2. துணித்த சதைப் பாகங்களையும் முறிந்த வெலும்புகளையும் பொருந்திக் கொள்ளும் படித் தமிழ் வைத்தியத்தி லுபயோகிக்கும் சதையொட்டி, எலும்பொட்டி முதலிய மூலிகைகள் (In Tamil Medicine) drugs that are used for purposes of curing incised wounds and for setting right the fractured bones.

ஒட்டுமா, ஓர் வகைத் தித்திப்பு மாங்காய், graft-mango; 2. ஒட்ட வைத்து முளைத்த சாதிக் கலப்பமான மா மரம், mango tree propagated by grafting.

ஒட்டு மாசிகம், ஒட்டு மாதுளை, grafted pomegranate — Punicum granatum.

ஒட்டு மாமரம், காட்டு மாமரம், wild mango tree; 2. ஒட்ட வைத்த மாமரம், graft mango tree; See ஒட்டு மா.

ஒட்டு மேகம், தொத்துவதனாலும் அல்லது வேறு வகைச் சம்பந்தத்தினாலு முண்டாகும், மேக சம்பந்தமான நோய், a contagious syphilis or other venereal disease acquired by direct venereal contact or by inheritance, due to infection from the mother or through infection acquired through some article of household use Syphilis oceconomica.

ஒட்டு ரோகம், தொத்துநோய், அதாவது அம்மை, நமைச்சல், சொறி சிரங்கு, பேயாடல், கண்ணோய், ஆவேசம், வாந்தி பேதி முதலியவைகள் ஒருவருக்குக் கண்டிருக்கையில், அவர்களை மற்றவர்கள் தொடுவதினாலும், அல்லது அருகி லிருப்பதாலும், பார்த்தலினாலும் அல்லது நினைத்தலினாலும் மற்றும் வேறுவிதக் காரணங்களை முன்னிட்டும், மேற்கண்ட நோய்கள் அல்லது அவைகளின் குறிகள் அவர்களையும் பற்றும், an infectious or contagious disease such as small-pox, itches, prurigo, devil-dance, eye-disease or sore- eyes, rapture or ecastasy, cholera, etc. It is generally transmitted from one person to another by immediate contact or by effluvia through attendance on them or by simply remaining near or by seeing or thinking about them or by other extraneous causes or circumstances.

NOTE: An infections disease is one caused by arasites or other germs and it may or may not be contagious. Infection may also be conveyed through air, through dust particules carrying infection or through various articles, especially clothing and bedding.

ஒட்டுவா ரொட்டி, தொத்து நோய், that which is transmitted for one person to another — Contagious disease.

See ஒட்டு ரோகம்.

ஒட்டு வித்தை, இடத்தை விட்டு நகர முடியாமற் செய்யு மோர் வித்தை, (In Hypnotism), the art of making persons unable to move from their places; 2. மனோவசிய வித்தை, mesmerism; 3. இந்திர சாலத்திலோர் வித்தை, a secret art contemplated in the Indian science on Magic probably one referring to Animal Magnetism.

ஒட்டு வியாதி, தொத்து வியாதி, see ஒட்டு ரோகம்.

ஒட்டு விரல், கை விரல்கள் ஒன்றோ டொன்று ஒட்டி யிருத்தல், fingers united by olds of skins or of membranes — Web-fingers.

ஒட்டு வேகம், முகைப் புல், hare-grass — Milium dactylon.

ஒட்டு வேர், பிரகாண்டத்தின் தண்டுகளி லுண்டாகும் வேர், a root spiringing up from the stem of a tree to the surface of the earth.

ஒட்டு வேலை, உடம்பின் பாகங்களி லேற்படும் சதைக் குறைவு முதலிய ஈனத்தைப் பிரிதொரு வகையால் அதாவது ஒட்டு வகையால் ஈடுபடுத்துமோர் முறை, a method of surgical treatment in which the

repair of defects is chiefly carried out by grafting or transfer of tissues — Plastic surgery. See ஒட்டுக் கிரியை.

ஒட்டுறுப்பு, சதை யொட்டிய உடம்பினக்கம், any organ of the body which as been grafted or which consists of a skin - graft.

ஒட்டெலும்பு, என்புக் கோளாறு அல்லது என்புக் கேட்டினால் பிறிதொரு பிராணியினின்று எடுத்து ஒட்டப் பொருந்தும் எலும்பு, a piece of bone taken from an animal or from some bone of the patient and used to take the place of a removed bone or bony defect — Bone-graft.

ஒட் டெறும்பு, ஓர் வகைக் கட்டெறும்பு, stick-ant — Pormica ampressa.

ஒட்டை, see ஒட்டகம், 2. கோரோசனம், bezoar; 3. பத்து விரற்கிடை, the space from the point of the thumb of that of the fore-finger.

ஒட்டைக் கழுத்து, ஒட்டையைப் போல் நீண்ட கழுத்து, a neck unusually long like the one of a camel.

ஒட்டைக் கோரோசனம், ஒட்டையின் குடல்களிலிருக்கும் கோரோசனை, a concretion found in the intestines of a camel - camel Bezoar.

ஒட்டைச் சாண், பெரு விரல் முனையிலிருந்து சுட்டு விரல் முனை வரைக்கும் உள்ள நீளம், a short span between the tips of the thumb and fore-finger extended. It is opposed to சாண், a long span between the tips of the thumb and the little finger extended.

ஒட்டைச் சூத்தன், ஒட்டையின் குண்டியைப் போல் சுருங்கிய குண்டியை யுடையவன், one with a progressive wasting of the fatty and other tissues of the buttocks and consequent diminution is size.

ஒட்டைச் சூத்து, சுருங்கிய குண்டி, an idiopathic muscular atrophy of the buttocks.

ஒட்டை நீர், ஒட்டைக் கழுத்துப் பையில் தங்கி நிற்கும் தண்ணீர், a sac inside the body of a camel containing a storage of water; 2. ஒட்டை மூத்திரம், camel's urine.

ஒட்டை நெய், ஒட்டையின் நெய், இது விஷத்தைப் போக்குந் தன்மையுள்ளது. பசி தீபன முண்டாக்கும். அன்றியும், நுரையீரல் வீக்கத்தையும், குடலின் பூச்சியையும் போக்கும். சரும நோய், வயிற்றுக் கட்டி, நீர்க் கவிசை முதலிய நோய்களையும் நீக்கும், camel's ghee. It is anti-toxic, appetising and pungent in digestion. It proves a curative in oedema, worm in the intestines, cutaneous affections, affections of the abdominal glands and ascites.

ஒட்டைப் பால், ஒட்டையின் பால், இது தமிழ் வைத்தியத்தின்படி, சூலை, செவிடு, இருமல் இரைப்பு முதலிய நோய்களுக்குக் காரணமாகும். ஆனால் ஆயுள் வேதப்படி, உடம்பிற்கு வறட்சியையும் உஷ்ணத்தையும் வாய்க்கு ருசியையும் கொடுக்கக் கூடியதெனவும் இதன் நெய்க்கு வாய்ந்த குணமே இதற்கு முண்டெனவும் கருதப்படும். இதை அரேபியா தேசத்தில், உடம்புப் புஷ்டிக்காகக் குழந்தைகளுக்குக் கொடுப்ப துண்டு. camel's milk. According to Tamil Medical Science, the milk is considered to give rise to several disease such as arthritis, deafness, cough, asthma etc. but as per Ayurveda it is parchifying heating and palatable and further it is supposed to have the same properties as those of its ghee. It is prescribed in Arabia for children as a nutrition.

ஒட்டைப் பிடுக்கன், குதிரைப் பிடுக்கன், fetid tree — Sterculia foetida; See ஒட்டப் பிடுக்கன்.

ஒட்டைப் பிடுக்கு, see ஒட்டப் பிடுக்கு.

ஒட்டைப் பூச்சி, மழைப் பூச்சி, இத்தகைய பூச்சி எவ்விடத்தில் வசிக்கிறதோ அவ்விடத்தில் நிறத்தைப் பொருந்தி ஒளித்துக் கொண்டிருக்கும், (ஒட்டு = ஒளிப்பிடம்) ஆகவே அதற்கு இப்பெயர், worms and insets feeding on green plants in rainy weather. These exhibit the resemblance to the natural object among which they live. This resemblance serves as a means of protection and hence this name (Mimicry)

NOTE: Mostly for purposes of protection, some insects, birds and animals assume the colour of their environments. Worms and insects feeding on green plants would assume the colour of the leaves or the wood of the plants or the shape of the leaf-stalks and twigs. Even some

praying insects or spectres (Mantidoe) do so, in order to deceive and catch their prey which consists of butter flies etc. which hop about these plants. The remarkable case is that of chameleon which does not change colour from fright as it is generally imaginaed but according to the colour of the surface over which it runs so as to become indistinguishable thereby.

Even in the African, wilds, especially when lions stand beside grey pieces of rocks, the hunter could hardly distingnish them the rock. (Romance of the Insect world).

ஒட்டை மரம், *உயரமாய் வளர்ந்த மரம்,* any tree rising to a great height; any tall majestic tree; **2.** *ஓர் முள் மரம்,* camel tree; camel thistle — Echinops echinatus.

ஒட்டை மூத்திரம், ஒட்டையில் சிறு நீர், இதனால் வீக்கம், மேகத் தடிப்பு, சன்னி பாதம், சூலைப் பிடிப்பு, வயிற்று வலி, குட்டம், பாண்டு, மூலம், குடற் பூச்சி முதலிய நோய்கள் போம். camel's urine. It proves beneficial in cases of oedema, venereal eruptions, typhoid, rheumatism, colic, leprosy, abdominal dropsy, piles, worms in the intestines etc.

ஒட்டை லத்தி, *ஒட்டை மலம்,* camel's dung.

ஒட்டை வெண்ணெய், ஒட்டையின் பாலினின்று திரட்டிய வெண்ணெய். இது வயிற்றிற்கு மந்தத்தைக் கொடுப்ப தாயினும், நீரிழிவைப் போக்கு மெனக் கருதப்படும், camel's butter. Although it lessens the appetite, it is said to cure diabetes.

ஒட்டொட்டி, *ஒட்டங்காய்ப் புல்,* a grass which sticks to the clothes. It contains prickly seeds — Desmochacta attopur purea; **2.** *சதை யொட்டிச் செடி,* a plant possessing the virtue of uniting flesh.

See also **ஒட்டுப் புல்.**

ஒட்டோலம், பெருந் தெள்ளுக் கொடி, giant rattle — Entada scandens.

ஒட்பம் *அழகு,* beauty; **2.** மேன்மை, superiority.

ஒண்டன், *ஆண் நரி,* male jackal; **2.** *நரி,* fox in general; **3.** *அறிவு,* intelligence.

ஒண்டி, *தனிமை,* solitary; single.

ஒண்டிப் பார்ப்பான், ஆதொண்டை which see.

ஒண்டி மூலி, a plant (unidentified) **2.** *தனியாக முளைக்கும் பூண்டு,* a solitary plant.

ஒண்ணல், *கூடுதல்,* uniting; **2.** *பொருந்தல்,* fitting properly.

ஒண்ணா, *பொருந்தாத,* disagreeable; unsuitable as in **ஒண்ணா வுணவு,** disagreeable food i.e. food not suited to the constitution.

ஒண்ணி, *பொன்,* gold.

ஒண்மை, *அழகு,* beauty; **2.** *அறிவு,* prudence; **3.** *ஒளி* brilliancy; **4.** *இயற்கை யழகு,* natural beauty.

ஒதகு, see **ஒடுவன்.**

ஒதடிக் கற்றாழை, see **எருமைக் கற்றாழை.**

ஒதவாசி, *சவுட்டு மண்,* fuller's earth.

ஒதளை, *காசுக் கட்டி,* downy foliated cutch, see **ஒதளை.**

ஒதி, ஒதிய மரம் அல்லது உதிய மரம். இது உயரமும் பருமனு மானது. வலு விராத்து, இலேசாக விருக்கும். இதைச் சாதாரணமாகக் கொல்லை, தோட்டம் முதலிய விடங்களிற் பார்க்கலாம். தானாகவும் வளரும். பூக்கள் சிறியவை, இது சாதாரணமாக ஒன்றுக்கு முபயோகப்படா விட்டாலும், வைத்தியத்திற்குப யோகப்படுவதுண்டு.

இதன் பட்டையை யிடித்துக் காய்ச்சிய கஷாயத்தை மேக வீக்கத்திற்கும், கிரகணி, அதிசாரம் முதலியவைகளுக்கும் கொடுக்கலாம். இதன் பிசினுக்கும், வேருக்கும் துவர்ப்புக் குண முள்ளதால் சீதபேதி, இரத்த பேதி, வயிற்றுப் பேதி முதலியவைகளுக்கும், வாய் விரணத்திற்குக் கொப்புளிக்கு நீராகவும் உபயோகிக்கலாம். இரணம், புண் முதலியவைகளைக் கழுவவும் உதவும், Indian ash tree or Elephant webera — Odina wodier. It is a large and tall tree and cannot be used as timber for it is light. It is commonly cultivated in backyards of houses and gardens and it is also found grown naturlly in some places.

Although it is not useful for ordinary work, its value in medicine is greatly beneficial.

The bark is powedered and externally used in venereal swellings and patches and the decoction in chronic diarrhoea etc. The gum and the root are astringents and as such are used in cases of diarrhoea, dysentery, colic, etc. The decoction or infusion of then is used as a gargle in stomatitis. The pulversed bark mixed with oil is applied to bad ulcers, wounds and bruises.

NOTE: The leaves drop off and the tree becomes naked in hot weather. It increases in size without strength. The fruit resembles goat's horn. The juice of the leaves is applied to sore-eyes. The gum is beaten up with cocoa-nut milk and applied to sprains and bruises. It is substituted for alum, gentian and calumba.

ஒதியம், see **ஒதி.**

ஒதியம் பட்டை,

ஒதியம் பிசின், see under **ஒதி.**

ஒதியன், see **ஒதி.**

ஒதுக்கம், மகளிர் பூப்பு, - தீட்டு, catemenia **2.** **ஒதுங்கியிருத்தல்,** remaining aloof; **3. ஏகாந்தம்,** solitude.

ஒதுக்கல், **நீக்கி வைத்தல்,** to keep separately; **2.** **பத்தியத்திற் குதவாதென நீக்கி வைத்தல்,** to keep back or withold from eating certain articles of food as a regimen in diet; **பெண் விலக்கல்,** abstaining from sexual intercourse.

ஒதுக்கிடம், மறைவான விடம், a concealed place; private place; **2.** சூதகப் பெண் தங்கியிருக்கு மிடம், a secluded place intended for a women in her menses.

ஒதுக்கு, **தீட்டு,** see **ஒதுக்கம்.**

ஒதுங்கணி, **பெரும் பசலை,** garden spinach — Spinacea oleracea.

ஒதுங்கல், மல சலம் கழித்தல், to answer calls of nature, which is done in seclusion; **2.** பூப்படைதல், to menstruate.

ஒதுங்கிடம், மல சலம் கழிக்கு மிடம், a closet or privy for answering calls of nature.

ஒதுங்கி யிருக்கை, எட்ட விருத்தல், keeping aloof; **2.** **பிறர் தொடாதபடி இருத்தல்,** remaining aloof without being touched by others, see **ஒதுக்கல்.**

ஒதுங்குதல், see **ஒதுங்கல்.**

ஒத்தடம், see **ஒற்றிடம்.**

ஒத்தணம், see **ஒற்றடம்.**

ஒத்த பரிமாணம், சமமான அளவு, the state of having parts proportional to each other — Symmetry.

ஒத்தல், see **ஒற்றல்.**

ஒத்தல், **துணை** யடுப்பு, a small auxiliary furnace or receptacle of brick-work connected with the oven, **2.** **ஒத்துதல்** அதாவது **ஒற்றிடம் போடல்,** applying fomentation; **3.** **சமானித்தல்,** to reduce to an equality; **4.** **பொருத்தல்,** to unite.

ஒத்த வீக்கம், **ஒன்று போன்ற வீக்கம்,** a uniform swelling without variation.

ஒத்தியம், **விஷ முங்கில்,** Asiatic poison bulb — Crinum asiaticum.

ஒத்துணர்வு, **அனுதாபம்,** sympathy as in **ஒத்துணர்வு நரம்பு,** sympathetic nerve.

ஒத்துணர்வு சுரம், see **அநுதாப சுரம்.**

ஒத்தைத் தலைவலி, see **ஒற்றைத் தலைவலி.**

ஒத்தை நாடி, see **ஒற்றை நாடி.**

ஒத்தைப் பூண்டு, see **ஒற்றைப் பூண்டு.**

ஒப்பாரி, **இறந்தவரைக் குறித்துப் புலம்புங் கால் பெண்கள் சொல்லும் ஓர் பாட்டு,** self-composed verses recited by women when lamenting for or bemoaning the lose on the death of a person by giving vent to their feelings.

ஒப்பாரி சொல்லல், **பாடிப் புலம்பல்,** lamenting for the loss or the death of a person by aggrieved woman by giving vent to her feelings in the recital of self-composed verses.

NOTE: A peculiar custom in vogue amongst the Tamilians in Southern India. See also **உரை.**

ஒப்பாரி வைத்தல், see **ஒப்பாரி சொல்லல்.**

ஒப்பு, **அழகு,** beauty.

ஒப்புச் சரக்கு, பதிற் சரக்கு அதாவது அகப்படாச் சரக்கிற்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கும் அக்குணம் வாய்ந்த வேறொரு போலிச் சரக்கு, the replacement of one drug or substance by another, fraudulent use of one drug in place of a non-available drug — Substitute.

ஒப்புடன் கூட்டல், சமனாகச் சேர்த்தல், to add in equal quantities.

ஒப்பு முத்து, அழகிய முத்து, a well-shapped pearl.

ஒப்புறை, நோய்களுக்குக் கொடுக்கும் மூன்று வகை மருந்துகளி லொன்று அதாவது, இனத்திற்கு இனஞ் சேர்ப்பது, சூட்டிற்குச் சூடும், குளிர்ச்சிக்குக் குளிர்ச்சியானதுமான மருந்து, one of the three systems of therapeutices based on the theory that diseases are curable by those drugs which produce effects on the body similar to the symptoms of the diseases, heat to heat, cold to cold (similia similibus curantur), — Homeopathy.

ஒப்புறை யாடர், இனத்திற் கினம் சேர்க்கும் வைத்தியன், homeopath; 2. மருந்து கலப்போன், compounder.

ஒமை, மாமரம், mango tree — Mangifera indica.

ஒயி லிச்சி, ஓர் வகை இச்சி மரம், a kind of tseila perhaps a majestic and ornamental tree.

ஒயில் விழி சாதினி, சித்தினி சாதிப் பெண், one of the four classes of women divided according to their lust.

ஒரட்டுக் கை, பழக்கமான இடது கை, left hand used with more dexterity than the right.

ஒரு, ஆடு, sheep 3. நாக பலை, sweet smelling hare foot — Uraria lagopoides.

ஒரு கண், சுருங்கிய கண், withered eye; 2. ஒரே கண், only one-eye.

ஒரு கண்ணன், see ஒற்றைக் கண்ணன்.

ஒரு கண்ணுக் குறங்கல், சிறிது தூங்கல், to have a nap or a short sleep; 2. ஒரு முறை அல்லது ஒரு தூக்கம் தூங்கல், sleeping once or at a stretch.

ஒரு கரண்டி, ஒரு கரண்டி யளவு, a spoonful; 2. பொட்டுக் கரண்டி யளவு, a teaspoon ful — Cochleare parvum.

ஒரு காலிலி, ஒரு காலற்றவன், one deprived of a leg; one - legged person.

ஒரு காலே, ஒரே முறை, only once; at a stroke.

ஒரு கால், ஒரு முறை, once; 2. ஒற்றைக் கால், one-legged; 3. ஒரு முறை யுறங்கல், having sleep only once at a stretch.

ஒரு கிடை, கிடந்த கிடை, condition of being unable to get up from bed — Bed riddenness; 2. ஒரே பக்கமாய்க் கிடத்தல், lying on one side.

ஒரு கூட்டு, ஒரு சேர்மானம், the adding to form a mixture.

ஒரு கையன், ஒரே கை உள்ளவன், one having only one hand or arm only, being deprived of the other; one armed person.

ஒரு கோடி சித்தி, சேர்ந்தாடு பாவை, an unknown drugs.

ஒருக் கணித்தல், ஒரு பக்கமாய்ப் படுத்தல், lying on one side.

ஒருக் கண் பார்வை, ஒரே கண்ணை உபயோகித்தலால் ஏற்படும் மிகத் தெளிவான தோற்றம், a condition of the vision in which it is more distinct when only one eye is used — Monoblepsia; 2. ஒற்றைக் கண்ணின் பார்வை, the sight of one eye.

ஒருக்கண் பிண்டம், ஒரே கண்ணையுடைய பிண்டம், a fetus having but a single eye —Monops.

ஒருக்கம், ஒருத் தன்மை, oneness; 2. மன வொழுக்கம், concentration of mind.

ஒருக்கல், ஒருமனப் படுத்தல், concentrating the powers of the mind; 2. அழித்தல், destroying; 3. ஒருப்படுத்தல், to form or unite into one.

ஒருக்கால், ஒரு தடவை, once; 2. ஒருவேளை, once in a day.

ஒருக்காற் பிண்டம், ஒரே பாதம் அல்லது காலையுடைய கருப் பிண்டம், a fetus having but a single leg.

ஒருக் கிடை, see ஒரு கிடை.

ஒருக்கைப் பிண்டம், ஒரே கை யமைந்த பிண்டம், a fetus with but one arm — Mono brachius.

ஒருக் கொம்பு, காரீயச் செம்பி, a drug capable of converting black lead into coper.

NOTE: It is an unidentified plant.

ஒருங்கு, ஒரே காலத்தில் simultaneously; all at once; 2. ஒன்றாக, one in its entirety.

ஒரு சந்தி, ஒருவேளை போசனம், the eating of only one meal a day — Monophagia; 2. ஒரு பொழுது, one period.

ஒரு சாதி விறகு, ஒரே மரத்தின் விறகு. இது தைலம் எரிப்பதற் குதவும், fuel of one and the same tree, used for preparing medicated oils.

ஒரு சார், ஒரு பக்கம், one side.

ஒரு சார் வாதம், ஒரு பக்கத்து வாத ரோகம், அதாவது பக்க வாதம், paralysis of one side of the body — Hemiplegia.

ஒரு சிறை, see ஒரு சார்.

ஒருச் சாய்த்தல், ஒரு பக்கமாய்ச் சாய்த்தல், to set in a sloping position; tilting.

ஒரு தடவை, ஒரு முறை, only once.

ஒரு தமர்க் கலையம், அடியில் ஒரே துளையிட்ட மண் குடுவை, a small earthern pot with only one hole at the bottom used in the manufacture of medicated oils.

ஒருதர மருந்து, ஒருதடவை சாப்பிடும் மருந்து, one dose of medicine ஒரே தரமான மருந்து; medicine more or less of equal kind value.

ஒரு தரம், ஒரு முறை, one time; once; 2. ஒரே விதம், one and the same kind.

ஒரு தலை, ஒரு பக்கம், one side.

ஒரு தலைக் காமம், ஆணும் பெண்ணும் தனித்தனியாக விருந்து வருந்தும் காமம், sexual love before it is reciprocated or exchanged.

ஒரு தலைக் குழவி, உயர்ந்த மருந்து வகைகளைக் கலுவத்திலிட்டு அரைப்பதற்காக வுபயோகிக்கும் ஒரு பக்கம் தலைபோல், உருண்டையாயும், மற்றொரு பக்கம் கூர்மையாகவும் அமைத்த குழவி, a stone pestle shaped like a cone having a circle for its face and rising to a tapering point at the top. It is sed for grinding valuable madeicines. It is opposed to இரு தலைக் குழவி, used commonly with அம்மி, a grind stone used in the kitchen.

ஒரு தலைச் சாயல் ஒரு புறம் கூறுள்ள கத்தி, a kinfe haing the cutting part of only one side — One-edged knife, as opposed to the two-edged one which cane cut both ways; 2. தலை ஒரு புறமாகச் சாய்ந்திருத்தல், inclination of the head to one side.

ஒரு தலை நோய், see ஒற்றைத் தலை நோய்.

ஒரு தலைப் பாரம், heaviness felt on one side of the head.

ஒரு தலைப் பூடு, பிண்டம், foetus. It is a secret technical term used in Alchemy and Magic. See ஒரு தலைப்பூண்டு.

ஒரு தலைப் பூண்டு, ஒரு தலை வெள்ளைப் பூண்டு, a garlic with only one clove or bulb.

ஒரு தலையன், கொக்கு, stork.

ஒரு தலை யுள்ளுதல், ஒரு தலைக் காமத்தால் புணர்ச்சியை இடை விடாது நினைத்தல், இது பத்து அவஸ்தைகளு ளொன்று, thinking always of sexual intercourse as a result of uncreciprocated love. This is one of the ten torments of life.

ஒரு தன்மை, ஒரே குணம் அல்லது நிலை அல்லது சுபாவம், the quality or the state or the nature of being one — Oneness.

ஒரு தாரைக் கத்தி, ஒரு புறம் கூறுள்ள கத்தி, a knife sharpened on one edge.

ஒரு துட்டெடை, நான்கு காசிடை, 1/3 on an anna or 1/48 of a rupee.

ஒருத் தலை, ஒரு பக்கம், one side or one sideness.

ஒருத் தலைவலி, see ஒற்றைத் தலைவலி.

ஒருத் தலைவாதம், தலைக் குள்ளாக, வாத மேற்பட்டுச் சயித்திய வலியைப் போல் நரம்பிழுத்து, அத்துடன் அருவருப்பு, வாந்தி, இவைகளுடன் கழுத்தில் வலியையும், குடைச்சலையு முண்டாக்கு மோர் நோய், a nervous

affection marked by a periodic headache, often one-sided and accompanied by nausea, vomiting and various sensory disturbances — Migraine.

NOTE: This is a nervous headache sometimes occuring in women at the monthly period.

ஒருத்தல், எருமை, கரடி, மான், பன்றி, புலி, யானை முதலியவற்றின் **ஆண்,** the male of a buffalo, bear, deer, pig, tiger, elephant etc; **2. ஆண் விலங்கின் பொது,** the male of quadrupeds in general.

ஒருத் தாரை, பொன்னாங்காய், soap-nut — Sapindus emarginatus.

ஒருநிறக் காட்சி, see ஒரு நிறத் தோற்றம்.

ஒரு நிறத் தோற்றம், எல்லா நிறமும் கண்ணுக்கு ஒரே நிறமாகக் காணப்படல், colour blindness in which different colours are seen as one colour — Monochromasy.

ஒரு நினைவு, வேறொன்றையும் கருதாது ஒன்றையே சிந்தித்தல், a condition in which the mind is occupied by one idea to the exclusion of others — Hyperprosexia; **2. ஒரே சிந்தை,** (In Philosophy) concentraction of mind on one object.

ஒரு நீர்ப் பில்லம், ஒரு கண்ணின் இமையைப் பற்றிய நோய், இது இமை முறைத்தலுடன் களத்தல், கண்ணில் மிகுந்த சலம் வடிதல், அக் கண்ணைச் சுற்றிலும் புருவத்திலும் வலித்தல், முதலிய குணங்களைக் காட்டும், a disease of the eyelids affecting only one eye. It is marked by affecting only one eye. It is marked by morbid thickening of the eyelid, excessive discharge of water, pain all around the eye and the eye-brow etc. See நீர்ப் பில்லம்.

ஒரு நெல்லுப் பெரு வெள்ளை, ஓர் வித நெல், a kind of paddy.

ஒரு நேரம் அகாலம், premature time or period.

ஒரு நொடிக்குள் காய சித்தி, உரோம விருட்சம், an unknown tree said to possess a very high virtues. It is so called because it is capable of rejuvenating the system in no time.

ஒரு படல், கொக்கு, stork.

ஒரு படித்தாய், மட்டாய், moderately.

ஒருபது, பத்து, the numeral ten.

ஒரு பல் பூண்டு, see ஒரு தலைப் பூண்டு.

ஒரு பவம், ஒரு பிறப்பு, one birth as opposed to இருபவம், re-birth.

ஒரு. பாரிசம், ஒரு பக்கம், see ஒரு சார்.

ஒரு பாரிச வாயு, உடம்பி லொரு பாகத்தை அனுசரித்த வாயு, அல்லது வாத ரோகம், paralysis of one side of the body — Hemiplegia, see ஒரு சார் வாதம்.

ஒரு பாவை, சேர்ந்தாடு பாவை, see ஒரு கோடி சித்தி.

ஒருபானங்கை, மிளகாய், chilly — Capsicum fruitescens.

ஒரு பிடியான், நாகப் பாம்பு, cobra.

ஒருபிடி வாயன், ஓணான், blood-sucker — Lizard.

ஒரு புடை, ஒரு பக்கம், one side.

ஒரு புறங் குளிர்தல், உடம்பினொரு பாகத்தில் சீதளம் காணுதல், feeling chillines of one side of the body.

ஒரு பொழுது, ஒரு காலம், one time; one of the three periods of the day; **2. ஒரு வேளைச் சாப்பாடு,** one meal a day.

See ஒரு சந்தி.

ஒரு போக்கு, ஒரு முறை போதல், having one motion as in purgation; **2. ஒரு புறம் வழிதல்,** discharge from one side.

ஒருப் படல், ஒன்று சேர்த்தல், uniting into one; **2. ஒன்றாதல்,** becoming one; **3. ஒருமனப் படுதல்,** seeing eye to eye.

ஒரு மடி, முலை மேற்றிரள், அதாவது ஒரு முலைக் காம்பு, one nipple referring to the breast of a women as opposed to more than one in animals; **2. ஒரு மடிப்பு,** one fold.

ஒரு மணியாய் நிற்றல், பொன்னையாவது வெள்ளியையாவது உலையிலிட்டுத அது ஒரு மணியைப் போல் உருகித் திரண்டு நிற்றல், assuming the form of a globule as of silver or gold, on being blasted in a furnace or goldsmith's fire-pot.

ஒரு மரம், அழிஞ்சில், which see; 2. செம்மரம், rose wood.

ஒரு மனப் படல், வேறொன்றும் சிந்திக்காத நிலைமை (In Philosophy) concentration of mind as in mediation etc; 2. ஒரே விஷயத்தில் மனம் நாட்ட மடைதல், (In Pathology) a condition in which the mind is occupied by one idea to the exclusion of others — Hyperprosexia; 3. எல்லோரும் ஒரு மனமுடையவராதல், consensus of opinion.

ஒருமனப் பற்று, ஒரே விஷயத்திற் பற்றுள்ள நோயாளியின் மனோநிலைமை, (In Pathology) a condition in which the patient harps on one idea — Monoideism; 2. (In Philosophy) தியானத்தில் யோகிக் கேற்படும் ஒரே சிந்தனையுள்ள மனோ நிலைமை. a condition or a state of trance in which a yogi absorbed in concentration of mind; contemplation.

ஒரு மனம், வேறொன்றும் நாடாத மனம், one - mindedness; mind without variation.

ஒரு மனவான், ஞானி, a sage who has concentrated his mind in one way; 2. பிடிவாதக்காரன், one fixed in one opinion or resolution.

ஒரு மாதக் கருப்பு, வெடியுப்பு, nitre — Potassium nitrate.

ஒரு மா புளப்பன், ஒட்டை which see.

ஒருமிக்க, ஏகமாய், all at once; 2. முழுவதும் wholly.

ஒரு மிடறு, ஒரு வாய்க் குள்ளடங்கும் படிக் கொள்ளுமளவு, a large draught or gulp; 2. ஒரு வாய் கொண்ட வளவு; one draught or mouthful of water or other liquid (as in medicine) a dose — Dosis.

ஒரு முகம், ஒரு பக்கம், one side; 2.முகத்திலொரு பக்கம், one side of the face.

ஒரு முக வாதம், உடம்பினொரு பக்கத்துப் பாரிச வாயு, Paralysis of one side of the body — Hemiplegia; 2. முகத்தினொரு பக்கத்திற் காணும் வாதம், paralysis of one side of the face — Facial hemipelgia.

ஒரு முலைப் பாகல் மண், சவுட்டு மண், fuller's earth.

ஒரு முலைப் பால், கலப்பில்லாத ஒரே பெண்ணின் முலைப்பால், the unadulterated breast milk of a woman; 2. ஒரு முலையின் பால், the milk secreted in or drawn from one of the breasts of a woman.

ஒரு முலை மாதர், ஆதொண்டை, which see; 2. ஒரே முலையுடைய பெண், women having only one breast.

ஒரு முறை, ஒருதடவை, only once.

ஒரு முறைக் காய்ச்சல், ஒரு நாளைக்கு ஒரே தடவை வருங் காய்ச்சல், attack of fever once in a day, 2. ஒரு தடவை காய்ந்து பிறகு நின்று போகுங் காய்ச்சல், only one attack of fever which never appears afterwards; 3. ஒரே தடவை காய வைத்தல், drying only once; 4. ஒரே தடவை அடுப்பு மேலேற்றிக் காய்ச்சுதல், boiling only once or at a stretch, as in the preparation of decoction or medicated oils.

ஒரு முறைக் கொள்ளல், ஒரு வேளை உள்ளுக்குச் சாப்பிடல், taking only once in a day as of medicines; 2. ஒரே தடவையாய் மருந்து கொள்ளல், medicine taken in only one course.

ஒரு மூட்டான, ஒரு மூட்டைப் பற்றிய, pertaining to a single joint — Monarticular.

ஒரு மூட்டு வாதம், ஒரே எலும்புப் பொருத்திற் காணும் வாத நோய், inflammation of a single joint — Monarthritis.

ஒரு மூலிகைக் குரு, பற்பங்களாக வேண்டியுப யோகிக்கும் ஒரு மருந்து, one and the same quintessence used to facilitate the calcination in the preparation of different kinds of medicines.

ஒருமை, ஓர் மரம், an unknown tree; 2. ஒரு பிறப்பு, one birth; 3. ஒரு தன்மை, which see.

ஒரு வந்தம், ஏகாந்தம், solitude; 2. ஒற்றுமை, the concentration of mind on the powers of the soul.

ஒரு வருடக் காடி, ஒரு வருடம் வரை வைத்துத் தயாரித்த புளித்த தண்ணீர் அல்லது காடி; vinegar or sour liquid kept or preserved for one year for purposes of fermentation, c.f. ஆறு மாதக் காடி.

ஒருவா யுணவு, கவளம், a morsel of food.

ஒரு வாய் கொள்ளல், ஒரு தடவை வாய் கொள்ளு மளவு உட்கொள்ளல், taking one mouthful.

ஒரு விதை வாதம், வாயு கோளாறினால் பிடுக்கில் ஒரு விதை வீங்கி வலி கொள்ளும் வாதம், inflammation of one of the testicles, attended with pain and swelling, due to the deranged condition of Vayu.

ஒருவு, ஆடு, sheep, see ஒரு.

ஒருவேளை, ஒரு முறை, once either in the morning or in the evening; once in a day.

ஒரு வேளை மருந்து, ஒரு தரம் உட்கொள்ளு மருந்து, the quantity of medicine given or prescribed to be taken at one time; a dose.

ஒருவை, ஆடு, sheep 2. ஓர் பூடு, a kind of shrub or plant. c.f. ஒருமை.

ஒரே குறி காட்டல், நோயாளியிடம் ஒரே குறி காணப்படுதல், exhibition of a single symptom by a patient.

ஒரே தண்ணீராய்க் காய்ச்சல், குளிர்ந்த நீரைக் கலக்காதபடிப் பொறுக்கும் படியான சூடுள்ளதாய்க் காய்ச்சல், heating but once sufficiently so as not be to add cold water to it again to lessen its heat.

ஒரோ வொன்று, ஒவ்வொன்று every one of any number consistent separately.

ஒலரி, ஓர் வகைச் சிறு ஆற்று மீன், a small river-fish.

ஒலாத்த கண்டன், ஒணான் see. உலாத்த கண்டன்.

ஒலி, காற்று, wind; 2. கொடு வேலி, lead-wort — Plumbago Zeylanica; 3. கோஷ்டம், Arabian costum — Costus speciosus; 4. இடி thunder.

ஒலிகம், கொடு வேலி, see ஒலி.

ஒலி கவி பத்திரி, *மாசி பத்திரி*, indian worm wood — Artemisia vulgaris.

ஒலி காரம், படிகாரம், slum— Alumen.

ஒலிக் கல்லு, பல் tooth. It is so called because it helps in the pronounciation of words or in the uttering of sounds.

ஒலிக் கால், உதானன் வாயு, see உதானன்.

ஒலித்தல், *மிகக் காய்தல்*, drying to excess; 2. ஓசை யிடுதல், sounding.

ஒலியல், நெருப்பு, fire; 2. ஆறு, river; 3. தோல், skin.

ஒலி யறி குழல், நெஞ்சறி கருவி, an instrument by which the cardiac sounds are heard — Stethoscope.

ஒலிவு, ஓர் வகை மேனாட்டு மரம், European olive — olica Europaea.

NOTE: The term is a misnomer or a corrupt pronounciation of the word 'olive'

ஒலிவை, see ஒலிவு.

ஒல்கல், குழைதல், growing weak; 2. தளர்தல், becoming reduced; 3. துவளல், drooping under sorrow; shaking from weakness; 4. ஒடுங்கல், which see 5. குறைதல், decreasing; 6. ஒடுங்கல், contracting as in an elastic substance.

ஒல்குதல், பலவீனத்தால் ஒடுங்கல், trembling through weakness; 2. தளர்தல், growing weak.

ஒல்லி, மெலிந்தவன், one who is weak; a slender person; 2. ஒடுங்கினவன், a thin emaciated person; 3. வெறிதாய்ப் போன தேங்காய் அதாவது குரும்பை, empty cocoanut.

ஒல்லிக் கொடி, பெருங்காசா tree bilberry — Memecylon amplexicaule.

ஒல்லிட்டை, ஒல்லியானவன், a slender or thin person; See ஒஞ்சட்டை.

ஒல்லித் தேங்காய், உள்ளீடு இல்லாத தேங்காய், அதாவது குரும்பை, coconut without a kernel inside; empty coconut.

ஒல்லிநாடி, ஒற்றை நாடி, thin or slender habit of the body — lank.

ஒல்லி மேய்தல், தேங்காய்க்குள் சதைப் பற்று ஆங்காங்கு இல்லாமற் போதல், scattered or uneven growth of kernel in a cocoanut.

ஒல்லை, சிறு பொழுது, short space of time; 2. கால விரைவு, swiftness of time — Velocity.

ஒவ்வா, ஒவ்வாத, பொருந்தாத அல்லது தகாத, disagreeable; incompatible.

ஒவ்வாச் சுரம், ஆரம்பத்தில் இடம், நீர் முதலியவை உடம்பிற்குப் பொருந்தாத காரணத்தா லேற்படும் காய்ச்சல், fever affecting an unacclimated person at the beginning.

ஒவ்வாப் பண்டம், உடம்பிற் கொத்துக் கொள்ளாத வுணவுப் பண்டம், unsuitable article of food.

ஒவ்வாமை, உடம்பிற் கொத்துக் கொள்ளாத தன்மை, unsuitability to the constitution; . பொருந்தாமை, deposition or temper entirely out of harmony — Incompatability.

ஒவ்வாவுணவு, உடம்பிற் கேற்றுக் கொள்ளாத வுணவு, unsuitable article of fare.

ஒவ்வுறல், பொருத்த முறல், becoming suitable or agreeable.

ஒவ்வொன்று, வகைக் கொன்று, one of each kind or species; 2. தனித்தனி, one by one.

ஒழக்கு, இரண்டு ஆழாக்குக் கொண்ட அளவு, liquid measure of two ollocks = 25 cublic inches; 2. காற்படி $^1/_4$ measure.

ஒழ மண், see உழ மண்.

ஓணான் தலை, ஓணானைப் போல் சதா ஆடிக் கொண்டிருக்கும் தலை, head always shaking like that of a blood- sucker.

ஓணான் லேகியம், வீரிய விர்த்திக்காக வேண்டி ஓணானினின்று தயாரிக்கும் ஓர் வகை லேகியம், an electurary prepared out of the blood sucker with other ingredients, and prescribed for promoting the sexual power.

ஓதகக் காலி, எருமைக் கனைச்சான், which see.

ஓதக் காரன், அண்டவாத முடையோன், a person suffering from hydrocele or hernia; 2. அண்டம் பருத்தவன், one having a large scrotum.

ஓதக்காலி, see ஓதகக் காலி; 2. யானைக் காலையுடைய பெண் a woman with elephantiasis of the leg.

ஓதக் கால், யானைக் கால், elephantiasis of the leg; 2. பருத்தக் கால், a large leg.

ஓதக்குடலண்டம், குடலண்ட விருத்தியில் நீர் தங்கி அதனா லேற்படும் ஓதம், distension of the hernia with a fluid — Hernial hydrocele.

ஓதப் பிடுக்கு, பிடுக்கி னுள்ளே வாத நீர் பெருகிப் பருத்துக் காணுமோர் வகை அண்ட வாதம, collection of fluid through deranged 'Vatha' especially in the scrotum — Gydrocele (Scrotal); 2. விதை யினருகே யுள்ள தசைப் பாகங்களில் வாத நீர் தங்கிப் பருத்துக் காணுமோர் வாத நோய், a collection of fluid diffused in the loose connective tissue of the spermatic cord — Diffused hydrocele; see நீரண்டம்; 3. வாதத்தினால் நிண நீர்த் தாரை தடைப்பட்டுப் பிடுக்கின் சதைப் பாகங்கள் தடித்துக் காணு மோர் அண்ட வாதம் a disease of the scrotum characterised by inflammation and obstruction to the lymphatics and the morbid enlargement or growth of the skin — Elephantiasis scroti. See வளிப் பிடுக்கு.

ஓத மிறங்கல், பீசத்திற்குள் வாத நீர் சேருதல், a circumscribed collection of lymphatic fluid in the scrotum.

ஓதம், நீர் அண்ட வாதம், scrotol hydrocele; 2. அண்ட வீக்கம், a general swelling of the scrotum through any cause; 3. விதை வாயு, inflammation of the testis — Orchitis; 4. தசை யண்டம், abnormal growth or thickning of the skin of the scrutom; 5. கடல், sea; 6. ஈரம், moisture.

ஓதல், மந்திரஞ் செபித்தல், to chant mantrams or incantations; to spell.

ஓதளம், see ஓதளை.

ஓதளை, ஓதளை மரத்தி னின்று எடுக்கும் காசுக் கட்டி, black catechu or medicinal catechu — Acacia catechu (typica); 2. தணக்கு, see ஓதள்.

ஓதளை, (ஓதம் + அளை, moisture + to preserve) ஓர் மரம். இது 30 — 40 அடி உயரம், பட்டை கபில நிறம், காய் மெல்லியதாயும், தட்டையாயும், அதனுள் 4 — 8 விதையுள்ள தாயு மிருக்கும். பூச் சிறியது. வெள்ளை அல்லது வெளிர் மஞ்சள் நிறம், இது காசுக் கட்டியைப் போன்றது. இதன் நீர்த் திரவம் கரிய துவர்ப்புள்ள வஸ்து.

இமமரத்தினின்று வெளிர் மஞ்சளான பிசின் வடியும். இத் துவர்ப்பு வஸ்துவாகிய ஓதளையும் வெள்ளைப் போளமுங் கலந்து, பிரசவித்த பெண்களுக்குப் பல-முண்டாகும் படிக்கும், பால் சுரக்கவும் கொடுப்பதுண்டு. இது மிக்கத் துவர்ப்புக் குணம் வாய்ந்தது. இம் மரம் மலையாளத்தில் தருசு நிலங்களில் மிகுதியாக விளையும். Black acacia — Acacia catechu alias A. polyacantha; 30 — 40 ft. high; bark. dark brown; legumes thin and flat; 4 to 8 seeded; flowers small and white or pale yellow. It is closely allied tc Acacia sundra. The watery exctract is the black cutch. The tree also yields as pale yellow gum. A mixture of cutch and myrrh is given to women after confinement as a tonic and also to promote the secretion of milk. It is a powerful astringent. It is chiefly found in Malabar in dry soils.

ஓதள், தணக்கு, elephant rope-tree — Sterculia villosa.

ஓதனம், சோறு, boild rice; **2. உணவு,** food in general.

ஓதி, ஒத்தி, a kind of lizard; **2. பூனை** cat; **3. ஞானம்,** wisdom; spiritual perception; **4. பெண் மயிர்,** women's hair; **5. மலை,** moutain; **6. பச் சோந்தி,** green lizard — Chameleon.

ஓதிமம், அன்னம், swan; **2. மலை,** mountain; **3. குன்று,** hill; **4. கவரி மான்,** yak — Bos grunniens; **5. புளிய மரம்,** tamarind - tree — Tamarindus indicus.

ஓதிமன் விழி, எட்டு eight.

ஓது, பூனை, cat.

ஓதுதல், see **ஓதல்.**

ஓதை, மலை mountain; **2. ஒலி,** sound; **பேரொலி,** uproar.

ஓதை வனிதம், நீலத் தாமரை, blue water - lily — Nymphae stellata.

ஓத்தி, (ஒத்து + இ that which prays) **ஓந்தி, ஓணான்** lizard or bloodsucker. It is so called from the motion of its head up and down as if in the act of prayer.

ஓத்திரம், வெள்ளி லோத்திரம், the bark of a tree — Simplocos racemosa.

ஓநாய், see **ஓனாய்.**

ஓநாய்ப் போலாதல், இளைத்தல், to get emaciated.

ஓந்தி, ஓணான் வகை, a common term for lizards embracing different varieties — Agamoides; **2. பச்சோந்தி,** chameleon — Chamaeleo vulgaris; **3. ஓணான்** blood sucker — Calotes versicolour.

ஓம காஞ்சனம், சிறு நாகப்பூ, Ceylon iron wood — Mesua ferrea.

ஓம கெர்ப்பம், நந்தியா வட்டம், eye-flower — Tabernaemontana coronaria.

ஓமக்கினி, ஓமம் விதை, ajwan seed — Carum copticum.

ஓமங் கலந்த பசு, ஆடு, sheep.

ஓம சாந்தி, ஓமம் வளர்த்துச் சாந்தி செய்தல், mitigating the evil effects of Karma prevailing upon a man, with the aid of ceremonial fire - offerings.

NOTE: This is generally the method adopted by Aryans for ceremonial purification, but the same is effected by the Dravidians by means of **கழிப்பு,** which see.

ஓமச் சூரணம், ஓமத் தோடு மருந்துச் சரக்குகளுஞ் சேர்த்துத் தயாரித்த வோர் வகைச் சூரணம், a medicinal powder composed of Bishop-weed and other bazaar drugs as ingredients.

ஓமத் தண்ணீர், ஓமம் ஊறற் கஷாயம், infusion of omum seeds.

ஓமத் திரவச் சத்து, ஓமத் தண்ணீரின் சத்து, liquid extract of omum (Ajwan).

ஓமத் திராவகம், ஓமத்தினின்று வாலையிலிறக்கிய தீ நீர். இது வாயுவைப் போக்கு மருந்து. இத் திராவகம் குழந்தைகளுக்கும் மற்றும் பெரியவர்களுக்கும் அசீரணத்தைப் போக்க வுபயோகமாகும். இது கடைகளில் விற்கப்படும். இது குடிவெறி மயக்கம், இருதய ரோகம் முதலியவைகளை நீக்கும். வெகுட்டலான மருந்தின் வாசனையைப் போக்கவும், வயிற்றைப் பிரட்டிக் குமட்டலை யுண்டாக்காதபடிக்கும் இதை உபயோகிப்பதுண்டு. omum water or water distilied from the omum seeds — Aqua ptychotis. It is a valuable carminative, both for adults and for children and is employed with advantage in cases of alcoholic intoxication, giddiness, heart disease,

etc. It is useful in disguising the taste of nauseous drugs and in obviating their tendency to cause griping.

ஓமத் தீ நீர், see **ஓமத் திராவம்.**

ஓமத் துவயம், see **ஓமம், 2. குரோசாணி ஓமம்,** omum or omum imported from Khurasan — Hyoscyamus niger.

ஓமத் தைலம், ஓமத்தினின்று காய்ச்சி வடிக்கும் எண்ணெய், இது நாக்கிற்கு விருவிருப்பாயிருக்கும். the oil obtained by distilation from the omum seeds — Oleum ptychotis. It has an acrid burning taste.

NOTE: It is a crystalling essential oil, smelling, like carbolic oil and substituted for pepper-mint, caraway oil and aniseed oil.

ஓமப் பால், ஓமத்தை இடித்துப் பிழிந்த ரசம், the juice obtained by grinding the seeds of omum soaked in water.

ஓமப் பொடி, திரு நீறு, holy ashes, obtained from the sacrificial fire; **2. தின் பண்ட வகை,** confectionery; **3. ஓமத் தூள்,** omum powder.

ஓமப் பொட்டு, ஓமத்தின் மேற் தோல், the outer coverin or layer of omum seeds.

ஓமம், அசமதாகத்தைப் போதை போன்ற வோர் காரமான சரக்கு, இதற்குப் பிரம தர்ப்பை, அக்கினி வர்த்தனம், தீப்பியகம், உக்கிர கந்தம் முதலான பல பெயர்களுண்டு. இது மலச் சிக்கலைப் போக்கக் கூடியதால் இது யுனானியில் 'தாலிபுல் கப்ஸ்' என வழங்கும். இச் செடியின் பூக்கள் வெண்மை, விதைகள், சிறிது காரமாயும், வாசனையாயுமிருக்கும். இவ்விதையைக் குன்மம், அசீரண பேதி, முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். நமது நாட்டு வைத்தியர்கள் இதை வயிற்றுக் கோளாறுகளுக்கும், இருதய நோய்களுக்கும் கொடுப்பார்கள். உடம்பிற்குச் சூட்டை யுண்டாக்கும். ஆகையால் இதை ஒத்தடம் கொடுக்கவும், வாந்தி பேதிக்கும் உபயோகப்படுத்தலாம். அருவருப்புள்ள சரக்குகளின் வாசனையை மாற்றுவதற்கும், குமட்டலைத் தடுப்பதற்குமுபயோகப்பதுண்டு. கடுகு, பெருங்காயம், நில வேம்பு முதலியவைகளுக் குண்டான குணங்கள் இவ்வோமத்திற்கு உண்டு. இதன் கஷாயம் வாய்

கொப்பளிக்கவு முதவும், இது அடியிற் கண்டபடிப் பல வகைப்படும்.

Omum plant — Carum Copticum or Sison ammi. It is called by several names — Brahma's coosham, Indian dil, Sision cordial plant, Ethiopian cumin, etc. In Arabic, it is termed "tali bul kubs" from it cure from costiveness. The flower of this plant are white and the seeds are small, warm and aromatic.

The seeds are medicinally stimulant, and antispasmodic, and are useful in atonic dyspepsia and diarrhoea. . Veidyans prescribe it in cases of indigestion and for heart disease.

It lends warmth to the system and as such as used in fomentation. It forms an ingrediant in some medicines prescribed for cholera. It is useful in disguising the taste of nauseous drugs and obviating their tendency to cause griping.

The seeds have also the properties of mustard, asafoetida, and ground-neem. The decoction of the seed is used as a gargle.

The following are the different varieties:

1. **ஓமம்,** Indian dill seed — Carum copticum or Sison ammi.
2. **அசமதாகம்,** ajmood ajwaun — Sarum roxburghianum or Pimpanella involucrata.
3. **குராசாணி யோமம்,** Persian ajwarn — Hyoscyamus niger alias H.Agrostis.
4. **சோரி யோமம்,** another variety.

NOTE: Nos.1 & 2 although different they are synonymously used without distinction. No.2 is a distinctive South Indian species. No.2 is the one exported from horasan. The plant is a powerful narcotic and its capsules, leaves and seeds are used extensively in medicine and they produce effects similar to opium. It dilates the pupil in diseases of the eys. Another species Muticus or mountain hemp is sometimes used in smoking. Sesseli indicum or Indian meadow saxifrage is also known by this name and the seeds of this are used as medicine for cattle.

ஓமம், அப்பிரகம், mica — Talcum; 2. தாளகம், orpiment — Auri pigmentum; 3. சத்திசாரம், a prepared salt with a burning and acrid taste; 4. நெய், ghee; 5. அசமதாகம், Indian dull.

ஓமயம், முட்டை, egg.

ஓம வெண்ணெய், ஓமத்தினின்று வடித்த வெண்ணெய், இது ஆவியாய்ப் போகுந் தன்மையதும், வாசனை பொருந்தியது மானது; வாயுவைப் போக்கும் குணமும் வாய்ந்தது. the oil of Ajwaun or omum — Oleum ptychotis. It is a volatile oil, which is aromatic and also a carminative. See ஓமத் தைலம்.

ஓம லேகியம், ஓமத்தோடு கடைச் சரக்குகளைச் சேர்த்துக் கிண்டி யெடுத்த வோர் வகை லேகியம், an electuary in which the omum forms the chief ingredient with some other bazaar drugs mixed with its.

ஓம வல்லி, மூட்டை நாறிச் செடி, country borage.

ஓம வுப்பு, ஓமத்தி னுப்பு, salt extracted from omum.

ஓமாக்கினி, ஓமத் தீ fire in which omum is burnt.

ஓமாதி, பல் tooth.

ஓமாலிகை, முழுகுவதற் குரிய நன் னீரிலே இடப்படும் முப்பத்திரண்டு சுகந்தப் பொருள்கள், thirty-two aromatic drugs steeped in water intended for bathing or drinking, perfumed water.

ஓமான், ஒந்தி, which see.

ஓமி, நெருப்பு, fire; 2. நெய், ghee; 3. நீர் water.

ஓமை, மாமரம், mango tree — Mangifera indica; 2. இலுப்பை, which see; 3. உகா which see.

ஓமைக் கொட்டை, மாங்கொட்டை, mango-seed or its shell.

ஓம், பிரணவம், இது அ + உ + ம் என மூன்றெழுத்துச் சேர்ந்தது. இதில் அ என்பது சிவனையும், உ என்பது சக்தியையும், ம் என்பது சிவசக்தியையும் குறிக்கும். இச் சிவசக்தி சொரூபமே வரிவடிவில்—

1. 'ஓ' எனவும் பிள்ளையார் சுழியாகிய 'உ' எனவும்,

2. வழிபடுங் குறியாக நிறுத்தப் படுங்கால், 'சிவலிங்கம்' எனவும்,

3. ஒலியெழுத்தாகச் சொல்லப்படுங்கால் 'ஓங்காரம், பிரணவம்' என்றும்

தொன்று தொட்டு ஆன்றோரால் வழங்கப்பட்டு வருகின்றது. இவ் வுண்மையைத் தெரிந்து கொள்ளற் பொருட்டே திருமூல நாயனார் திருமந்திரத்தில்,

"ஓமெனு ஓங்காரத் துள்ளே ஒரு மொழி
ஓமெனு ஓங்காரத் துள்ளே உருவரும்
ஓமெனு ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனு ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே"

என்று அருளிச் செய்தார். மாண்டூக்கிய உபநிடதமும், 'இது அழியாப் பொருள், இதுவே எல்லாம்' எனக் கூறும். கடவல்லிய வுபநிடதமும் இவ்வாறே கூறும். அன்றியும், இது திருமூர்த்தியையுங் குறிக்கும் சொல் எனவும் கொள்ளப்படும்.

இது தியானத்திற் கேற்றது. ஆகவே இதைச் செபிப்பதனால் அனேகம் சித்திகள் வாய்க்கும். உடம்பினுள் செய லற்றுக் கிடக்கும் சக்திகளையும் எழுப்பும், a symbol representing the union of the three in one. It is a mono-syllabic letter with the combination of three sounds viz. A + U + M in which A, represent Siva, U, Sakthi and M, Sivasakthi. This form, of Sivasakhti is represented—

1. in writing by the sacred letter ஓ and by a உ known as Pillayar suzhi.

2. in worship, as Siva lingham.

3. in pronounciation as 'Om'.

The principle is held from time immeorial by our ancestors and the truth of this is well - explained by the Great Saint Thirumoolar in his verse as mentioned above. Thus, Om represents the whole phenomena of sound- producing and as such, it is the matrix of all the various sounds. Around this 'Om' are centred all the different religions ideas in India and so, it has become the one symbol for the religious aspirations of the vast majority of human beings. Mandookya Upanishad also assers that 'om' is indestructible and eternal and is everything in the Universe and the same is re-affirmed in Gadavalya Upanishad.

It is also said to refer to the Indian Triad or Trinity, thus expressing the union of three gods in one God

head. It plays an important wart in mediation. A constant repetition of this sacred letter leads to the attainment of miraculous powers. It is said to rouse the latent powers in man.

NOTE: Om is an antiquated form of ayam which means that one or He. Originally it meant the combination or a set of three letters forming a unity and to a Unity in an unmanifested condition. The three letters are therefore the sounds of creative Wisdom which called into existense the whole manifested Universe.

NOTE 2: This tri-literal aum or om is a primitive mantram having extraordinary power in gayatri. The vibrations set up by the repetition of this letter are so powerful that if persisted in, they would bring down even the largest buildings to the ground.

NOTE 3: It begins and ends all the mantras of worship with. It transforms every atom in one's body, setting up new vibrations and conditions and awakening the sleeping forces in the body. This is called the purification from an occult stand point.

NOTE 4: Om is of the Hindus just as jehova is of the Jews, Allah of *the Muhamadans, Amen of the Christian* sand so on. I signifies god in his every aspect and it should be pronounced in such a manner that the final 'm' is made to sound like 'hum' or vibrate in the throat like the humming of the bee and hence its name **உட்கீதம்.**

ஓம்பல், *பாதுகாத்தல்,* taking care of protecting; **2. *வெளுத்த பிசின்,*** white gum.

ஓம்பூலக் கன்னி, வெற்றிலை, betel leaf.

ஓயா மீலம், *நில ஆவாரை,* Tinnevelly senna — Cassia angustifolia.

ஓய்ச்சல், *தளர்ச்சி (கைகா லோய்ச்சல்)* becoming tired, as in the limbs of the body. — Debility.

ஓய்தல், *தளர்தல்,* becoming weak or tired, as in limbs of the body **2. *இளைப்பாறல்,*** to rest.

ஓய்ந்திருத்தல், *ஆறியிருத்தல்,* to be quite or still; **2. *வேலையொழிந் திருத்தல்,*** to cease from action or work of any kind.

ஓய்வு, *சாதல்,* dying; ceasing to exist; **2. *தளர்வு,*** becoming weak; **3. *முடிதல்,*** termination, ending.

ஓரக் கண், *சாய்ந்த பார்வை,* deviation of one of the eyes from its proper direction, so that the visual axes cannot both be directed simultaneously at the same objective point; squint-eyed — Strabismus.

ஓரக் கண்ணன், *சாய்ந்த பார்வை யுடையோன்,* one who is looking obliquely, a squint eyed man.

ஓரடி வாலி, *பெருங் குறிஞ்சா,* scammony swallow wort — Secamone emetica.

ஓரட்டாங் கை, *இடக்கை,* left had with is used with more dexterity than the right. See **ஓரட்டுக் கை.**

ஓரண்டம், *ஆமணக்கு,* which see.

ஓரண்ட வாதம், *பிடுக்கின் ஒரு விதையில் வாத நீர் தங்கிப் பருத்துக் காணுமோர் நோய்,* single hydrocele affecting one of the seeds in the scrotum.

ஓரண்ட வித்து, *கொட்டை முத்து,* castor seed — ricinus communis; **2. *பிடுக்கிலுள்ள ஓர் விதை,*** one of the testis in the scrotum.

ஓரம், *சத்தி சுரம்,* a prepared burning and acrid salt; **2. *காரசாரம்,*** acid and alkali; **3. *பெண் குறி,*** the genital of a female — Pundenda muliebres.

ஓரரைக் கண், see ஓரக்கண்.

ஓர வுப்பு, *சத்தியுப்பு,* a kind of prepared salt.

ஓரளாயிந்தம், *இலுப்பை,* which see.

ஓரறி வுயிர், *பரிச வுணர்ச்சி யொன்றினையே யுடைய புல், மரம் முதலியனவாம்,* living organisms, like plant etc., supposed to have only the sense of touch.

ஓரா, *ஓர் வகைக் கடல் மீன்,* a kind of seafish — Tenthis cancelenata; **2. *முள்ளு பலாச்சி மீன்,*** a grey fish — Diaden hystrix.

NOTE: It consists of different varities of various colours such as grey, brown etc and named Tenthis vermiculata. T. Java and T. oramin alias oliva cesus.

ஓராண்டு மூலி, சித்தர்க ஞண்ணு மூலிகை, இதைச் சாப்பிடுவதால் ஒரு வருஷம் வரையில் பசியெடுக்காதெனக் கொள்ளப்படும், a drug taken by siddhars to keep them off from hunger for about a year.

NOTE: This is a rare drug unknown in the present day, and usually taken by Yogis so as not to be disturbed from hunger during their meditation in Yoga practice. Another drug called இருபதாண்டு மூலிகை, is said to keep off one from hunger for about 20 years or so.

ஓராத்து வேலை, பெருந் தும்மட்டி, bitter gourd — Cucumis colocynthis.

ஓரி, ஆணரி, *(ஆண் + நரி)* ale jackal; **2.** *ஆண் மயிர்,* the hair of a male i.e. of a man; **3.** *ஆண் முசு,* the male of a species of red monkey; **4.** *கிழ நரி,* (old jackal) **5.** *புற மயிர்,* hair on the body; **6.** விலங்கேற்றின் பொது, male of beasts in general; **7.** நீல நிறம், blue colour; **8.** ஓர் வகைக் குதிரை, a kind of horse; **7.** நீல நிறம், blue colour; **8.** ஓர் வகைக் குதிரை, a kind of horse; **9.** கருடன், hawk or Brahminy kite; **10.** *சகோதரர்* களில்லாது தனிமையாய்ப் பிறந்த பெண் அல்லது ஆண், one (a male or a female) without brothers or sisters.

ஓரிட்சு, கரும்பு, sugar-cane — Saccharum officinarum.

ஓரி தலம், சவுட்டு மண், fuller's earth.

ஓரிதழ்க் கல், ஓர் வகைக் கல், (lit) one-petalled stone probably a mineral stone (unidentified).

ஓரிதழ்க் கல் சன்னம், ஓர் வகைக் கல் பொடி, minute particles of a stone of the above variety.

ஓரிதழ்த் தாமரை, இது ஓர் சிறிய பூண்டு, இதில் அனேகமாய்த் தண்டிராது, இலைகள் மாறி மாறி இருக்கும். பூ ஒற்றை, ரோஜாப் பூநிறம், வெகு சிறியது. இது சதா பூர்த்துக் கொண்டே யிருக்கும். இது பள்ளத் தாக்குகளில் ஈரமான இடங்களில் முளைக்கும். வேர் சிறியது, மஞ்சளாயிருக்கும். 3 — 4 அங்குல நீளம், இதற்கு மிருதுத் தன்மை உண்டு, குளிர்ச்சி, வலி வுண்டாக்கல், நீர் பிரித்தல், முதலிய குணங்களும் வாய்ந்தது. இதன் இலைச்சாறு மருந்திற்கு மிக்க வுபயோகப்படும். இது தலைக்கு

மிக்க வுபயோகப்படும். இது தலைக்கு மிக்கக் குளிர்ச்சியைத் தரும். வேர் நீரை வடிக்கும். இலையும் தண்டும் கஷாயத்திற்கும், மூத்திர நோய், மூலம், நீர்ச் சுருக்கு இவைகளை நீக்கும், சுக்கிலத்தையும் அழகையு முண்டாக்கும்; மேகம், கிரகணி இவைகளையும் நீக்கும், இப் பூண்டை அரைத்துப் பூச மோரில் கலந்து கொடுக்கப்பாலில்லாது மாதருக்குப் பால் சுரக்கும், one petal lotus. (lotus with lateral petals appearing as one) monopetalous flower — Ionidium suffruticosum.

It is a pernnial plant; stem scarcely any; leaves alternate; one-flowered; shorter than leaves; flowering nearly all through the year; grows abundantly in low and damp places. The plant is sold in bazaars; roots are yellowish-white; 3— 4 inches long.

The whole plant is medicinally demulcent, refrigerant, tonic and diuretic. Veidyans use the whole plant in decoction and electuary. Mixed with oil it is used in preparing cooling liniment for the head; the root in infusion is diuretic. It is also used beneficially in cases or rheumatism, urinary complaints, piles etc. It increases beauty and develops the secretion of semen. It is also useful in veneral disorders and chronic dysentery; the plant if pulverised and given to women mixed in milk, promotes the secretion of milk.

ஓரிதழ் மூலம், ஓரிதழ்த் தாமரையின் வேர், see ஓரிதழ் தாமரை.

ஓரிதழ் வசனம், see ஓரிதழ் தாமரை.

ஓரிதாமியம், காத் தொட்டி, Ceylon stickly mallow — Pavonia Zeylanica.

ஓரிலை, சிற்றாமல்லி, a plant.

ஓரிலைத் தாமரை, கற்ப வகையி லொன்று, a small plant; one-leaf lotus. It is one of the several drugs used by Siddhars for rejuvenation. c.f. ஓரிதழ்த் தாமரை; **2.** கருப் பிண்டம், foetus.

NOTE: Although this plant is generally considered the same as the one petal louts *(ஓரிதழ்த் தாமரை)* it is very much doubted if it could be so, for the reason that it is treated as a 'kalpa moolikai'

ஓரிலைத் தாமரைக் குளம், சுத்த சலம், pure water; **2.** பனிக்குடம், (fig) the

sac containing the amniotic fluid — Amniotic sac.

ஓரிலைத் துத்தி, ஓர் வகைத் துத்தி, a species of mallow — Lida acuminata.

ஓரீற்றா,

ஓரீற்றுப் பசு, முதற் தடவை கன்று போட்ட பசு, a cow that calved but once.

ஓருப்பு, சத்தியுப்பு, a kind of prepared salt contemplated in Tamil Medical Science. For preparation. see under its proper head.

ஓருள்ளிப் பூடு, ஒரே பல்லுடைய பூடு, a garlic not divided into cloves, but containing only one solid root. See ஒரு தலைப் பூண்டு.

ஓரெரிப்பாய் எடுத்தல், சிந்தூரம், தைலம் முதலியவற்றைத் தயாரிக்குங்கால் ஒரு தடவையாய் எரித்தல், heating uniformly at a stretch, heating continuously without interruption, as in preparing medicines such as medicated oils. Cindurams (red orcides) etc.

ஓரெரிப்பு, ஒரு தடவை யெரித்தல், heating but once.

ஓரெழுத் தீசன், ஈ, fly.

ஓரே தண்ணீராய்க் காய்ச்சல், மறுபடியும் தண்ணீர் விட்டுக் கலக்கா திருக்கும்படிப் போதுமான சூடளவாகக் காய்ச்சுதல், இது சாதாரணமாய் நோயினின் றெழுந்தவர்களைக் குளியலாட்டு முறை, heating water but once sufficiently so that the necessity may not arise to add cold water to it subsequently for bathing or drinking. This is the method usually followed while giving bath to convalascents or patients just recovered from illness.

ஓரை ஐந்து நாழிகைப் பொழுது, a duration of two hours; 2. 2½ நாழிகைப் பொழுது, a period of one hour or 60 minutes; 3. கூகை, owl; 4. சமயம், opportunity.

ஓரொரு தாளி, நெருஞ்சி, small caltrope — Tribulus terrestris.

ஓரோசனி, கடுக்காய், gal-nut — Terminalia chebula.

ஓர் கட் புள், ஒரு கண் பார்வையை யுடைய பறவை, one-eye bird; 2. காகம், crow.

ஓர்க் கண், see ஒற்றைக் கண்.

ஓர்க் கண்ணன், ஒரு கண் பார்வை யுடையவன், a man blind of one eye; 2. சாய்ந்த பார்வை யுடையவன், a squint-eyed man.

ஓர்க் கண் பிராணி, ஒரே கண்ணை யுடைய பிராணி, an animal having but one eye — Monoculous being.

ஓர் கரண்டி, see ஒரு கரண்டி.

ஓர்க் கோலை, ஓர் வாசனைப் பண்டம், அதாவது மீனம்பர், grey amber; i.e. an ash coloured substance used in perfumery — Ambergris.

ஓர்ச்சி, உணர்ச்சி feeling; consciousness.

ஓர்திலிங்கு, கோங்கிலவு, yellow-flowered silk cotton — Cochlospermum Gossypium.

ஓர் நதிக் கிளிஞ்சில், அண்ட வுப்பு, which see.

ஓர்ப் பலம், ஒரு பலம் இடை, one palam in weight; 2. கோங்கு, see ஓர்தி லிங்கு.

ஓர்ப் பிலந்தை, காட்டிலந்தை, wild jujube — Zizyphus rugosa.

ஓர்ப்பு, ஆண் பிள்ளைகளுக் குரிய நான்கு குணங்களி லொன்று அதாவது கருமம் முடிக்குந் துணிவு, one of the four qualities of men viz — determination or perseverence in accomplishing actions the other three qualities being fortitude, firmness and decision.

ஓர் மதுரம், கெந்தக நாற்றம், the smell of sulphur; 2. பிசின், gum; or resin; 3. ஆடு, sheep; 4. மான் deer.

ஓர்மம், மனோதிடம், firmness of mind.

ஓர் மரந் தூங்கி, தேவாங்கு, sloth.

ஓர் மருந்து, அரத்தை, galangal — Alpinia galanga.

ஓர் வாசல், யோனி, vagina.

ஓர் விதைப் பூடு, ஒரே விதையை யுடைய பூடு a plant having but a single seed. lobe — Monochalamydeous.

ஓர் வுப்பு, சத்தி யுப்பு, a kind of prepared salt.

ஓல மிடல், அழுகல், weeping; 2. கத்தல், crying.

ஓலமிடு மரம், சுணங்கன் விருட்சம், a tree which makes a buzzing sound (unidentified).

ஓலம், கடல் sea, ocean. It is so called from its noisy waves; **2. ஒலி** sound; noise; **3. பாம்பு,** snake.

ஓலன், ஓர் வகைக் குழம்புக் கூட்டு, a kind of vegetable preparation, much in vogue in Malabar.

ஓலை, தெங்கு, கமுகு, தாழை, பனை முதலியவற்றின் இலை, the leaf of the cocoanut, the arecanut, the pine-apple, the palmyra and the leaves of the other kinds of palm trees — Cadjan; **2. பனையோலை,** palm - leaf especially that used for scraping or collecting medicines when grinding; **3. பேய் முன்னை,** charcoal tree — Convolvulus speciosous. **4. நறுக்கு,** a piece cut off from a palm leaf, for preserving civit, collyrium etc; **5. ஏடு,** palmyra leaf especially that for writing upon; **6. காதணி,** palmyra leaf worm generally in the lobes of ears by women.

ஓலைக் கணாட்டு, ஓலைத் தளிர், the tender leaf of palm trees.

ஓலைக் கால் நண்டு, ஓர் வகைக் கடல் நண்டு, a kind of sea-crab Neptunus pelagicus.

ஓலைக் கிழித்தல், (lit to tear off one's life's page) **இறக்கச் செய்தல்,** to bring about the death.

ஓலைக் கிளிஞ்சில், ஓலையைப் போல் தட்டையான கிளிஞ்சில் சங்கு, a kind of flat conch resembling a palm-leaf.

ஓலைச் சக்கரம், தாளிப் பனை, talipot — Corypha umbraculifera.

ஓலைச் சிறகு, பாதிப் பனை யோலை, one-half of a palmyra leaf.

ஓலைப் பாம்பு, (ஓலை + பாம்பு, cadjan + snake) Chameleon snake — Tropidonotus stolatus.

ஓலைப் பால், பனங்கள், palmyra toddy.

ஓலைப் பிரண்டை, ஓர் வகைத் தட்டைப் பிரண்டை, a kind of flat adamant creeper of the species of Vitex quadrangularis.

ஓலைப் பூ, தாழம்பூ, fragrant screw - pine — Pandanus odortissimus.

ஓலை மூங்கில், தட்டையான மூங்கில், flat bamboo.

ஓலை வாங்கல், சாதல், to die.

ஓலை வாளை, சாவாளை மீன், இது ஓலையைப் போல நீளமாயும், மெல்லியதாயும், பார்வைக்கு வெண்மையாயும், பளபளப்புமாயு மிருக்கும். a silvery cutlas fish — Trichiurus savala. It is thin, flat and soft, like a palm-leaf and is white and glossy; **2. ஓர் வகை வாளை மீன்,** Cutlas - fish — Trichiurns hanmela.

ஓவல், வருந்தல், suffering.

ஓவாப் பிணி, தீராத நோய், an incurable disease; **2. மாறாத துன்பத்தை யுண்டாக்கும் நோய்,** any disease not subject to variation in giving pain.

ஓவாய், பற்கள் போனவாய், பொக்கு வாய், mouth lacking teeth.

ஓவாய்ப் பல், see **ஒறுவாய்ப் பல்.**

ஓவிய காயம், புலி, tiger, so called from its body appearing as if painted.

ஓற் பலம், see **ஓர் பலம்.**

ஓனாய், சோனாய், wolf — Canis lupmalias C.pallipes.

ஓனாய் மீன், ஓர் கடல் மீன், a fierce and voracious salt-water fish — Wolf-fish.

ஔ

ஔ பாம்பு, snake; **2. பூமி** earth; **கடித்தல்,** biting.

ஔகாசம், சோதிப் புல், a shining grass; grass shining in the dark.

ஔசரம், கோடாங் கல், a mineral stone; **2. இரும்புக் கல்,** iron stone or iron ore.

ஔசாதிகம், மிளகு, pepper — Piper nigrum.

ஔசாலகம், பூவந்தி, soap-nut tree — Sapindus emarginatus.

ஔசீரம், கவரிமான் மயிர், the hair of the yawk; **2. படுக்கை,** bed.

ஔகமாபக வாதம், see அவுகமா பக வாதம்.

ஔடணம், மிளகு ரசம், pepper-water.

ஔடத கந்த சுரம், see அவுடத கந்த சுரம்.

ஔடத கரணம், மருந்துகளைத் தயாரிக்கும் வகையில், மூலிகை அல்லது வேறு சரக்குகளின் போக்கு, the action of herbs or other drugs on the chief ingredients in the preparation of a Pharmacentical product; 2. நோய்களைக் கண்டித்துக் குணப்படுத்தும் வகையில் மருந்துச் சரக்குகளுக்குண்டான போக்கு, the effect of drugs in curing disease; Therapeutic action of drugs in the human system.

ஔடத க்ரண விதி, மருந்துகளைப் பற்றியும், அவைகளின் உபயோகம், செய்யு முறை, கொடுக்கு முறை, இவைகளைப் பற்றியும் கூறும் நூல், an authoritative treatise describing the preparations of the several kinds of medicines, with their uses and the manner of application — Pharmacopoeia.

ஔடத குங்குமம், குங்கும நிறம் போன்ற சிவந்த மருந்து, அதாவது, செந்தூரம், medicine which is red, like the red powder worn by women on the forehead — Red.oxide.

ஔடதக் கிரமம், ஒரு நோய்க்குப் பல மருந்துகளைக் கொள்ளுங் காலத்தில் அனுசரிக்க வேண்டிய வரிசை முறை, the method generally followed or order generally prescribed by Veidyans while using several medicines from time to time for a particular disease.

ஔடதக் கூறு, மூலிகை யல்லது மருந்துச் சரக்குகளின் தன்மை, the nature of drugs or other medicines.

ஔடதச் செயல், மருந்துகளின் தொழில், the action of drugs.

ஔடத டாப்பு, மருந்து நியமம், a medical direction of remedies for a disease and the manner of using them — Prescription.

ஔடத நாமாவளி, மருந்துகளின் பெயர்களையும் அவைகளின் விவரங்களையும் சொல்லும் அட்டவணை, the vocabulary of names or technical terms in medicine.

ஔடத நூல், மூலிகை அல்லது மருந்துச் சரக்குகளைப் பற்றி பொதுவாகக் கூறும் நூல், any treatise on herbs or other drugs.

ஔடதப் பட்டோலை, மருந்தின் கூட்டுமுறை விவரம், a medical prescription containing the details of ingredients of a particular medicine by a formula — Recipe.

ஔடப் பரீட்சை, மூலிகை அல்லது மருந்துச் சரக்குகளின் சோதனை, examination of drugs of other medicines.

ஔடதப் பிரயோகம், மருந்து கொடுத்தல், administration of medicine to a patient.

ஔடதப் போக்கு, பொதுவாக மருந்துகள் உடம்பினுள் தொழிலை நடத்தும் விதம். இது பல வகைகளாகச் கொள்ளப்படும், characteristic actions of drugs in general in the system. It consists of various kinds viz:

1. ஓர் நோய்க்கு மருந்தைப் பிரயோகிக்குங் கால், அது உடம்பி ஊறிக் குணப்படுத்தும் தொழில், the therapeutic action of the remedies employed in the treatment of a particular disease.

2. உடம்பிற்குச் சீதளம், உஷ்ணம், சுறுசுறுப்பு, பசி, தாகம், நித்திரை முதலியவைகளை உண்டாக்கும் தொழில், the physiological action of drugs in giving rise to chillness, heat, stimulation, hunger, thirst, sleep etc.

3. ஆத்தும தத்துவத்தை, எழுப்பிச் சித்திகளை யடையச் செய்யும் தொழில், the psychological action of drugs in relation to soul and the body leading to the attainment of supernatural powers.

4. காய கற்பத்தினால், நரை திரை மாற்றம், யௌவனம், நீண்ட ஆயுள் முதலியவைகளை இயற்றும் தொழில், the biological action of drugs in relation to life-features of human beings.

5. மருந் துட்கொள்ளும் காலையில் பத்தியக் கேட்டினால் உடம்பில் மாறுபாடுகளை யுண்டாக்கும் தொழில், the relex action of drugs inducing several nervous affections in the system.

6. சதை, எலும்பு இவைகளுக்குக் காயம் ஏற்பட்ட காலத்தில் அவைகளை ஒன்று படுத்தும் தொழில், the action of drugs resulting in the union of torn muscles and of fractured bones.

7. உடம்பிற்கு விரணம் கண்ட காலையில், அதனால் வேறு விதக் கெடுதல் ஏற்படா வண்ணம் காக்கும் தொழில், the antiseptic action of drugs in preventing decay or putrefaction of wounded tissues.

8. வசிய முதலிய மருந் திட்டினால் தன்வச மாக்கச் செய்யும் தொழில், the magnetic action of drugs in attracting persons to one's side and making them do things as one desire.

9. தூக்கம், மயக்கம், சித்தப் பிரமை முதலிய குணங்களை யுண்டாக்கும் தொழில், the hypnotic action of drugs inducing sleep, giddiness etc.

10. மூலிகை களுக்குக் காப்புக் கட்டு, உருப் போட்டு, பேய், பில்லி, சூனியம் முதலியவைகளை இயற்றும் தொழில், the magical action of drugs in bringing about devilry, witch craft, sorcery etc.

ஔடத முறிப்பு, மருந்து வேகங்களை முறித்தல், neutralising the action of drugs.

ஔடத முறை, மருந்துகளைத் தயாரிக்கும் விதத்தையும், பிறகு அவைகளைக் கொள்ளும் கிரமத்தையும் பற்றிக் கூறும் விஷயங்கள், particulars regarding the direction for the preparation and administration of a remedy.

ஔடதம், மருந்து, medicines or medicinal preparations in general; 2. ஆற்று மருந்து, a medicament; 3. மூலிகை, a drug or drugs.

ஔடத ரகசியம், மூலிகை அல்லது மருந்துச் சரக்குகள் சாதாரணமாக வைத்தியத்தி லல்லாமல், சோதிஷம், வாதம், மாந்திரீகம், காய கற்பம், கவுன குளிகை, முதலிய வேறு வகையான செயல்களிலும், உபயோகப்படும் விஷயத்தைப் பற்றிய இரகசியங்கள், the secret of the psychological virtues of plants, drugs etc., and their usefulness as such, in many ways such as in Astrology, Alchemy, Magic, Rejuvenation etc.

ஔடத வகுப்பு, மூலிகை அல்லது மருந்துச் சரக்கு முதலியவைகளின் பாகுபாடு. இவைகளில் தாது வர்க்கம், தாவர வர்க்கம், சீவ வர்க்கம் ஆகிய மூன்று வர்க்கங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்ட மருந் தினங்களுக் குரிய செய்கைகளானது, ஒன்றுக் கொன்று வெவ்வேறாகவும், குண குணங்களுக்குத் தக்கவாறு வித்தியாசம் பொருந்திய தாகவும் இருக்கும். ஆகவே, செய்கைகளில் ஒத்திருக்கும் ஔடதங்களெல்லாம் ஒரே வகுப்பில் அடங்கும். இவ்விதமாகப் பிரிக்கப்பட்ட வகுப்புகள் அநேக முண்டு. அவற்றுள் முக்கியமான சில வகுப்புகளை மாத்திரம் அடியிற் கூறப்பட்டுள்ளன. the classification of drugs or other medicines. The various plants and drugs collected from the mineral, the vegetable and the animal kingdoms differ in their therapeutic actions according to the nature and properties inherent in them and so they are grouped under several heads consistent with their actions when employed in diseases. The following are the chief of such classifications:

A. ஆயுர் வேத நூற்படி, According to Ayurveda:

1. அங் காகருஷண நாசகாரி — சன்னி, இசிவு, வலி, முதலிய வாத தோஷங்களைக் கண்டிக்கும் மருந்துகள், those which relieve nervous affections — Antispasmodics viz.

அபினி opium; பெருங்காயம், asafoetida; சடாமாஞ்சி, valerian root; கஞ்சா, ganjah; ஓமம், sison ammi; ஊமத்தை, dhatura; புகையிலை, tobacco; மருக்கொழுந்து, maid's love; நாய்க்கடுகு, dog-mustard; ஆடாதோடை, Malabar

winterchery; புனுகு, civet etc.

2. உதர வாத ஹாரி — வயிற்றிலுள்ள வாயுவைப் போக்கிப் பசி யுண்டாக்கு மருந்துகள், drugs which relieve flatulence and assuage pain — Carminatives viz:

ஓமம், sison ammi; ஏலம், cardamom; கிராம்பு, clove; இலவங்கப்பட்டை, cinnamon bark; சோம்பு; aniseed; சுக்கு, dried ginger; மிளகு, black pepper; திப்பிலி, long pepper; சாதிக் காய், nut-meg; வசம்பு, sweet flag; அரத்தை, galangal; பேய் மருட்டி, Malabar cat-mint; மருக் கொழுந்து, maid's love; வெற்றிலை, betel-leaf; சீரகம், cumin seed; கஸ்தூரி மஞ்சள், round zedoary; பெரிய எலுமிச்சை, large lemon, fruit etc.

3. உஷ்ண காரி — உடம்பில் காங்கையை அதிகப்படுத்து மருந்துகள், drugs of heat - making potency or agents producing stimulation — Stimulants viz.

கஞ்சா, ganjah leaf; சாராய வினங்கள், arrack and other liquors; சடா மாஞ்சில், valerian root; நொச்சி, vitex (Nochi); கற்பூரம், camphor; மிளகு pepper; ஓமம், sison ammi; சுக்கு, dried ginger; திப்பிலி, long-pepper; கடுகு, mustard; குங்குமப் பூ, English saffron; இலவங்கம், clove; இலவங்கப் பூ, clove flower etc.

4. கது நாச காரி — கட்டிகளைக் கரைக்கும் மருந்துகள், agents that promote the dissipation of a pathologic growth — Resolvents viz:

சுக்கு, dried ginger; பெருங் காயம், asafoetida; அமுக்கிராக் கிழங்கு, horse root, இரத்த போளம், redmyrrh; மூசாம்பரம், musambar; சுண்ணாம்பு, lime etc.

5. கபஹரகாரி — கபத்தை வெளிப்படுத்தி இருமலைத் தனிக்கு மருந்துகள், medicines which promote the ejection of phlegm, mucous and other fluids — Expectorants viz:

பெருங்காயம், asafoetida; சாம்பிராணிப் பதங்கம், benzoin (sublimed); விஷ மூங்கில், Asiatic squill or poison bamboo; நாய்ப் பாலை asthmatic swallow-wort; குப்பை மேனி, rubbish plant; கற்பூர வள்ளி, thick-leaved lavender; குங்குலியம், bdellium; மூக்குரட்டை, spreading hogweed; உத்தாமணி, hedge cotton; ஆடா தோடை, malabar winterchery; திருநீற்றுப் பச்சை, holy-ashes leaf; துளசி, holy basil; கண்டங் கத்திரி, prickly night shade; நரி வெங்காயம், fox onion; குக்குலு, myrrh etc.

6. கிருமி நாச காரி — வயிற்றுப் புழுக்களைப் போக்கு மருந்துகள், drugs or other remedies that expel or destroy worms or intestinal anima parasites — Vermifuges or Anthelmintics viz.

மாசி பத்திரி, santonin - wood; மாதுளம் வேர், root of pomegranate; புரசன் விதை, seeds of palaus; பூனைக்காலிச் சுணை, the stinging hairs of cat-footed or cowhage plant; ஆடு தீண்டாப் பாளை, worm-killer; வேப்ப நெய், neem-oil; பப்பளிப் பால், the juice of of papaw fruit; சிறு தேக்கு, small teak; கலியாணப் பூசினி விதை, seeds of grey pumpkin; வெட்பாலை, tellicherry bark; மாம் பருப்பு, the kernel of mango-nut; காட்டுச் சீரகம், wild cumin; பூனைக் காலி, cowhage; கறி யுப்பு, common salt etc.

7. சமன காரி — கடின நோய்களைத் தனிக்கு மருந்துகள், remedies that allay activity and excitement — Sedatives viz.

புகையிலை tobacco; நரபி, aconite; கஞ்சா, ganjah; கோஷ்டம், sweet costus; சந்தனம், sandal wood; அமுக்கிரா, horse-root; கசகசா, poppy seed etc.

8. சீதள காரி — உடம்பி எழற்சியை அடக்கித் தாகத்தைத் தணிக்கும் மருந்துகள், cooling remedies that abate heat and allay thirst — Refrigerants viz.

பொட்டி லுப்பு, nitre; எலுமிச்சம் பழ ரசம், lime juice; புளிப் பினங்கள், sour substances; புளி, tamarind; குளிர்ந்த சலம், cold water; கற்றாழை, aloe; பனை நொங்கு, the pulp of the palmyra fruit; பனங் கள்ளு, palmyra toddy; தென்னங் கள்ளு, cocoanut toddy; இளநீர், water of tender cocoanut; பனங் கடலைப் புளிப்பு, the sour fluid collected from the plant of bengal gram; செம்பருத்திப் பூ, changeable rose; சந்தனப் பூச்சு, smearing of sandal paste etc.

9. சுர ஹர சாரி — காய்ச்சலைப் போக்கு மருந்துகள், remedies that allay fever — Febrifuges vic.

விஷ்ணு கரந்தை, vishnoo plant; ஆடா தோடை, Malabar winter cherry; அக்சரா காரம், pellitory root; சிற்றா முட்டி, ceylon pavonia; மர மஞ்சள், tree turmeric; பற்பாடகம், fever plant; கஸ்தூரி, musk; சிறு தேக்கு, small teak; திப்பிலி மூலம், root of long-pepper; தாளிச பத்திரி, East Indian plum; சித்திர மூலம், lead wort; கோரைக் கிழங்கு, koray root; வல்லாரை, Indian penny wort; பேய்த் தும்பை wild leucas; காசித் தும்பை, Benares leucas; சடைச்சி, mungo; ஆதளை, castor plant; வெள்ளைப் பாஷாணம், white arsenic; சுவேதகாரி, sudorifics; சீதளகாரிகள், refrigerants; வேப்பம் பட்டை, bark of margosa tree etc.

10. சுவேத காரி — வியர்வையை யுண்டாக்கும் அல்லது அதிகப் படுத்து மருந்துகள், medicines that produce or increase perspiration — Sudorifics or Diaphoretics viz —

வல்லாரை, Indian penny-wort; நன்னாரி, sarsaparilla; கோரைக் கிழங்கு, koray root; பற் பாடகம், fever plant; பேய்ப் புடல், devil's gourd; முக்கா வேளை, prickly galega; நில விளா, small-wood apple; விஷ்ணு கரந்தை, vishnoo plant; வெட்டி வேர்; khus khus root; எருக்கன் வேர்ப் பட்டை, bark of madar root; வசம்பு, sweet flag; கர்ப்பூர வள்ளி, country borage or thick-leaved lavender; முருங்கை வேர்; moringa root; துளசி holy basil; சந்தனம், sandal powder பேய் மிரட்டி, rattle wort or Malabar catmint etc.

11. சல வர்த்தன காரி — இரத்தத்தின் நீரை அதிகப் படுத்து மருந்துகள், drugs or medicines that increase the fluidity of blood viz;—

நீர், water; இளநீர் water of tender cocoanut; கஞ்சித் தண்ணீர், rice water etc.

12. சங்கோசன காரி — நரம்பைச் சுருங்கச் செய்து, இரத்தம், சீழ் முதலிய நீரை வறட்டும் மருந்துகள், agents that cause contraction and thereby arrest discharges — Astringents viz:

வில்வப் பழம், holy fruit; சீனக் காரம், alum; காசு கட்டி, Indian catechu; மாசக்காய், Indian gall-nut; மாதுளம் பிஞ்சு, tender fruit of pomegranate; செம் மரம், red wood; துத்தம், white vitriol; புரசன் பிசின், palaus gum; கருவேல், Indian gum arabic tree; ஆவாரை, tanner's cassia; நறுவிலிப்பட்டை, bark of sebesten; விளாங்காய், wood-apple; அழவணம், fragrant nail dye; மாம் பருப்பு, mango-seed kernel; ஒதியன் பட்டை, bark of Indian ash tree; நெல்லிக் காய், வற்றல்; dried goosberry fruit; கொய்யாப் பட்டை, bark of guava tree; நாவற்பட்டை, bark of jamboon tree etc.

13. சினித்த காரி — தாதுக்களின் எரிச்சலைத் தணித்துத் துவளச் செய்யும் மருந்துகள், medicines which allay the irritation of inflammed surfaces and soothe the skin — Demulcents and emolients viz:

விளாம் பிசின், gum of wood-apple tree, துத்தியிலை, leaf of Indian mallow; அதி மதுரம், liquorice; தேன் honey; கஞ்சித் தண்ணீர், rice water; முட்டை, fowl's egg; கற் கண்டு, sugar-candy; எண்ணெயினங்கள், oil and other oleaginous substances; வெண்டை, lady's finger; இஸ்கோல்விரை, spogel seed; கீரை, vegetable green; நிலப்பனை ground palm; நெரிஞ்சில், caltrops; பேதானா, quince seeds etc.

14. சோணகாரி — தோலைச் சிவப்பித்துச் சூடுண்டாக்கும் மருந்துகள், agents that redden the skin and cause inflammation — Rubefacients — viz.

கடுகு mustard; அக்கிரா காரம், pelitory root; மிளகாய், chilly; மிளகு, black pepper; சுக்கு, dried ginger; வெங்காயம், onion; பூண்டு, garlic; முருங்கை வேர், moringa root; சவர்க்காரம், sal ammoniac; நேர்வாளம்; croton seed; முந்திரிக் கொட்டைப் பால், cashew nut fluid; வெற்றிலை, betel leaf; திப்பிலி, long pepper; சதுரக் கள்ளி, square spurge; திருகு கள்ளி, spiral spurge; நாய்க் கடுகு, dog-mustard; காட்டாமணக்கு, physic nut; சித்திர மூலம், lead-wort; சேங் கொட்டை, dhoby's nut; கறியுப்பு, common salt etc.

15. திரவ காரி — வாய் நீர் ஊறும்படிச் செய்யும் மருந்துகள், medicines which promote the flow of saliva — Sialogogues viz:—

தாம்பூலம், betel and areca-nut; சுக்கு, dried ginger; அக்கிரா காரம், pelitory root; மிளகு, black pepper; இலவங்கம், clove; புகையிலை, tobacco; மிளகாய், chilly; முருங்கை வேர்; moringa root; கொடி

வேலி, leadwort; கண்டங் கத்திரி விதை, seeds of prickly night shade; ரசம், mercury etc.

16 தீபன வர்த்தன காரி — பசியை அதிகபபடுத்து மருந்துகள், medicines which promote the functional activity of the stomach and indeco hunger. Stomachics viz.

ஓமம், sison ammi (omum) திப்பிலி, long-pepper; மிளகு, black pepper; நில வேம்பு, ground neem; வில்வம், bael; கிச்சிலி, orange; நாரத்தை, bitter orange etc.

c.f. உதரவாத ஹரி.

17 நித்திரா காரி — வலியைப் போக்கித் தூக்கத்தை யுண்டாக்கும் மருந்துகள், drugs that relieve pain and induce sleep or stupor — Narcotics viz.

அபினி, opium; குரோசாணி ஓமம், khorasan ajwaun or henbane; கஞ்சா, gunjah leaf; ஊமத்தை, dhatura; புகையிலை, tobacco etc.

18 பலகாரி — உடம்புக்கு வலிவை யுண்டாக்கும் மருந்துகள், medicines that invigorate the system and relieve weakness — Tonics viz.

அயம் iron; நில வேம்பு, ground neem; அன்ன பேதி, green vitriol; வேப்பம் பட்டை, margosa bark; செம்மரம், red wood; தாளிச பத்திரி, Himalayan silver fir; கழற்சிப் பருப்பு, kernal of bonduc nut; அமுர்த வல்லி அல்லது சீந்தில், bile killer; வசம்பு, sweet flag; மருக்கொழுந்து, maid's love; வெள்ளறுகு, white doob grass; கண்டு பரங்கி, small teak; மர மஞ்சள், tree turmeric; நாகேசுரம், serpent champauk; வில்வம், bael tree; சால் முகுரா, chaulmoogra etc.

19 பிரசவ காரி — இடுப்பு வலியை அதிகப்படுத்திக் குழந்தையை வெளிப்படுத்தும் மருந்துகள், medicines that induce or facilitate the child-birth — Parturifacientis viz.

புழுத்த அரிசி, worm-eaten rice; கஞ்சா, gunjah plant; வெங்காரம், borax; ஆடு தீண்டாப் பாளை, worm killer, திப்பிலி, long-pepper etc.

20. மூத்திர வர்த்தன காரி — மூத்திரத்தை அதிகப்படுத்தும் மருந்துகள், medicines that promote the secretion of urine — Diureties viz.

திராட்சை யுப்பு, acid tartrate of potash; வெடியுப்பு, nitre; நரி வெங்காயம், fox onion; வெண்காரம், borax; வால் மிளகு, tail pepper; குங்கிலியத் தைலம், oli banum ointment, விஷ மூங்கில், Asiatic poison bulb or poison bamboo; மர எண்ணெய், wood oil; நன்னாரி வேர், sarsaparilla; நாயுருவி, Indian burr; நீர்ப் பிரமி, diabetes plant; வெண்டை, lady's finger; நீர் முள்ளி, water-thorn; முருங்கை வேர், moringa root; கல் பாசி, lichens; யானை நெருஞ்சி, crow thorn; கீழா நெல்லி, niruri; சந்தனத் தைலம், sandal wood oil; கண்டங்கத்திரி, prickly night shade; மணத்தக்காளி, dog-graps; நெருஞ்சி, small caltros; அமுக்கிறா, horse root; சீந்தில், moon creeper etc.

21. விஷ ஹர காரி — உடம்பில், பாஷாணம், விஷ கடி முதலியவைகளால் ஏற்படும் விஷங்களை முறிக்கும் மருந்துகள், remedies for counter acting poisons entered into the system — Antidotes viz.

மஞ்சள், turmeric, குப்பை மேனி, rubbish plant; மிளகு, pepper; அறுகம் புல், doob grass; ஈசுர வேர், Indian birth wort etc.

22. இரத்த ஸ்தம்பன காரி — இரத்த வொழுக்கை நிறுத்தும் மருந்துகள், agents that arrest the flow of blood — Hemostatics 2. இரத்தப் பெருக்கை நிறுத்தும் மருந்துகள், astringents that arrest hemorrhage — Styptics viz.

படிகாரம், alum; துரிசு, blue vitriol; பச்சைத் தண்ணீர், cold water; பனம் பஞ்சு, palmyra cotton (styptic); தென்னம் பஞ்சு, cocanut cotton (styptic) etc.

23. ருது வர்த்தன காரி — பெண்கள் தீட்டைக் கிரமப்படுத்தும் மருந்துகள், medicines which stimulate or favour the menstrual discharge — Emmenagogues viz.

மூஷாம்பரம், aloe juice; பொட்டிலுப்பு, nitre; அருதா, herb grace; வெண் காரம், borax; வெட்டி வேர், khus khus root; ஆடு தீண்டாப் பாளை, worm killer; பப்பளி விதை, papaw seed; சித்திர மூலம், lead wort; எள்ளு, gingelly seed, புழுத்த அரிசி, worm-eaten rice etc.

24. வமன காரி, வாந்தியை யுண்டாக்கும் மருந்துகள், medicines that cause vomiting — Emetics.

துரிசு, blue vitriol; கடுகு, mustard; கறி யுப்பு, common salt; பேயத்தி, devil fig; எருக்கன் வேர்ப் பட்டை, bark of madar root; விஷ மூங்கில், Asiatic poison bulb or poison bamboo; நாய்ப்பாலை, vomitting swallow-wort குப்பை மேனி, rubbish plant; உத்தாமணி, hedge cotton; இலுப்பைப் பிண்ணாக்கு, bassia oil-cake; நரி வெங்காயம், fox onion; நஞ்சறுப்பா னிலைத் தூள், powdered leaf of country ipecacuanha; மூக்குரட்டை, spreading hogweed; அமுக்கிறா, horseroot; நொச்சிலை ரசம், leaf-juice of nochi; புகையிலை, tobacco etc.

25. வியதாபேத காரி — பழைய நோய்களைப் படிப்படியாக இறக்கிக் குணப்படுத்தும் மருந்துகள், medicines that re-establish healthy functions of the system by curing old and chronic diseases by degrees — Alteratives viz:

நன்னாரி வேர், sarasaparilla; சால் முகுரா, chaulmoogra; வல்லாரை, Indian penny wort; யானைக் கற்றாழை, elephant aloe; ஆகாச கெருடன் கிழங்கு, sky root; காவ்ஜபான், kavazaban, (a unani drug), கரிசிலாங் கண்ணி, eclipse plant; நீரடி முத்து நெய், hydrogogue nut oil; பால் வள்ளி, milk creeper; பறங்கிச் சக்கை, foreign wood, etc.

26 விரண சாரி — மேற் சதையைப் புண்ணாக்கும் மருந்துகள், agents producing vesication — Vesicants viz.

துரிசு, blue vitriol; வெள்ளைப் பாஷாணம், white arsenic; கள்ளிப் பால், spurge milk; எருக்கன் பால், madar milk; மர வுப்புக் காரம், potash; சித்திர மூலம், lead-wort சேராங் கொட்டை, dhoby's nut etc.

27. விரேசன காரி — பேதியை யுண்டாக்கு மருந்துகள், மருந்தின் வேகத்தைக் கருதி, இது மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. medicines that cause evacuation from the bowels — Purgatives. They are divided chiefly into three classes according to the severity or otherwise in their actions viz:—

(a) *(சல)* விரேசனி — மலத்தைத் தண்ணீராகக் கலக்கிக் கழிச்சலை யுண்டாக்கும் மருந்துகள், medicines which cause watery purgations — Hydragogues viz இந்துப்பு, rock salt; திராட்ச வுப்பு, acid tartrate of potash; கடுகு ரோகிணி, black hellibore etc.

(b) உபத்திரவ விரேசனி — வயிற்றில் நோவை யுண்டாக்கிப் பேதியாக்குகிற மருந்துகள் — Drastic purgatives viz — நேர்வாளம், croton seed, விளக்கெண்ணெய், castor oil, ஆற்றுத் தும்மட்டிக் காய், colocynth; மூசாம்பரம், mossamber; இரச கற்பூரம், bichloride of mercury; மக்கிப் பால், Indian gamboge; சிவதை வேர், Indian jalap; மாமூதா, scammony etc.

(c) மல விரேசனி அல்லது மல காரி — மலத்தை இளகச் செய்து வெளிப்படுத்தும் மருந்துகள், medicines having the power or quality of lossening or opening the intestines and relieving constipation — Laxatives viz. — சரக் கொன்றைப் புளி, cassia pulp; ஆலு பொகாரா, bokkhara plum; ரோஜாப் பூ, rose flower; புளி, tamarind; சீமை அத்திப் பழம், English fig; தேன், honey; வாதுமையெண்ணெய், almond oil etc.

B. தமிழ் சித்த வைத்திய நூற்களில், வைத்திய விஷயங்கள் மாத்திரம் கூறப்பட வில்லை. ஏனெனின், அத்துடன் சரக்கு வைப்பு முறை, வாத முறை, மாந்திரீக முறை முதலியவைகளையும், யோக, ஞான சாதனப் பழக்கங்களுக்குரிய காயகற்ப விதிகளையும் கலந்தபடி ஆங்காங்கே காயகற்ப விதிகளையும் கலந்தபடி ஆங்காங்கே கூறப்பட்டிருப்பதைச் சாதாரணமாகக் காணலாம். ஆகவே, ஔடத வகுப்புகளாகப் பிரிக்குங் கால் மேற்கண்ட . முற்றகளை அனுசரித்தே கூற வேண்டியிருப்பதால் அவைகளை அடியிற் கண்டபடி ஐந்து வகுப்புகளாகக் கூற லாயிற்று, in Tamil Siddha Medicine the peculiarity is that it does not refer to medicine alone, but it also imcludes several other branches of knowledge such as Pharmacology, Alchemy, Magic, Yoga philosophy containing the rules for rejuvenation etc. and therefore, for purpose of classification of drugs, it is found necessary to have them grouped under five heads as mentioned below:

I. தமிழ் வைத்தியப்படி, according to the Tamil Medicine.

1. இசிவு நொப்பி அல்லது வாத வலி போக்கி - Anti spasmodics viz — கற்பூரப் புல் லெண்ணெய், oil of lemon grass; சாமந்தி, chamomile; தண்ணீர் விட்டான் கிழங்கு, water-root; மூக்கிரட்டை வேர், root of spreading hog-weed; கழற்சிக் காய், bonduc nut; கற்பூரம், camphor; கொத்த மல்லி, coriander seed; குங்குமப் பூ, English saffron; பெருங்காயம், asafoetida டீக்கா மல்லி அல்லது கம்பிப் பிசின், cumbi resin; வேளை விதை, caravella seed; வெற்றிலைக் கஸ்தூரி, musk mallow; சல்லாத்து, garden lettuce; புதினா, mint; புன்னை நெய், oil of pinnay (Alexandrian laurel); தில்லைப்பால் Tiger's milk; ஓணான் நெய், blood-sucker's fat; தேவதாரு, deodar; மலைப் பாலை, mountain paulay; மாசிப் பத்திரி, santonin wood or Indian wormwood; எருக்கிலை, leaf of madar; காட்டுக் கருணைக் கிழங்கு, wild telinga patota; காடிக் காரம், stick caustic; கஸ்தூரி musk; கண்டு பாரங்கி, beetle - killer; குக்குலு, myrrh; கோஷ்டம், arbian, costus; இலவங்கம், clove; வெள்ளுள்ளி, garlic; வெடியுப்பு, nitre; தாளிச பத்திரி, Himalayan silver fir; இலவங்கப் பட்டை, cinnamon bark; வெட்டி வேர், khus khus root; ஆமணக்கு, castor plant; ஓமம், omum (ajwaun); இலைக்கள்ளி, leafy milk hedge; காட்டுப் புகையிலை, wild tobacco; கசகசா opium poppy etc.

English drugs — Alcohol, ammonia, beliadona, chloroform, corium, ether, potassium bromide, sumbul, cherry laurel, cajuput oil, galbanum, hemlock, valerian root lobelia, peppermint, spearmint, ether, spirit of nitrous ether, cochineal insect etc.

